DR. ILLANGO & ASSOCIATES
SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. East, Unit 204 & 303
டாக்டர் எம். இளங்கோ
(416) 292-7004
BRACE FOR A GREAT SMILE
MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
டாக்டர் இ. ஜானகி
(905) 270-7844

SAMY & SONS
1884B Kennedy Rd. (at Ellesmere) Scarborough
• புத்தம் புதிய ஆடை வகைகள்
• சுடிதார் சாறி வகைகள்
• அன்பளிப்புப் பொருட்கள்
• அலங்காரப் பொருட்கள்
• 22 கரட் தங்க நகைகள்
• தூரித பணமாற்றுச் சேவை
• வீடியோ, ஒடியோ, பிரதிமாற்றம்
இன்னும் எழுத்திலடங்காதன
மொன்றியல் சுமித் தொடர்புகளிற்கு
குகன் 514-736-6228
TEL: 416-298-1598 FAX: 416-298-2849

டாக்டர் சண்முகம் சிவநேசன்
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-291-1085
டாக்டர் பகீரதன் (பகி)
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-728-0345
3852 Finch Ave. East, #207, Scarborough, Ont. (Between Birchmount & Kennedy

Neelam Silk
தற்பொழுது இரு இடங்களில்
1453 Gerrard St. East
Toronto
Tel: 416-778-7455
2378 Eglinton Ave. East
Scarborough
Tel: 416-759-2002
(Kennedy Rd. & Eglinton Ave.) சந்திப்பில்
www.neelamsilk.com

INCOME TAX
வீடு வாங்க விற்க
HOMELIFE
Selva Vettyvel
Real Estate Broker
Tel: 416-261-1544 Cell: 416-568-4301
Future Realty Inc.
262 Markham Road, Scarborough, ON
Markham & Eglinton

ALL INSURANCE & FINANCIAL SERVICES
• Auto
• Home
• RRSP
• Group
• Travel
• Business
LIBERTY MUTUAL
London Life
Balan Kanapathi
Office : 416-321-1515
Home : 905-294-2429
Pager : 416-336-4027
Mobile: 416- 452-6975
4433 Sheppard Ave. East, Suite 200
Scarborough, ON M1S 1V3

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வார்ச் செய்தி இதழ்
416-752-1524 www.uthayan.ca 416-752-6703

உதயம்: 343 Chief Editor: R. N. Logendralingam 08.11.2002 FRIDAY

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிந்துவிட்டது

கனடாவில் மலிபன் பிஸ்கட் நிறுவன இயக்குனர்



இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் பரந்து வாழும் இலங்கை மக்களால் விரும்பி உண்ணப்படும் மலிபன் விசுக்கோத்து உற்பத்தியாளர்களான மலிபன் பிஸ்கட்ஸ் நிறுவன அதிபரும், இயக்குனருமான திரு. ஏ. இ. விமலசிறி இந்த வாரம் கனடா வந்திருந்தாக ரொறென்ரோ நோயல் யோர்க் ஹோட்டலில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சி ஒன்றில் மலிபன் காட்சி அறை இடம் பெற்றது. இங்கே காணப்படும் படத்தில் திரு. விமலசிறியுடன் "கலாபம்" ஸ்ரீனிவாசன், "தமிழன் வழிகாட்டி" செந்திலாதன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

படம்- சத்தியன்

கிழக்கின் அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன்

ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்டம் முடிந்துவிட்டது எனவே மேல்கல்வி பொருளாதார யுத்தங்களில் ஈடுபடவேண்டும் என விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் குறிப்பிட்டார்.

கொக்கட்டிச் சோலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார். புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் கௌசல்யன் மேலும் பேசுகையில், யுத்தம் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு பத்திரிகையாளர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு பலர் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். மக்கள் வேறு, புலிகள் வேறு அல்லர் எனவே இரு பகுதியாளருக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்படவேண்டும்.

மக்களை வேறுபடுத்தினால் போராட்டத்தில் பின்னடைவுதான் ஏற்படும். எமது நிதிசார் நடவடிக்கைகள் எமக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. முதலீடுகளைச் செய்து தொழில்களை ஆரம்பிப்பதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். ஆனால் அவ்வாறு அஞ்ச வேண்டியதில்லை. நிதிவசதிகள் எமக்கு கிடைத்தும் நாம் பொதுமக்களில் தங்கயிருக்கமாட்டோம். எமது தேசத்தின் பகுதிகளை புனரமைக்க வேண்டிய மகத்தான பணி எமக்காக காத்திருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

கனடாவிற்கான 24 மணி நேர தமிழ் தொலைகாட்சி
Only one Tamil Digital TV in World. 4 yrs in Business)
Suspection Guarantee money back guarantee (2Weeks)
GTV Star Satellite 416-630-3339

GOREWAY DENTAL CENTRE
பிறம்ரன், மால்ரன், எற்றபிக்கோ, றெக்ஸ்டேல், டவுண்ஸ்வியூ, மிசிசாகா நகரங்களுக்கு
வசதியான பல்வைத்திய நிலையம்
(905) 673-7874
DR. NIRMALA SIVA & DR. C YOGESWARAN
பற்களை ஒழுங்குபடுத்துதலும் இதர பற்சிகிச்சைகளும்
7125 Goreway Drive, Suite 206, Mississauga (Malton)
இலவச ஆலோசனைகளுடன் வாரத்தில் 7 நாட்களும் சேவை

ஸ்காபரோ நகரில் பற்கள் சம்பந்தமான சிகிச்சைகளுக்கு
டாக்டர் கோபால் கோபாலகிருஸ்ணன்
குடும்பப் பல் மருத்துவர்
*1910 Kennedy Rd., (Kennedy/Ellesmere)
416-299-7080
கழமையில் ஏழு நாட்களும் சேவையுண்டு.

AJB TRAVELS
IATA
AWARD WINNER 1993/2000
Tel: 416-412-0244
E-mail: sales@ajbtravels.com Web: www.ajbtravels.com
1900 Kennedy Road, at Ellesmere, Scarborough, Ont. M1P 2L8

ஓம் சாயிராம்
ஜெயசாயி நகை மாளிகை
WHOLESALERS AND RETAILERS
சகலவிதமான தரமான கைவண்ணங்கள்
சுபய நகைத்தேவைகளுக்கு என்றும் நாடுங்கள்
Finest Quality 22K Gold and Singapore Jewellery
Expert Custom Jewellery and Repairs
3601 Lawrence Ave. E. #14, Scarborough, Ontario
Tel: (416) 431-1536 Fax: (416) 431-7712
Newin Centre, 2580 Sheppard Ave., Unit #45
Mississauga, ON (HWY 10 - Dundas)
Tel: (905) 270-1558 Fax: (905) 270-1553

OVER 8,000 FREE CIRCULATION EVERY WEEK IN CANADA

எல்ஸ்மெயர்
மீன் இறைச்சி மார்க்கட
இலங்கையிலிருந்து வரும்
ஒட்டி, ஓரா, நெத்தலி, கீளி, பாரை
விளை மீன் யாவும் எம்மிடம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்
ELLESMERE FISH & MEAT MART
1243 Ellesmere Road, Scarborough, ON, M1P 2X8
TEL/FAX: 416-285-8558

TEL: 416-752-1524 FAX: 416-752-6703

சிறு விளம்பரங்கள் உதயன்

வீட்டு இடியப்ப மெசின்



வீட்டு மெசின் -> $249
வர்த்தக மெசின்
கை மெசின் -> $450
மின் மெசின் -> $1,490
மின் தேங்காய் துருவி
E-mail: webmaster@worldtamil.com
www.worldtamil.com
மோகன் P.Eng.:
Tel: (416) 243-6000
Cell: (416) 433-6006/Pgr: (416) 715-4371

CLASSIFIED ADs

MATH TUITION
ஒன்ராறியோவின் பிரபல பாடசாலையில் புதிய பாடத்திட்டத்திற்கமைய MATH கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் Yoga Balasingam அவர்களால் நடத்தப்படும் பிரத்தியேக கணித வகுப்புக்கள்.
Math: Grades 10 & 11
Calculus: Grade 12
Algebra & Geometery: Grade 12
*Limited number of students in each group
* Gr. 12 (fun & calculus) will be started in Dec.
call: (416) 286-2000

HOPPER HUT
ஸ்காபரோ நகரில் சுவைமிக்க உணவு வகைகளை அருந்தி மகிழ எம்மிடம் வாருங்கள்
இடியப்பம் அதிவிஷேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்
880 Ellesmere Road
at Kennedy Unit 215
(416) 299-4311

BASEMENT for RENT
Markam / Denison
சந்திப்பில் 3 bedroom 11/2 washroom basement வாடகைக்கு உண்டு. Separd Entrance, close to School.bus, Shoppng, Free parking and cable
Call
பாலா 905 - 472 3564
647 280 6145

CONDO for SALE
Markham / Eglinton
2 bedroom, 1 1/2 washrrom, underground parking, TTC, mall, school, medical center சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
Call Hans Dhingra:
(416) 804-0216
(416) 285-8555

VACANCY
Fast Growing Reputed Insurance Company Requires Highly Motivated person with Good Educational Backround.
Training provided Good Compesation
please Contact tel: 416-827 2681
for appointment

CONDO for RENT
Warden / Sheppard
சந்திப்பிற்கு அருகில் #270 Palmdale இல் 2 படுக்கை அறைகள் (master bedroom, walk-in closet உடன்) 1 washroom (new ceramic tile walls), 1 laundry room (washer, dryer உடன்) புதிய kitchen (refrigator, stove, dishwasher) கொண்ட புதிதாக திருத்தவேலைகள் செய்யப்பட்ட புதிய carpetம் paintம் அடிக்கப்பட்ட condo வாடகைக்கு விடப்படும்.
(416) 258-1019 / (416) 917-6530

CONDO for SALE
Warden / Finch
சந்திப்பில் அருகாமையில் condo விற்பனைக்கு உண்டு. மூன்று அறைகளும், 1 1/2 குளியல் அறைகளுடனும், fridge, washer, dryer, stove உடனும், mallக்கு அருகாமையில் நல்ல நிலையில் புதிதாக paint அழக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ள condo உடன் விற்பனைக்கு உண்டு.
Contact: (416) 756-3731

ROOM for RENT
McCowan / 16th Ave.
சந்திப்பில் 1 bedroom, separate washroom, parking, cable உடன் வாடகைக்கு விடப்படும்.
Contact: (905) 472-6611
(416) 892-4560

WATERLOOவில் பிள்ளை பராமரிப்பாளர் தேவை
1 1/2 வயதுள்ள குழந்தையை வீட்டில் இருந்தே வார நாட்கள் திங்களில் இருந்து வெள்ளி வரை பராமரிப்பதற்கு ஒரு பெண்ணைத் தேடுகின்றோம்.
Call: (519) 885-2485 or (416) 289-1380

BASEMENT for RENT
Kennedy / Eglinton
சந்திப்பில் 2 bedroom basement வாடகைக்கு உண்டு. Call: (416) 751-1337

Pizza Store for Sale
Kingston Rd. / Birchmount
Good running family business, renovated store, rent only $1,300/month, close to schools. Asking only $50,000
Call Mouti (Suttou Group Leader):
(905) 405-8484 / (416) 916-6420

APARTMENT for RENT
Neilson / McLevin
1 bedroom basement apartment
Available Immediately
-> separate entrance
-> close to Malvern town center, TTC, and schools
Call: (416) 282-9614
(416) 809-9614

Home Child Care
Neilson / Sheppard
Home child care by quailified and experienced ECE. Safe home and garden. Lots of toys, indoor and outdoor activities.
Contact Kamala at:
(416) 724-7245

BASEMENT for RENT
Ellesmere/Ortenpark
2 bedroom, Separte entance, Ac, Cable, T.V, Internet Close to T.T.C, school, Shops அனைத்தும் உண்டு avalable Immedeadey
Call: 416 - 289 4135

BASEMENT for RENT
McCowan/Bromorton
இரண்டு படுக்கைய றைக்களைக்கொண்ட Basement வாகைக்கு. close to school, mall Walking disdad
Available Immediately
(416) 430 0695

Dounut Shop
Victoria Park / Lawrence
In a busy strip mall, with good sales. Asking $45,000
Call Mouti (Suttou Group Leader):
(905) 405-8484 / (416) 916-6420

Office Space
Finch / Kennedy
Over 800 sq. feet, prime location office condominium unit very bright with windows facing front streets and car parking, suitable for school, medical and other professionals, with easy access for clients from Markham and other areas.
PRICE: $120,000
If interested, please call Ms. Wan at:
(416) 661-4925

வேலைக்கு ஆள் தேவை
வீடியோ கடை ஒன்றுக்கு நல்ல அனுபவமுள்ள ஆள் தேவை. அத்துடன் வீடியோ தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு.
Call:
(416) 759-9540

Apt for Rent
2 bed room Appartment சகல வசதிகளுடன் அருகாமையில் வாடகைக்கு உண்டு.
416- 287 6360
416 - 725 1125

BASEMENT for RENT
Middlefield / Steels
Baseement for rent with separate entrance. Close to School, T.T.C and free parking,& Cable available: Nov 1st
416 - 433 5465
905 471 8966

Townhouse for Sale
Victoria Park / Lawrence
3 bedroom townhouse with living room, big kitchen, close to everything. Asking $169,000
Call Mouti (Suttou Group Leader):
(905) 405-8484 / (416) 916-6420

Basement for Rent
Lawrence / Bellamy
சந்திப்புக்கு அருகாமையில் 1 bedroom basement with separate entrance, cable, parking, + utilities included சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Close to TTC, school & shopping. புகைப்பழக்கம் அற்றவர் விரும்பத்தக்கது.
Call: (416) 289-7348

உணவகம் விற்பனைக்கு
மிசிசாகா நகரில் அமைந்துள்ள அபிராசி நிறுவனத்திற்கு அருகில் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு.
Call ஜோன்:
(416) 616-2383

Room For Rent
Kennedy / Eglinton
Newly renovaten room. Clost to Subway, bus & Shops nice and quiet neighbourhood, utilities, Cable, washer & Dryer Included
Rent: 350.00 Month
Call (416) 288 9135 or (416) 832-0928

BASEMENT for RENT
2 bedroom basement with separate entrance for rent. Close to schools & TTC
Middlefield / Elson call: (905) 201-4990

Basement for Rent
Brichmount / St.Clair
சந்திப்புக்கு அருகில் இரண்டு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு. Separate entrance, 4 piece washroom, மற்றும் வசதிகளும் உண்டு. Warden subway, பாடசாலை மற்றும் கடைகள் மிக அருகில்.
(416) 269-8264

கணனி வகுப்பு
Mcnicoll / Middlefiel (Scarborough)
Gerrardstreet (Indian bazear)
குறைந்த வாடகைக்கு விடப்படும்.
Call:
(416) 716 9379

ROOM for RENT
Neilson / Finch
சந்திப்புக்கு அருகில் உள்ள வீட்டில் மேல்தளத்தில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. 24hr பஸ் சேவை. பாடசாலை அனைத்தும் அருகில். ஆண்/பெண் இருபாலாரும் அழைக்கலாம்.
Call:
(416) 892-4474

STORE BASEMENT FOR RENT
(Tution, Vocal music, etc..)
1235 Ellesmere Road
Call: (416) 752-1524 or (416) 884-0005

பிரதம ஆசிரியர்: ஆர். என். லோகேந்திரலிங்கம்
"உதயன்" வெளியீட்டாளர்கள்
Head Office: 'UTHAYAN PUBLISHERS
1235 Ellesmere Road
Scarborough, Ont. M1P 2X8 Canada
Tel: 416.752-1524
Fax: 416.752-6703

'UTHAYAN PUBLISHERS
Regional Office in Germany
P. O. Box: 750162,
60531- Frankfurt
Germany
Tel: (+49)69-693774
Fax: (+49)69-694442

Chief Editor: R. N. Logendralingam
Graphic : Suthaharn, Rani & Pathma
Advertising & Circulation Manager : S. J. Sothy
Printers : Weller Publishers Canada
Europe Edition; Managing Editor: Sripathy Sivanadiyan
E-mail: uthayan66@hotmail.com

சிறந்த சேவை
மகிழ்ச்சிகரமான விளைவில்
Century 21
Percy Fulton Ltd.
#1 Office in Canada
10 Years Champion
24 Hours / 7 Days
Bus : 416-298-8200
Fax : 416-298-6602

Mohan Subramaniyam
Sales Representative
Residential & Commercial
Real Estate Marketing
At its Best!

கனடிய அரசியலில் தலைமைத்துவ மாற்றங்கள்

அரசியல் அகதிகளாய் இந்த மண்ணில் காலடிபதித்த நாங்கள் இங்கு படிப்படியாக பல குடியுரிமை அந்தஸ்துக்களைப் பெற்று ஆட்சி அதிகாரத்தை மாற்றியமைக்கும் பெருவெள்ளத்தின் சிறுதுளிகளாகவேனும் பங்களிப்பதற்குரிய தகைமைகளைப் பெற்றுள்ளோம்.

கனடிய மத்திய அரசின் ஆட்சி அதிகாரத்தை பெறும் பலத்தைக் கொண்ட லிபரல் போன்ற கட்சிகள் சரியான தலைமையை தேர்ந்தெடுப்பதற்கான காலம் நெருங்கிவிட்டது. இதைப்போல் ஈழத்தமிழர்களாகிய நாம் அதிகளவில் வாழும் ரொறன்ரோவின் உள்ளூராட்சி அதிகாரத்தின் தலைமைத்துவத்தை பிடிக்கும் போட்டிகளும் ஆரம்பமாகிவிட்டது.

இவ்வாறான போட்டிகளிலும் தேர்தல் தெரிவுகளிலும் நாம் சரியான அணியில் ஒன்று சேர்ந்து திறமையான தலைமைத்துவத்தை தேர்ந்தெடுப்பதற்கு உதவவேண்டும். எனவே இதுவரையிலும் இல்லாவிடினும் இன்றிலிருந்து சரியான அரசியல் பார்வையை எமக்குள் தொடங்கிவிட வேண்டும்.

இதன்மூலம் இந்த மண்ணில் அரசியல் அகதிகளாக காலூன்றிய நாங்கள், தொடர்ந்தும் அகதிகளாக இல்லாமல் அரசியல் அதிகாரத்தை மாற்றக்கூடிய சக்தியாக உலகெங்கும் பங்களிக்க வேண்டும் என்பதையே உதயன் வலியுறுத்துகிறான்.

இலங்கையில் தமிழர்களே அதிகளவு புற்றுநோயினால் உயிரிழக்கின்றனர்

- புற்றுநோய்நிபுணர் திருமதி வாணிபிள்ளை கூறுகின்றார்

இலங்கையில் தமிழர்களே அதிகளவு புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றார்கள். இதற்குக் காரணங்கள் பலவுள்ளன. எனினும் இவற்றை கட்டுப்படுத்துவது என்பது மிகுந்த சிரமமான காரியமாக உள்ளது. இவ்வாறு மஹரகமை புற்றுநோய் வைத்தியசாலையில் கடமைபுரியும் பிரபல புற்றுநோய் நிபுணர் திருமதி வாணிபிள்ளை கூறினார். எமது செய்தியாளருக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியின் போது அவர் இவ்வாறு கூறினார். இலங்கையில் உள்ள ஒரே ஒரு தமிழ் புற்றுநோய் நிபுணர் இவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தைகளில் எமக்கு நம்பிக்கை ஏற்படுத்திய பயணம் இது

தாயகம் திரும்பும் வழியில் தமிழ்ச்செல்வன் பெருமிதம்

நாம் எதிர்பார்ப்புகளோடு தாய்லாந்துப் பேச்சுக்களுக்குப் புறப்பட்டுச் சென்றோம். அவை நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு அங்கிருந்து திரும்புகின்றோம். இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகளில் எமக்கு நம்பிக்கை ஏற்படுத்திய பயணத்தையே நாம் மேற்கொண்டு திரும்பி வருகின்றோம்- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தாய்லாந்திலிருந்து கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த சமயம் விமானத்தில் வைத்துச் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இக்கருத்தை அவருக்கு அருகே விமான இருக்கையில் அமர்ந்திருந்த புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா ஒரு சிரிப்போடு அங்கீகரித்தார்.பாங்கொக் விமானநிலையத்தில் இருந்து கதே பசுபிக் விமானத்தில் தமது உறுப்பினர்கள் மூவர் சகிதம் இவர்கள் இருவரும் கடந்த செவ்வாயன்று இரவு புறப்பட்டு, நேற்று முன்தினம் 10.45 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினர். நேற்று முன்தினம் இரவை விமான நிலையத்துக்கு அருகில் உள்ள நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் கழித்த அவர்கள், அடுத்த நாள் கட்டு நாயக்க விமானநிலையத்தில் இருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் புதுக்குடியிருப்பைச் சென்றடைந்தனர்.

விமானத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானப் பேச்சுக்களின் போக்குக் குறித்து திருப்தி தெரிவித்தார். பேச்சுக்கள் நல்ல திசையில் முன்னேறும் என்ற எதிர்பார்ப்புக்களோடு வன்னியிலிருந்து புறப்பட்டோம். நாம் எதிர்பார்த்தபடி பல விடயங்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அவை நிறைவேறும் என்ற முழு நம்பிக்கையோடு தாய்லாந்தில் இருந்து திரும்புகின்றோம். இந்த பயணம் எமக்கு நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது அதற்கான சூழ்நிலை கனிந்து வருவதாகவே படுகின்றது - என்றார் அவர்.

கொழும்பிலிருந்து புதியதோர் தமிழ்த்தினசரி 'தினமலர்'

கொழும்பிலிருந்து புதியதொரு தமிழ்த் தினசரிப்பத்திரிகை மிக விரைவில் வெளிவரவுள்ளது. 'தினமலர் ' என்னும் வெளிவரவுள்ள மேற்படி பத்திரிகையை நிர்மல் நியூஸ்பேப்பர் லிமிட்டட் என்னும் நிறுவனம் வெளியிடவுள்ளது. வீரகேசரிப் பத்திரிகையின் இயக்குனராக முன்னர் பணியாற்றிய திரு. வென்செஸ்லாஸ் அவர்கள் இந்த நிறுவனத்தில் தலைவராக விளங்குவார். 'தினமலர் 'என்னும் பெயரில் தமிழகத்திலிருந்து ஒரு தினசரிப்பத்திரிகை ஏற்கனவே வெளிவருவது இங்கு கவனிக்கத்தக்கது.

GENERAL TOURS & TRAVELS

Lowest Air Fares to Colombo, Singapore, India & Other Destinations
இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கான ஒழுங்குகள் மிகக்குறைந்த விலையிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
FARES ARE SUBJECT TO CHANGE BASED ON SEATS AVAILABILITY
ALSO CALL US FOR ANY DESTINATION ONE WAY FARE ON REQUEST
1468 VICTORIA PARK AVE., SUITE 117 TORONTO ON M4A 2M2
TEL: (416) 755-8500 FAX: (416) 755-5552
யாழ் செல்வதற்கான அனுமதி பெற்று டிக்கட்டும் ஒழுங்கு செய்து தரப்படும்.

ரொறன்ரோ நகரில் கொன்ஸர்வேட்டிவ் கட்சித் தலைவர் தெரிவு இடம்பெறும

அடுத்த ஆண்டு மே மாதம் 29ம் திகதி முதல் 31ம் திகதி வரை மெற்றோ கொன்வென்சன் சென்டரில் சமஷ்டி கொன்ஸர்வேட்டிவ் கட்சியினர் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் மாநாட்டை நடத்துவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். மாநாட்டில் சுமார் 2500 பிரதிநிதிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியான ஹோட்டல்கள் அமைந்திருப்பதாலும் ஏனைய நகரங்களில் நடத்துவதிலும் பார்க்க டொரோண்டோவில் நடத்துவதால் செலவு குறைவாக இருக்கும் என்பதாலும் கொன்ஸர்வேட்டிவ் கட்சியினர் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான மாநாட்டை டொரோண்டோவில் நடத்த முடிவு செய்திருக்கிறார்கள். பிரதிநிதிகள் தெரிவு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் இடம் பெறவிருக்கிறது. ஆனால் அவர்களை எவ்வாறு தெரிவு செய்வது என்பதை கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை. அதனால் கட்சி புதன்கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி அதற்கான திட்டங்களை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை மீது வழக்குத் தொடுத்துள்ளது

விசாரணை என்று வரும் போது ரொறன்ரோ பொலிஸாரினால் வெள்ளையரிலும் பார்க்க கறுப்பர்கள் வித்தியாசமாக நடத்தப்படுவதாக த ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை கட்டுரைகள் மூலம் எடுத்துக் காட்டியிருந்தது. பொலிஸார் இனப்பாகுபாடு காட்டுகின்றார்கள் என்று பத்திரிகை குறிப்பிடப்பட்டுள்ளதானது பொலிஸ் சங்க உறுப்பினர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த வாழ்க்கையைப் பாதித்திருக்கின்றது என்றும் அதனால் உறுப்பினர் ஒருவருக்கு 300 மில்லியன் டாலர் வீதம் இரண்டு பில்லியன் டாலர் நஷ்ட ஈடு பத்திரிகையிடம் இருந்து கோருவதாகவும் பொலிஸ் சங்கத்தின் தலைவர் கிரேய்க் புரோமெல் கூறியிருக்கிறார். மறைப்பதற்கு எதுவும் பொலிஸாரிடம் இல்லை என்றும் தனது கருத்தில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். பத்திரிகையில் தரப்பட்ட எண்ணிக்கை உண்மைக்குப் புறம்பானது என்றும் அதனால் வழக்கின் மூலம் அங்கத்தவர்களின் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் பொலிஸ் சங்கத் தலைவர் கூறியிருக்கிறார். ரொறன்ரோ பொலிஸார் இனப்பாகுபாடு காட்டுவதில்லை என்றும் உண்மை நிலவரம் வெளியே வரவேண்டும் என்பதே தனது நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். பத்திரிகை மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொலிஸார் கேட்டிருந்தாலும் கூட வழக்கு வாபஸ் பெறமாட்டாது என்றும் பொலிஸ் சங்கத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதனிடையே, ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் மேரி டீன் வீயர்ஸ் பத்திரிகை தனது செய்தி ஆதார பூர்வமானது என்று தெரிவித்துக் கொள்கின்றது என்றும் அதனால் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற பேச்சுக்கு இடம் இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

சிறுமிகள் மூவர் திருட்டு தொடர்பாக கைதாகியுள்ளனர்

அவர்களுக்கு வயது 12ம் 11ம் தான். எனினும் பொலிஸாரினால் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. எக்லிங்டன் அவெனியு வெஸ்ட்டுக்கும் வெஸ்டேனுக்கும் இடையிலான பகுதி அவர்களது திருவிளையாடல்களுக்கு களமாக அமைந்துள்ளது.

இரு 11 வயது சிறுமிகள் சகிதம் 12 வயது சிறுமி ஒருவள் வீடுகளின் கதவுகளைத் தட்டி ஆதரவற்றவர்களுக்கு உதவும் தாபனம் ஒன்றின் பெயரைக் கூறி நன்கொடை கேட்பாள். வீடுகளின் சொந்தக்காரர்களும் நிதி தருவார்கள். இந்த வகையில் பல ஆயிரம் டாலர்களை அந்த மூன்று சிறுமிகளும் சேர்த்தார்கள். எனினும் அந்தப் பணத்தில் ஒரு பகுதிதானும் தாபனங்குக்குச் செல்லவில்லை. சேகரித்த நிதியை அவர்களே பங்கு போட்டுக் கொண்டார்கள்.

அவர்களது நடவடிக்கை அத்துடன் நிற்கவில்லை. பணம் தரும் போது வீட்டுக்காரர்கள் அதனை எங்கிருந்து எடுக்கிறார்கள் என்பதைக் கவனித்த பின்னர் ஒருவரும் இல்லாத சமயம் வீடுகளுக்குள் புகுந்து அவர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள். பணம் மட்டுமல்லாது நகைகளையும் செல் போன்களையும் கூட அவர்கள் களவாடியிருந்தார்கள்.

ரொறன்ரோ வீதி படுகொலைகள் மேயர் மெல் லாஸ்ட்மென்னுக்கு கவலையைத் தந்துள்ளன

சமீபகாலமாக டொரோண்டோ வீதிகளில் துப்பாக்கிகள் பாவிக்கப்பட்டு நடந்த கொலைகள் பொலிஸாரையும் மேயரையும் கவலை கொள்ள வைத்திருக்கின்றன. துப்பாக்கிகள் வைத்திருப்பதற்கான தற்போதைய விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்று மேயர் மெல் லாஸ்ட்மன் கூறியிருக்கிறார். புளோரிடாவில் இருப்பது போன்ற கடுமையான சட்டம் இங்கும் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் துப்பாக்கிகள் பாவித்து செய்யப்படும் குற்றச் செயல்களுக்கு அங்குள்ளது போன்று குறைந்தது 25 ஆண்டுகள் முதல் சீவியகாலம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். துப்பாக்கி வைத்திருக்கும் உரிமை எவருக்கும் இருப்பதாகத் தான் கருதவில்லை என்றும் பாலிய வயதினர் பாலிய வயதினரைக் கொல்வதை அனுமதிக்க முடியாது என்றும் அதனைத் தடுத்து நிறுத்துவதே பொலிஸாரின் தலையாய பணியாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். டொரோண்டோ நகர பொலிஸ் அதிபர் யூலியன் பண்டினோவை பொலிஸாரின் இனப்பாகுபாடு தொடர்பான குற்றச் சாட்டு விடயங்களில் அதிக நேரத்தை செலவிட வைக்காமல் விசாரணைக் குழு அதுதொடர்பான தனது பணியைச் செய்ய விட்டு விட்டு அவரை கோஷ்டிகளுக்கு எதிரான நடவடிக்கையில் கவனம் செலுத்த வைக்க வேண்டும் என்றும் மேயர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அமெரிக்க நகரங்களிலும் பார்க்க டொரோண்டோவில் குற்றச் செயல்கள் குறைவாகவே இடம் பெறுகின்றன என்றும் இருந்த போதிலும் குற்றச் செயல்களை மேலும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

Dr. மணிவண்ணன் & அசோசியேற்ஸ்
Warden & Finch சந்திப்பில்
வாரத்தில் ஏழு நாட்களும்
தமிழ் பேசும் Walk in Medical Clinic
அன்றாட வைத்திய சேவைகளை அன்றே பூர்த்தி செய்ய அழையுங்கள்
416-496-1990
சிறப்பு அம்சம்
வார நாட்களில் மாலை நேரங்களிலும், சனி ஞாயிறு தினங்களிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள்
Dr. K. ஜெயலிங்கம் MD, FRCPC
Specialist- Internal Medicine, Special Interest in Cardology & Diabetes
By Referal only- Call for Appointment
Dr. V. விஜயரட்ணம்
குழந்தை வைத்திய நிபுணர்
Nutrition- Gastroenterologist
By Appointments only- Call for Appointment
Dr. நித்தியலட்சுமி MBBS, CCFP
குடும்ப வைத்தியர்
Dr. மணிவண்ணன் MD, CCFP
குடும்ப வைத்தியர்
Tel: 416-496-1990
3430 Finch Ave. East, Suite 6A
(Finch & Warden Pharmacyக்கு உட்புறமாக)
Scarborough, Ont. M1W 2R5

DR. SUGANTHY SUTHAGAR
டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்
FAMILY DENTIST
குடும்ப பல் வைத்தியர்
CALL (416) 299 7466

COSMETIC AND GENERAL DENTISTRY
பொதுவான பல் வைத்திய சேவைகளுடன் பற்கலை அழகுபடுத்தல்
FREE CONSULTATION
இலவச மருத்துவ ஆலோசனை
ORTHODONTICS (BRACES) FOR ADULTS & CHILDREN
வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்
SEDATION FOR NERVOUS PATIENTS
3410 SHEPPARD AVE. E., SUITE 311, SCARBOROUGH, ON. M1T 3K4
TEL: (416) 299 7466

THIS WEEK SPECIAL
- Wonderland Area
- 3 Bedroom Italian House
- 3 Washrooms
- Basement Apartment
- Seperate Entrance
- Only $12,500 down payment
- Only 2 years old
- Beautiful House

உங்களுடைய மாதாந்த Rent ஐக்கொண்டு உங்களை வீட்டுக்குச் சொந்தக்காரராக்க எம்மால் முடியும்!

Mortgage Consultant

M.R. SHANKAR
416-453-6666

SPECIAL
- எங்கள் ஊடாக வீடு வாங்குபவர்களுக்கு Mortgage ஒழுங்குபடுத்தல் இலவசம்!
- உங்கள் ஊடாக வீடு விற்பவர்களுக்கு 1% Commission only!

IF WE CAN NOT ARRANGE THE MORTGAGE FOR YOU, NOBODY CAN

Over 10 years Experience
நாங்கள் வியாபார நிலையங்களை வாங்குவதிலும் விற்பதிலும் உதவுகின்றோம்

Bad Credit? Bankruptcy? New Immigrant? Low Income?
NOOOOO.....PROBLEM

Licenced Real Estator

ALEX (NAV) MALAHI
416-873-SOLD (7653)

உங்கள் எல்லாவிதமான credit பிரச்சினைகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு
Home Life Superstars R.E. Ltd. (Realtor, Member) Tel: 416-740-4000

WE ARE SPECIALIZED IN
- Scarborough
- Toronto
- Markham
- Brampton
- Mississauga
- Wonderland Area

சமாதானத்தின் எதிரிகளை மக்கள் ஓரங்கட்ட வேண்டும்

-தளபதி கருணா கூறுகின்றார்

சமாதானத்தின் எதிரிகளை ஓரங்கட்ட மக்கள் முன்வரவேண்டும். அம்பாறை காஞ்சிரங்குடாவிலும், திருமலை மாவட்டத்திலும் அப்பாவிப் பொதுமக்கள் சமாதான பேச்சுவார்த்தை நடைபெறும் சூழ்நிலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தாய்லாந்து முதல் கட்டப் பேச்சுவார்த்தை அரசுக்கும், மக்களுக்கும், போராளிகளுக்கும் நம்பிக்கையூட்டும் விதத்தில் நடந்தேறியுள்ளன. இதனை குழப்பும் வகையிலேயே இச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தளபதி கேணல் வி. கருணா அம்மான் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்த போர் நிறுத்த கண்காணிப்பு குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்டொன்ட் புறூஹொவ்டே கடந்த வெள்ளிக்கிழமை கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்திற்கு சென்று புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தார். இச்சந்திப்பில் கேணல் கருணா அம்மான் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ. கௌசல்யன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அம்பாறை காஞ்சிரங்குடாவில் விஷேட அதிரடிப்படையினர் கொலை வெறியாடி 7 அப்பாவி பொதுமக்களை கொலை செய்த சம்பவம் இதன் எதிரொலியாக திருமலை மாவட்டத்தில் ஹர்த்தால் அனுட்டித்த தமிழ்மக்கள் மீது பொலிசார் தாக்குதல் நடத்தியதில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றியும் புலிகள் தரப்பினர் ஆழ்ந்த விசனத்தை தெரிவித்தார்கள்.

இச்சம்பவங்கள் பாரதூரமான போர் நிறுத்த சம்பவங்களாக இருந்த போதிலும் இதுவரை ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. முன்னரும் பல்வேறு படுகொலை சம்பவங்களில் படையினர் ஈடுபட்டபோதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததாலேயே தொடர்ந்தும் வருகின்றன.

காஞ்சிரங்குடா விஷேட அதிரடிப்படை முகாம் அவ்விடத்திலிருந்து அகற்றி கொலை சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுப்பதன் மூலமே தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை வலுப்படுத்த முடியுமென்று கேணல் கருணா அம்மான் சுட்டிக்காட்டினார். இன்றைய துக்கரமான நிலையிலும் தமிழ் மக்களும், போராளிகளும் தாய்லாந்தில் நடக்கப் போகும் பேச்சுவார்த்தையிலும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் மக்கள் குழப்பமும், சந்தேகமும் அடைந்துள்ளனர்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பிரசன்னமாக இருக்கும் சூழ்நிலையிலும் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. நாம் மிகவும் தெளிவாகவே உள்ளோம். தலைவர் அவ்வப்போது அறிவுறுத்தல்களையும் வழங்கிவருகின்றனர். அதற்கமைவாகவே நாங்கள் செயற்படுவோம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினர் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். ஆனால் அம்பாறை மாவட்டத்தில் விஷேட அதிரடிப்படையினர் மிக மோசமாக செயற்பட்டு வருவதாக புலிகள் தரப்பு, போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரிடம் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தை வைத்துப் பிழைத்தவர் இலாபமடைந்தனர்

கடந்த இரு தசாப்தகாலமாக இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் விடுதலைப் புலிகளோ அல்லது அரச படையினரோ வெற்றி பெறவில்லை. யுத்தத்தை வைத்து பிழைப்பு நடத்திய ரத்வத்த போன்றோரே யுத்தத்தின் லாபங்களை பெற்றனர்.

இவரைப் போன்று பலர் யுத்தத்தினால் லட்சக்கணக்கில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொத்து சேகரித்துள்ளனர். இவற்றை வெளிப்படுத்துவதே எமது சங்கத்தின் முதற் பணியாக இருக்கின்றது என்று ஊனமுற்றோர் படைவீரர்களின் சங்கத் தலைவர் அசோகா தயாரத்ன தெரிவித்தார்.

யுத்தத்தால் வேதனையையும் கொடுமையையும் அனைவரையும் விட நாமே நன்கறிவோம். இதை உணர்ந்தே சமாதான முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். ஆனால் ஜனாதிபதி சமாதானம் குறித்து அவநம்பிக்கையுடன் செயற்படுவது வருத்தத்தை அளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அடைந்தது போல் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் வெற்றி அடைந்து நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைபெற வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

எனினும் ஜே.வி.பி. மற்றும் பொ.ஐ.மு. கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் சந்தர்ப்பவாத அரசியலின் நலன்களுக்காக சமாதான நடவடிக்கைகளை எதிர்க்கின்றனர். இதில் ஜனாதிபதியும் இணைந்து கொண்டார்.

கடந்த பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தின் 7 ஆண்டுகள் இலங்கை வரலாற்றின் யுத்தத்தை வைத்து பிழைப்பு நடத்தியவர்களை மக்களுக்கு இனம் காட்டுவது எமது பணியாக இருக்கின்றது. ஆனால், இந்தப் பணிக்கு எந்த அரசியற் கட்சிகளும் உதவ மறுக்கின்றன.அனுருத்த ரத்வத்தயின் வங்கிக் கணக்குகள் மட்டுமன்றி அவரது உள்நாட்டு, வெளிநாட்டு சொத்துக்கள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நயினாதீவு- அனலைதீவு படகு சேவை

நயினாதீவு அனலைதீவு இறங்குதுறைகளுக்கிடையில் நேரடி படகுச்சேவை ஒன்றை நடத்துமாறு அனலை தீவில் உள்ள அரசாங்க காரியாலயங்களில் கடமையாற்றும் நயினாதீவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றார்கள். இவர்கள் நயினாதீவில் இரந்து படகு மூலம் குறிகட்டுவான் இறங்கு துறைக்குச் சென்று பின்பு ஊர்காவற்றுறை பஸ் மூலம் பிரயாணம் செய்து ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடியில் இருந்து படகு மூலம் அனலை தீவு இறங்கு துறைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதாலும் குறிப்பிட்ட நேரத்துக்கு தாங்கள் கடமைக்கு செல்ல முடியாது இருப்பதாகவும் உத்தியோகஸ்தர் கவலை தெரிவிக்கின்றனர். வார விடுமுறையான சனி, ஞாயிறு தினங்களில் சொந்த ஊரான நயினாதீவுக்கு திரும்புபவர்கள் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கே அனலை தீவு இறங்குதுறைக்குச் மீண்டும் செல்ல வேண்டியுள்ளது.

மணிவிழாக் காணவுள்ள பேராசிரியர் மௌனகுரு

பேராசிரியர் சி. மௌனகுரு அடுத்த வருடம் யூன் மாதம் 9ம் திகதி 60 வயதை பூர்த்தி செய்வதை முன்னிட்டு மணிவிழாவை கொண்டாட கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்விமான்கள் கொண்ட குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் வி. கெனடி தலைமையில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் நடைபெற்றது. சகலதுறை சார்ந்த ஆர்வலர்களையும் இணைத்து மணிவிழா குழுவை தெரிவு செய்வதற்கான இணைப்புக்குழு இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ். சீவரத்தினம், கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி திருமதி அம்மன் கிளி முருகதாஸ், ஊடகவியலாளர் சண். தவராஜா, விபுலகம் வெளியீட்டு பொறுப்பாளர் கே. ஆறுமுகம் ஆகியோர் அடங்குகின்றனர். நவம்பர் 17ம் திகதி பேராசிரியர் சி. மௌனகுரு மணிவிழா சபை தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?

YOGI & PARTNERS உங்களது காப்புறுதி நிறுவனம் உங்களில் ஆதாயம் தேடவிடாதீர்கள். YOGI & PARTNERS
உங்கள் உரிமைகள், ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் குறித்து ஆலோசனைகள் பெற எம்மை நாடுங்கள்.
தவறு உங்களுடையதாயினும்..

உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

EAST OFFICE
1920 Ellesmere Rd., Suite: 110
Scarborough, Ont. M1H 2V6
Tel : (416) 289-4141

அனுபவம்மிக்க பல காப்புறுதி ஆலோசகர்கள் எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.
யோகி தம்பிப்பிள்ளை

WEST OFFICE
4 John Street, Suite 10,
Toronto, Ont. M9N 1J3
Tel : (416) 241-9292

உள்ளூர் செய்திகள்

Euro ELECTRIC
24hrs
அனைத்து மின் இணைப்பு திருத்த வேலைகளுக்கும்
Licensed Electrician
Maniam : 416-289-9393
☐INDUSTRIAL
☐RESIDENTIAL
☐COMMERCIAL

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் பொங்கல் விழாவும் பேச்சுப்போட்டியும்

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களும் உரும்பிராய் மக்களும் ஆசிரியர்களும் சேர்ந்து நடத்தும் பொங்கல் விழா 2003 ஜனவரி 04ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது. அதற்கு நிகழ்ச்சிகள் தந்து பங்குபற்ற விரும்புவோர் நிர்வாக சபையுடன் தொடர்புகொள்ளவும் பேச்சுப்போட்டி முன்கூட்டியே நடைபெற இருப்பதால் பங்குபற்ற விரும்புவோர் நவம்பர் 30ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.பாலர்பிரிவு -7வயதிற்குக் கீழ், கீழ்ப்பிரிவு-7-9 வயது, மத்தியபிரிவு-9-11 வயது, மேற்பிரிவு-11-13வயது, அதிமேற்பிரிவு-11-20 வயது. தொடர்புகளுக்கு: தலைவர் (416) 496-0608, செயலாளர் (416) 321-6533, உபதலைவர் (416)755-1640, உபசெயலாளர் (416) 332-8382

குறிஞ்சி இரவு 10வது ஆண்டு விழா

குறிஞ்சி இரவு 10வது ஆண்டு விழா இலக்கம் Croation St. இல் அமைந்துள்ள Croation Parish Hall (Duffern Mall) இல் எதிர்வரும் Nov , 2002அன்று மாலை 5.00 மணிக்கு இடம்பெறவிருக்கிறது. இவ்விழாவில் சிறுவர் நிகழ்ச்சி(குறிஞ்சி சிறுவர்கள்) பரதநாட்டியம், கரகாட்டம், (அபிநயாலாய நடன பள்ளி மாணவிகள்) திரைஇசை நடனம் (குறிஞ்சி சிறுவர்கள்) கோலாட்டம், நகைச்சுவை, இரவு போசனம், கவிதை, அக்னி இசை குழுவினரின் "இன்னிசை மாலை" அறிவிப்பாளர் சில்வியா பிரான்சிஸ், கோபி, கண்ணதாசன், திருச்சிலோகநாதன் கமலக்கண்ணன் ஆகியோர் பங்குபற்றுவார்கள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 769-7097, (416) 754-8555, (416) 264-4267

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியின் நத்தார் இன்னிசை ஆராதனை

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழையமாணவர் ஆசிரியர் சங்கம் வழங்கும் நத்தார் இன்னிசை ஆராதனை Bridletown Park Church, 2300 Bridle Town Circle,Agiacourt, Ontario (on Finch East of Warden Avc) என்னும் ஆலயத்தில் சனிக்கிழமை நவம்பர் மாதம் 9ம் திகதி 2002 மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும். பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் நண்பர்கள் யாவரும் குடும்பத்தினருடன் வந்து இன்னிசை ஆராதனையை சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தொடர்புகளுக்கு: குணம் கன்ட் (905) 472-0379, ந. இரவீந்திரன் (416) 754-2195, ரூபன் சோமநாதன்: (416) 439-5961

கோப்பாய் அபிவிருத்திச் சங்கம் நடத்தும் வருடாந்தப் பொதுக்கூட்டம்

கோப்பாய் அபிவிருத்திச் சங்கம் நடத்தும் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 9.11.02 சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இலக்கம் 25 Sunriseஇல் நடைபெறுகின்றது. அனைத்து கோப்பாய் மக்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். . மேலதிக தொடர்புகளுக்கு: கருணா (416) 759-1812, யோகன்: (416) 728-0652,செட்டி: (416)701-9250

அருள் மிகு கனடா கந்தசுவாமி கோவிலில் சூரசம்காரம்

733 Birchmount. Rd இல் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி விரதம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. 9.11.2002 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சூரசம்காரம் நடைபெறும். அன்றைய தினம் காவடி, கற்பூரச்சட்டி எடுப்பவர்கள் ஆலயத்துடன் தொடர்புகொள்ளுமாறும், 10.11.2002 ஞாயிறு பாறணை அபிசேகம் காலை 4.00 மணிக்கு நடைபெற்று, பூசையைத்தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்து பாறணை அமுது வழங்கப்படும். மாலை 7.00 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெற்று முருகப்பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். தொடர்புகளுக்கு (416) 438-1882, (416) 438-1882

சிவயோக சுவாமிகளின் உள்ளம் கவர்ந்த ஞானவாரிசு சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள்

குருதேவர் என்று அன்புடன் அழைக்கப்படும் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மகாசமாதியடைந்த திதியாகிய ஐப்பசிமாதத்து சித்திரை நட்சத்திரமன்று 02.11.2002 சனிக்கிழமை குருதேவரின் குருபூசை ரிச்மண்ட்ஹில் இந்து ஆலயத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள், அடியார்கள் மத்தியில் வெகுசிறப்பாகவும், மங்களகரமாகவும் கனடா சிவதொண்டன் நிலையத்தால் குருவருள் துணைகொண்டு நடைபெற்றது. இந்தப் புனித வைபவத்தில் கனடா சைவசித்தாந்த மன்றம் வெளியிட்ட "அன்புநெறி" சிறப்பிதழ் குருதேவர் ஞாபகமாக, சிறப்புக் கட்டுரைகளுடனும், வர்ணப்படங்களுடனும் சிறப்பாக வெளியிடப்பட்டது. குருதேவரின் அணுக்கத்தொண்டனான சாதுக தொண்டுநாதன் அவர்களால் நூல் வெளியிடப்பட்டது. மன்றத்தின் தலைவர் திரு. தி. விசுவலிங்கம் அவர்களும் உரையாற்றினார்கள்.

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
யாமொன்றும் அறியோம்
முழுதும் உண்மை -சிவயோக சுவாமிகள்

இறுதியில் சிவதொண்டன் நிலையத்தின் செயலாளர் திரு. த. ராஜமோகன் நன்றியுரை கூறினார். மங்களமாக தீபாராதனையுடன் குருபூசை இனிதே முடிவுற்றது.

யாழ் ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் ஒன்றுகூடல்

புகழ்பெற்ற யாழ் ஸ்ரான்லிக்கல்லூரி பழைய மாணவர்கள்,ஆசிரியர்கள் பலர் கனடா ஒன்ராறியோ மாநிலத்தில் வசிக்கின்றார்கள். அவர்கள் பெயரில் இயங்கிவந்த அமைப்பு தற்பொழுது இயங்கவில்லை. அவர்கள் அனைவரையும் ஒருங் கிணைப்பதற்கு மீண்டும் நாம் முயலுகின்றோம். பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் பழைய சங்க அமைப்பாளர்கள் அனைவரையும் பின்வரும் தொலைபேசிகளுடன் அல்லது மின்அஞ்சலுடன் தவறாமல் தொடர்புகொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம். தொடர்புகளுக்கு: ராக்கா கணபதிப்பிள்ளை தொலைபேசி: (416) 287-8537கி.நாடகள் மாலை 7.00மணிக்குப்பின் ஞாயிறு மாலை 3.00 மணிக்குப்பின், (416) 397-4655சனிக்கிழமை காலை 8.30-மாலை 7.00 வரை அழைக்கலாம்.

கொக்குவில் நாமகள் வித்தியாசாலை பழையமாணவர் சங்க பொதுக்கூட்டம்

கடந்த OCT.19, 2002 திகதியில் தற்காலிக பொதுக்கூட்டம் நடைபெற்று பழையமாணவன் மகேந்திரன் நமசிவாயம் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை NOV. 10, 2002 பிற்பகல் 3.30 க்கு இலக்கம் 46 Ravenhill Cr. Markham, Brimley/14th Ave. நடைபெற உள்ளது. நாமகள் வித்தியாசாலைப் பழையமாணவர்கள் அனைவரையும் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் சமூகமளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். தொடர்புகளுக்கு: (416) 754-4864, (905) 887-7456, (416) 725-7284

அகண்ட நாம பஜனை

நவம்பர் மாதம் 9ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 10ம் திகதி ஞாயிறு மாலை 6.00 மணிவரை 24மணி நேர அகண்ட நாமபஜனை Centennial Progress Campus ல் நடைபெறும். அனைவரும் கலந்துகொண்டு பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அருளைப் பெறுமாறு சாயி சமித்தியினர் அன்புடன் அழைக்கின்றனர்.

டறம் தமிழ்இளைஞர் விழா 2002

டறம் தமிழ் ஒன்றியம் ஒரு இலாபநோக்கமற்ற பொதுநல அமைப்பாகும். இது டறம் 2000 ஆண்டில் டறம் பெரும்பாகத்தில் வாழும் தமிழ் இளைஞர்களையும், பெரியோர்களையும் ஒன்றிணைத்து தமிழ் கலாச்சாரத்தை வளப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்களிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் அடிப்படைநோக்கில் உருவாக்கப்பட்டது. டறம் தமிழ் இளைஞர் விழா 2002 வைபவம் நமது உள்ளூர் திறமைசாலிகள் பங்குபற்றி வழங்கவிருக்கும் கர்நாடக சங்கீதம், நடனம், நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கும். கார்த்திகை மாதம் 16ம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் Pickering Pine Ridge உயர்கல்வி பாடசாலையில் எமது இளைஞரின் கடின உழைப்பில் உருவாகி நடைபெற இருக்கும் இந்த விழாவிற்கு வருகைதந்து அவர்களின் ஆற்றலை ஆதரித்து அவர்களை உற்சாகப்படுத்துமாறு தமிழ் மக்கள் அனைவரையும் இந்த ஒன்றியம் வரவேற்று நிற்கின்றது.

Rajaguru Martial Arts ராஜகுரு மார்ஷல் ஆர்ட்ஸ் அக்கடமி வழங்கும்
KARATE CLASSES கராட்டி வகுப்புகள்

ஷோடோகான் கராட்டி வகுப்புகள்
அன்பு, அமைதி, கருணை, பொறுமை போன்ற நற்குணங்களோடு வாழவும், மற்றவர்களை நேசித்து சேவை செய்யும் மனப்பான்மையுடன் வாழவும், உடலுக்கும் மனதிற்கும் உழுயிளக்கும் பயிற்சியைப் பெறவும் தமக்கும் பிறருக்கும் ஆபத்து ஏற்படும் போது பாதுகாத்துக் கொள்ளவும் கீழேயுள்ள பயிற்சி நிலையங்களை அணுகவும்
ஷோஹான் "ராஜகுரு" T. ரவீந்திரன் ஷிஹான் R. முரளி
பெண் (வைஎளி ஸ்ரீராம்) பயிற்சியாளராலும் பயிற்றுவிக்கப்படுகிறது.
DAILY NEEDS 2543 Pharmacy Ave (Finch / Pharmacy)
BEEMAH RESTAURANT 1450 Gerrard Street (Gerrard Indian Bazar)
ACADEMY OF TAMIL ARTS & TECH. 3150 Eglinton Avenue (Markham / Eglinton)
DAISY MART 5739 Finch Avenue East (Finch / Nolinea)
416-473-8472

திருநெல்வேலி மக்கள் ஒன்றியம் நிர்வாகசபைத் தெரிவு

மேற்படி தெரிவுக்கூட்டம் Oct 19, 2002 ம் ஆண்டு சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு Centennial Re East ல் திரு. நித்தியானந்தன் திரு. வ. விவேகானந்தன் முன்னிலையில் கூட்டம் ஆரம்பமானது. திரு. நித்தி சபையோரின் சார்பில் திரு. M. முத்துலிங்கத்தை கூட்டத்தை தலைமை தாங்கி நடாத்துமாறு அழைக்கப்பெற்று அவர் தலைமையில் மறைந்த மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தி கூட்டம் ஆரம்பமானது. தலைவர் உரையின்பின்பு சங்கத்தின் யாப்பு வாசிக்கப்பெற்று திருத்தங்கள் செய்யப்பெற்று திரு. சி. நவநிதி முன்மொழிக்க திரு. ந. நித்தி அவர்கள் வழிமொழித்து யாப்பை சபையோர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பின் நிர்வாகசபை தெரிவு இடம்பெற்றது. திரு. M. முத்துலிங்கம் அவர்கள் திருநெல்வேலி குழந்தைகள் இல்லத்தை முன்பு நடந்த விடயங்களைப்பற்றி எடுத்துரைத்தார். சிறப்பு பேச்சாளர் ரிஷி தொண்டநாதன் பேசுகையில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் இருபாலார்களும் குழந்தைகள் இல்லத்தில் இருந்து வெளியே செல்ல வேண்டும். வெளியே செல்லும் இளைஞர்கள் யுவதிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தில் த. விவேகானந்தன், மு. சிவானந்தராஜா, K. பொன்னுத்துரை ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். இக்கூட்டத்தை அமைதியாக நடாத்திய அங்கத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் கூட்ட அறிவித்தல்களை பிரசுரித்த உதயன், முழக்கம் ஆகிய பத்திரிகைகளுக்கும் செயலாளர் நித்தி நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவேறியது. பின்வருவோர் நிர்வாகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பாலா சிவா, உபதலைவர்: க. குலசோதி, செயலாளர்: ந. நித்தியானந்தன், உதவிச்செயலாளர்: வ. விபுலானந்தன், தனாதிகாரி: வ.விவேகானந்தன், உதவி தனாதிகாரி: திரு. பா. கௌரிகுமார், கலாச்சார செயலாளர்: நவநிதி சிவப்பிரகாரம், உதவி காசாளர்: யசோ சிவா, விளையாட்டு துணை செயலாளர்: ரவிச்சந்திரன் குருநாதபிள்ளை: உதவி விளையாட்டுத்துறை செயலாளர்: கலாசுதன் நமசிவாயம்., நிதிச்செயலாளர்: நரேஷ்குமார் ராஜசிங்கம், உதவி நிதிச்செயலாளர்: விவேகானந்தன் தம்பித்துரை,

நிர்வாகசபை உறுப்பினர்கள்: இ. நந்தகுமார், எஸ். கருணாகரன், எஸ். கே. பொன்னுத்துரை, கு. சிவசக்தி, மு. சிவானந்தராஜா, த. ரவிராஜ்,

கணக்குப்பரிசோதகர்கள்: சிவராஜா, போசகர்கள்: திருவாளர்கள் எஸ். சோதிராஜா, ஆர். என். லோகேந்திரலிங்கம், எம். முத்துலிங்கம், எஸ். திருச்செல்வம், ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அக்யுபஞ்சர் (Acupuncture) வைத்தியத்தின் மகிமை

இராசதுரை ஆகிய நான் கடந்த 2000 ஆண்டு ஓர் விபத்தின் பின்பு எனது முதுகெலும்பில் நாரிகீழ்பகுதியும் கழுத்துப்பகுதியும் பாதிக்கப்பட்டு எனக்கு எனது குடும்ப வைத்தியர் மூலம் பல தரப்பட்ட வைத்திய நிபுணர்களிடம் அனுப்பப்பட்டேன். அங்கே அவர்கள் எத்தனையோ முறையான X-கதிர், (Scanning) ஸ்கானிங் மூலமும் பல படங்களை எடுத்தார்கள். மேற்படி படங்களை எடுத்தபின்பு தான் எமது நோயை கண்டுபிடித்து அதற்கான பலவிதமான மாத்திரைகளை தந்தார்கள். அத்துடன் நித்திரைக்கான மாத்திரைகளையும் தந்தார்கள். அம்மாத்திரைகளை பாவித்து எதுவித வருத்தமும் குணமடையவில்லை. எனது வலியோ கூடிக்கொண்டே போனது. அதற்கு வைத்தியர் அதிசக்தி வாய்ந்த வலிக்கான மாத்திரைகளை எழுதித்தந்து அதை பாவிக்கும்படி கூறினார். அதை பாவிக்கும்போது சிறிது நேரம் மட்டும் வலிகுணமடையும். பின்பு திரும்பவும் வலி ஏற்பட்டு அதனால் அடையும் வேதனையோ சொல்லமுடியாமல் துன்பமடைந்தேன். திரும்பவும் எனது குடும்ப வைத்தியர் (pain clinic) க்கு அனுப்பினார். அங்கு எனது தலையில் இருமுறையும், நாரியில் மூன்றுமுறையும் ஓர் அதிசக்திவாய்ந்த ஊசியை போட்டார்கள். அந்த ஊசி நாரி, கழுத்து வலியை விட மேற்கூறப்பட்ட ஊசி போடப்பட்ட வலியோ அதிகமாய் காணப்பட்டது. ஒரு வித பலனும் கிடைக்கவில்லை. வலியோ அதிகமாக கூடிக்கொண்டே சென்றது. நடக்கமுடியாத நிலையும், குனியமுடியாத நிலையும், கழுத்து திருப்பமுடியாத நிலையும், நிமிர்ந்து சரிந்து படுக்கமுடியாத நிலையில் காணப்பட்டேன்.

இப்படி இருக்கும் வேளையில் ஒரு நாள் உதயன் பத்திரிகை மூலம் டாக்டர் திருமதி. வசந்தகுமாரின் விளம்பரத்தை பார்த்தேன். பின்பு டாக்டர் திருமதி. வசந்தகுமாரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்தபோது விபரங்களை கேட்டறிந்த பின்பு பரிசோதனை செய்வதற்கு நியமன திகதி தந்தார். நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். நீங்கள் வாருங்கள் சோதனைசெய்து அக்யுபஞ்சர் (Acupuncture) வைத்தியம் மூலம் மாற்றலாம் என்று ஆறுதலான அன்பான வார்த்தைகளால் கூறினார். நான் எனக்கு தரப்பட்ட திகதியன்று போகவில்லை. காரணம் எனக்கு இவ்வளவு வைத்தியம் செய்தும் மாறவில்லையே இனி இவ்வைத்தியம் செய்து மாறவா போகிறது? என்ற கவலை ஒருபுறம் என்னை வாட்டியது. அதனால் என்ன செய்வது என்ற கேள்விக்கு தள்ளப்பட்டேன். வலிதாங்க முடியாமையால் டாக்டரிடம் திரும்பவும் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். டாக்டர் வலிதாங்க முடியாவிட்டால் உடன் வரும்படி அனுமதி தந்தார். அதன் படி நானும் சென்றேன். சென்றதும் டாக்டர் என்னை பரிசோதனை செய்தார். அப்போது எனது பின் முதுகுப்பகுதியையும், கழுத்து, தோள்மூட்டு தலைப்பகுதியையும் பூரண சோதனை செய்தபின்பு எனக்கு எந்த இடங்களில் கூட வலி வேதனை இருக்கிறதோ அந்த இடங்களை டாக்டர் தனது கைவிரலினால் அமர்த்தி இந்த இடத்தில் நோகிறதா? என்று வினவினார். நான் ஆம் என்றேன்.

உண்மையில் டாக்டர் காட்டிக்கேட்ட இடத்தில்தான் எனக்கு விபத்தினால் முன்பு ஒ-கதிர்படங்கள் மூலம் இதே இடங்களைத்தான் கண்டுபிடித்தார்கள். எனக்கு எத்தனையோ ஒ-கதிர்படங்கள் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட இடத்தை டாக்டர் திருமதி. வசந்தகுமார் தனது கைவிரலினால் சோதனைகள் மூலம் கண்டுபிடித்தார். அப்போதுதான் வைத்தியரின் சோதனைபற்றிய திறமையையும் அனுபவத்தையும் என்னால் உணரக்கூடியதாக இருந்தது. பின்பு எனக்கு வைத்தியம் பற்றிய அறிவுரைகள் சொல்லப்பட்டது. பின்பு அறிவுறுத்தல்கள் சொல்லப்பட்டதிற் கிணங்க எனக்கு தரப்பட்ட (Appionment) தினங்களுக்கு ஒழுங்காக அக்யுபஞ்சர் வைத்தியத்திற்கு செல்வேன். எனக்கு அக்யுபஞ்சர் வைத்தியத்தின் முதல் நாள் அன்று இவ் வைத்தியத்தின் மூலம் இருந்த நோவு, வலிகள் குறைந்து காணப்பட்டன. வைத்தியத்திற்கு சென்று வருகின்ற வேளையில் எனக்கு இருந்த நோவு, வலிகள் சிறிதுசிறிதாக குறைந்துகொண்டே போனது. இலேசாக நித்திரையும் சென்றது. நான் அக்யுபஞ்சர் வைத்தியத்தை ஆரம்பித்து சிறிது நாட்களின் பின்பு பாவிக்கும் மாத்திரைகளை பாவிக்க தேவையில்லாத நிலையில் இருந்து தற்போது ஒரு மாத்திரையும் நான் பாவிப்பதில்லை . காரணம் டாக்டர் திருமதி. வசந்தகுமாரின் அக்யுபஞ்சர் வைத்தியத்தின் மூலம் எனக்கு முன்பு கூறப்பட்ட நோய்கள் பூரண குணமடைந்து தற்போது நல்ல சுகத்துடனும் மனநிறைவுடனும் வாழுகின்றேன். நான் வைத்தியத்திற்கு அங்கு சென்றபொழுது வேறு நாட்டு மக்களும் கூட (ஐரோப்பிய நாடு) வந்து வைத்தியம் செய்வதைக்காணக்கூடியதாக இருந்தது. அவர்களை வினாவியபோது அவர்கள் கூறினார்கள் தாம் தமது நாட்டில் எவ்வளவோ வைத்தியம் செய்தும் மாறாத எமது வருத்தங்களை டாக்டர் திருமதி. வசந்தகுமார் கண்டு பிடித்து அதற்குரிய வைத்தியம் செய்துவருகிறார்கள். அதனால் எமக்கு எவ்வளவோ சுகமாக இருக்கிறது என்று கூறினார்கள். அதனைக்கேட்டவுடன் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். காரணம் எமது தாய் நாட்டில் பிறந்து புலம்பெயர்ந்த கனடா நாட்டில் தனது திறமையால் எமது மக்களுக்கு மட்டுமில்லாது மாற்றினமக்களுக்கும் தனது சேவையின் பொருட்டு எவ்வளவோ உதவியாக இருப்பதையிட்டு மக்களாகியநாம் எல்லோரும் பெருமை அடைய வேண்டும்.

டாக்டரின் மேலதிக தொடர்புகளுக்கு உதயன் பத்திரிகையில் வரும் விளம்பரத்தைப் பார்க்கவும்.

தீராத நோய்களைத் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

Dr.(Mrs.)K.வசந்தகுமார்

(அக்யுபஞ்சர் வைத்தியர்)

D.CA., M.AC.F., M.AC.A.N.A., M.CACA.

-காசநோய்(Asthma)
-நீரழிவுநோய்(Diabetes)
-மனக்குளர்ச்சி(Depressioon)
-தினசம்(Rhintis)
-முட்டுவலி(Rheumatism & Rheumatoid)
-சர்மவியாதிகள்(Skin dieseases)
-வயிற்றுவலி(Gastritis)
-தலைவலி(Headache, Sinustis)
-உடல்பருமன் குறைத்தல்(Loss of Weight)

முதலான தீராத நோய்களுக்கு அழையுங்கள்

Mon-Fri 9:30-12:00, 4:00-8:00
Sat. 9:00-1:00, 3:00-8:00

416 754 4024, 416321 5557
4565 Sheppard Ave. East, #205 McCowan & Sheppard

உதயன் தொடர்புகளுக்கு:

(416)752-1524(416)752-6703

www.uthayan.ca

ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு

எஸ். ஆர். ராஜபாலன் (B.Sc.(Hons) Cey., Diploma in Accounting

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிறிலங்காவில் சிங்கள அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனக் கலவரத்தை தொடர்ந்து ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுத படைகளின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. அதன் விளைவாக, 2001ம் ஆண்டின் இறுதி வரையில் 65,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிரிழந்தனர்.

கடந்த கால் நூற்றாண்டு காலப்பகுதியில் சிறிலங்காவில் இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களைப் பற்றி, உலகளாகிவய ரீதியில் இன்றுவரை பல்வேறு நூல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. எனினும் அனைத்து நிகழ்வுகளையும் முழுமையாக நிரைப்படுத்தி எந்த ஒரு நூலோ அல்லது தொடர் கட்டுரையோ இதுவரை வெளியிடப்படவில்லை. அவற்றைப் பற்றி முழுமையான ஆதரபூர்வமான தகவல்களைப் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களே இதற்கான காரணமாக இருக்கலாம்.

அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட ஓர் இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்வுகள் எவையும் தவிர்க்கப்படுதலும், திரிபுபடுத்தப்படுதலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு கடந்த 2 வருடங்களாக பல்வேறு தகவல் ஊடகங்களின் உதவியுடன் எம்மினத்தின் விடுதலைப் போராட்டம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. எனினும் இந்த வரலாற்றுத் தொடர் முடிந்த வரைக்கும் பூரணத்துவமாக அமைவதற்கு வாசகர்களின் கருத்துக்கள் மிகவும் அவசியம்.

எனவே இந்த தொடரின் மிகவும் முக்கியமான அடுத்த பாகம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்று உங்களது ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. அதே சமயம் இந்தக் காலப்பகுதி (1977-2001) சம்பந்தமான தகவல்கள், புகைப்படங்கள் என்பவற்றை தந்துவத விரும்பும் வாசக நேயர்கள் உதயன் பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

உதயன் தொடர்புகளுக்கு:
தொலைபேசி இலக்கம் 416-752-1524
தொலைநகல் இலக்கம்: 416-752-6703

உங்களது கருத்துக்களை பரிசீலிப்பதற்கு ஏதுவாக இந்த வரலாற்றுத் தொடர் அடுத்த வாரம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் நவம்பர் 22ம் திகதி முதல் இவ்வரலாற்றுத் தொடர் மீண்டும் தொடரும்

- கட்டுரை ஆசிரியர்

வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

1977ம் ஆண்டு நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

1. ராணுவத்தில் தமிழர்களை சேர்த்துக்கொள்வதில்லை என்று 1956ம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கை துரிதப்படுத்தப்பட்டு இலங்கை இராணுவம் முற்றிலும் சிங்கள மயமாக்கப்பட்டது

2. தங்கத்துரை தலைமையில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உருவாக்கப்பட்டது

3. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதில் தீவிரப்படுத்தப்பட்டன.

ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லாம் அறிவாளிகள் அல்ல

அமெரிக்காவிலுள்ள அனைவருக்கும் ஆங்கிலம் தெரியும்.. ஆனால் அங்குள்ளவர்கள் எல்லாம் அறிவாளிகள் என்று கூறிவிட முடியாது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுமே அறிவாளிகள் என்று முத்திரை குத்துவதை தவிர்க்க வேண்டும். தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் முனைவர் எம். பொன்னவைக்கோ தெரிவித்தார்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் ஒரு நாள் கருத்தரங்கு இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர்: பேசுகையில்:

அமெரிக்க நகரங்களில் தொழிற்துறைகளில் முன்னணி வகிப்பது நம்மவர்கள் தான். அதாவது தமிழர்கள் தான் இருந்தபோதிலும் தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு தமிழ் ஒழுங்காகப் பேசவராது. வீட்டில் அநேகமாக ஆங்கில மொழி சொற்களையே பேசுகின்றனர். தமிழர்களாகிய நாம் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற பின்னரே ஆங்கிலம் போன்ற பிற மொழியில் பாண்டித்தியம் பெற முயற்சி செய்ய வேண்டும். தமிழ் மொழியில் கற்பவன் சிறந்த படைப்பாளியாக மாறுகிறான். ஆனால் ஆங்கில மொழியினை கற்பவன் அம்மொழியில் பண்டித்தியம் பெறுவானே தவிர அவனுக்கு சிந்தனை படைப்பு திறமைவராது.

தமிழ் மொழியை விட்டு பிற மொழியை நாம் கற்போமானால் நாம் எதிர்காலத்தில் அறிவற்றவர்களாகவே இருப்போம். பாரத நாட்டில் மும்மொழிக் கொள்கை அமுலாக்கப்பட்ட போது தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் தமிழகத்திலள்ள அநேக மாணவர்களுக்கு தமிழ் பேசத் தெரியாது. ஆங்கில மொழி கற்பவர்களாக மாறினார்கள். அத்துடன் அங்குள்ள பெற்றோர்கள் தம் பிள்ளைகள் ஆங்கில மொழி கற்பதையே விரும்புகின்றனர். இந்நிலை தொடருமாயின் தமிழின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக அமையும். எனினும் இலங்கை வாழ் மக்கள் ஓரளவு திறமையாக தமிழ் மொழியில் பேசுகின்றனர். இதுவரவேற்கக் கூடியது என்றார்.

டாக்டர் சபாபதி இரவீந்திரன்

(BDS, MS, FDSRCS (Eng.)

பல வருடங்கள் அனுபவத்துடனும்
இலங்கையில் விசேட பல் வைத்திய நிபுணராக
கடமையாற்றிய அனுபவத்துடனும், இரண்டு
இடங்களில் சேவை

மிசிசாகா
102- 3025 Hurontario St.
905- 270- 7844

ஸ்காபரோ
303-3852 Finch Ave. E.,
416-292-7004

★ முரசிலிருந்து இரத்தம் கசிவது, முரசு கரைதலை தடுத்தல்
★ நோயுற்ற பழுதடைந்த பற்களைப் பாதுகாத்து, மீளமைத்தல்
★ பற்களை வெண்மையாக்குதல், ஒழுங்குபடுத்தல்,
★பற்களின் அழகை மெருகூட்டுதல்
★ ஞானப்பற்களை அகற்றுதல்
★ பற்களுக்கிடையேயான இடைவெளியினை நீக்குதல்
★ நிரந்தரப் பல் கட்டுதல்
★ வாய் வியாதி சம்பந்தமான சிகிச்சை



SCARBOROUGH OFFICE



MISSISSAUGA OFFICE

ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தில் இந்துசமய, தமிழ் வகுப்புக்கள் ஆரம்பம்

புதிய பாடத்திட்டம் அறிமுகம்

கனடாவில் இந்துசமயமும் தமிழும் வளர்ச்சி பெற்று நிலைக்க பெரும் பிரயத்தனம்

பல்வேறு இடங்களிலும் இருக்கும் இந்துக்களும் பயன் பெறும் வகையில் இந்தப் பாடத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இந்துசமய நெறிகளை மாணவர்கள் ஆர்வமுடன் கற்கும் முறையில் புதிய பாடத்திட்டம் ஒன்றினை ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம் அறிமுகப்படுத்துகிறது. இவ்வாரம் ஞாயிற்றுக் கிழமை (10.11.2002) 5 வயது முதல் 15 வயது வரையிலான மாணவர்களுக்கு தமிழ் சமய வகுப்புக்களை இலவசமாக ஆலயம் நிகழ்த்தவிருக்கிறது. அதற்கான பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

இவ்வாலயம் தயாரித்திருக்கின்ற புதிய பாடத்திட்டம், சமயக் கல்வி என்பதற்கும் மேலாக, வாழ்க்கையில் நன்நெறிகளையும் நல்லொழுக்கத்தினையும் வளர்க்கும் முறையிலும், சமய தத்துவங்களை உணரும் முறையிலும் அமைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

ஆரம்ப கட்டமாக ஆலயத்தில் போதனா வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் சில வாரங்களில் மாணவர்களின் வசதிக்கு ஏற்ப ரொறன்ரோ நகரின் பல்வேறு இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் எனவும் அறியப்படுகின்றது.

இந்து சமய வகுப்புடன், தமிழ் வகுப்பும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பொதுவான பாடத்திட்டத்துடன் அமையும் இவ்வகுப்புகளுக்கான நேர அட்டவணையை ஆலயம் வெளியிட்டிருக்கிறது.

தினம் : ஞாயிற்றுக் கிழமை
இடம் : ரொறன்ரோ துர்க்கைஅம்மன் ஆலயம்

பிற்பகல் 2.00 - தியானம், தோத்திரம்
பிற்பகல் 2.15 - இந்துசமயம் (பழைய முறையில் - தமிழில்)
பிற்பகல் 2.45 - இந்துசமயம் (புதிய முறையில் - ஆங்கிலத்தில்)
பிற்பகல் 3.15 - தமிழ் (பழைய முறையில் - தமிழில்)
பிற்பகல் 3.45 - நன்னெறி (புதிய முறையில் - தமிழ், ஆங்கிலத்தில்)
பிற்பகல் 4.00 - நிறைவு

பாடத்திட்டம் பற்றிய முழுவிபரமும் பின்னர் வெளியிடப்படும்.

15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான விரிவுரைகளும் விரைவில் ஆரம்பமாகும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் கேதார கௌரி விரத பூர்த்தி தினத்தில் 537 பக்தர்கள் நோன்புக் கயிற்றினை அணிந்து கொள்வதற்காக வழிபாடு நிகழ்த்தும் காட்சி. கடந்த ஆண்டினைவிட இவ்வருடம் அதிகமான பக்தர்கள் இவ்வாலயத்தில் நோன்பினை அனுஷ்டித்தனர்.

ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம், சூரன்போர்

நாளை சனிக்கிழமை சூரன்போர் : ஞாயிறு திருக்கல்யாண உற்சவம்

ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் இவ்வருடம் எண்ணற்ற பக்தர்கள் கந்தசஷ்டி விரதத்தினை அனுஷ்டித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் முதன் முதலாக கந்தசஷ்டி சூரசம்ஹார விழா இவ்வாலயத்தில் நிகழ்ந்தபோது, தத்துவத்தினை விளக்கும் வகையில் சிறப்பாக நிகழ்ந்த இவ்விழாவைப் பற்றி யாவரும் புகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

நாளை 9.11.2002 சனிக்கிழமை மாலை 6.30 முதல் சூரசம்ஹார விழா ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தில் நிகழ்ந்து, மறுநாள் இரவு 7.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நிகழும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். கந்தசஷ்டி விரதத்தினை முன்னிட்டு தினமும் ஆலயத்தில் முருகப்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் பூஜைகள் வீதியுலா நிகழ்கின்றன.



கடந்த வருட கந்தசஷ்டி

தீபாவளித் திருநாளில் நிகழ்ந்த சமய அறிவுப் போட்டியில் சிறுவர்கள்

தீபாவளி தினத்தில் சமய அறிவுப் போட்டி ஒன்றினைச் சிறுவர்களுக்காக ஆலயம் நிகழ்த்தியிருந்தது. திடீரென்று போட்டி அறிவிக்கப்பட்டதும் பல சிறுவர்கள் ஆர்வமுடன் பங்குபற்றியிருந்தனர். அநேகமான சிறுவர்கள் அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் 5 சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பங்கு பற்றிய அனைத்துச் சிறுவர்களுக்கும் ஆறுதற் பரிசுகள் வழங்கப்படவிருப்பதாக ஆலயம் அறிவித்திருக்கிறது. பங்கு பற்றிய சிறுவர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்க.

ரொப் குவாலிட்டி பூக்கடை

ஏன் எல்லோரும் இங்கு வருகிறார்கள்? இவர்கள் இயற்கையை இயற்கையாக தருபவர்கள். அழகா? ஆன்மீகமா? அத்தனையும் ரொப் குவாலிட்டி பூக்கடையில் நிறைந்திருக்கிறது.

பூக்கள், பூமாலைகள், மணவறை, பூச்செண்டு, பூக்கூடை, பூசோடனைகள்
மலர் வளையம் பூச்சோடனைகள் casket அலங்காரம் casket spary
மணவறைகளில் பல ரகங்கள் விதம்விதமாய் .... இன்னும் பல

தொடர்பு கொள்க : பிள்ளை

2871 Lawrence Avenue East
Scarborough
Tel : (416) 269 5522 Fax : (416) 269 9784

World Wide TAMIL'S COALITION -WWTC
(For Registration)
C/O Ramalingam Shanmugalingam, International C'oordinator
11373 Ironwood Road, San Diego CA 92131, USA
Tel.& Fax: (858) 547 0754 Email: appuacci@san.rr.com
<mailto:appuacci@san.rr.com>

தரணித் தமிழர் கூட்டணி வெளியிடும்
பத்திரிகை அறிக்கை, நவம்பர் 01, 2002
(Press release from World Wide Tamil's Coalition-Nov.01.02)

தமிழ்மொழி, பண்பாடு என்பனவற்றின் வளர்ச்சி, அவற்றின் உரிமைசான்ற பெருமை, தமிழ் மக்களினதும், தமிழர் அமைப்புக்களினதும் முன்னேற்றம், தரணியெங்கும் வாழும் தமிழ் மக்களிடையே பால், இனம், தேசியம், அரசியல், சமயத் தொடர்புகள், சாதியம் என்ற பேதங்களின்றி ஒற்றுமைப்பட வேண்டி, கூட்டொருமை (Solidarity) அவசியம் என்ற கருத்துக்கள் மிக நீண்டகாலமாக தமிழ்ச் சிந்தனையாளர்களாலும் தமிழ்த் தலைவர்களாலும் அடையாளங் காணப்பட்டு வந்துள்ளன. இச்சிந்தனைக்கு 1999இல் அமெரிக்காவைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் சண்முகலிங்கமும், பன்னாட்டுத் தமிழுறவு மன்றத் தாபகர் பெருங்கவிக்கோ முனைவர் வா.மு. சேதுராமன் அவர்களும் சொல் வடிவம் கொடுத்திருந்தனர். தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரிலே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 8ஆவது மகாநாடு நடைபெற்றபோது, குடைஅமைப்பு ஒன்றியம் ஏற்படத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை, அதன் தலைவர் திரு. சி. செல்லையா, உலகத் தமிழர் ஒன்றியத்தைச் சேர்ந்த முனைவர் இரா. ஜனார்த்தனம், உலகத் தமிழர் மையத்தைச் சேர்ந்த வின்ஸ்ரன் பஞ்சாட்சரம் ஆகியோரும் ஏற்றுக்கொண்டனர்.

இச் சிந்தனைக்கு உலகெங்கும் மேலதிக ஆதரவு பெற்றதன் பின்னர், ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்ணியா மாநிலத்துச் சந்தியாகோ நகரின விடுமுறை அகத்தில் (Holiday Inn, San Diego Californio, USA) ஆறு நாடுகளிலிருந்து தமிழ்ச் சிந்தனையாளர்களும், ஆறு தமிழ் அமைப்புக்களும் ஒக்டோபர் 26-27, 2002 ஆம் நாட்களில் ஒன்று கூடினர். இக் கூட்டத்தில் தரணித் தமிழர் கூட்டணி (**World Wide Tamil's Coalision)** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிச்சார்பற்றதும், சமயச் சார்பற்றதுமான தரணித் தமிழர் கூட்டணி, உலகளாவிய நிலையில் இணைப்பையும் ஆதரவையும் ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறது.

தரணித் தமிழர் கூட்டணி உலகெங்கிலுமுள்ள பல்வேறுபட்ட அமைப்புக்களை பொது நோக்கத்தின் அடிப்படையில் ஒன்றாகச் செயற்படுத்தும் வகையில் செயற்படும். ஆனால் அங்கத்துவமுள்ள அமைப்புக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் தம் நேரிய நோக்கங்களை அடைவதற்குரிய உரிமைகள் மறுக்கப்படமாட்டாது. உறுப்பினராக இணைந்திருக்கும் அமைப்புக்களின் உறுப்பினர்கள் இயல்பாகவே தரணித் தமிழர் கூட்டணியின் உறுப்பினர்கள் ஆகின்றனர். அவற்றின் உறுப்பினர் அல்லாதோரும் உறுப்பினர்களாக வரவேற்கப்படுவார்கள்.

தரணித் தமிழர் கூட்டணிக்கு எவரும் தலைவராகவோ அல்லது ஒருவரோ அல்லது தனிப்பட்ட சிலரோ அதனை நிருவகிக்கவோ முடியாது. ஆனால் அதன் உள்ளக உறுப்பினர்களின் மையக் கருவட்டமானது -ததமிமையம் (**World Wide Tamil's Coalision Nucleus -WWTCN)** அனைத்துலக இணைப்பாளா (International Coordinator), தொடர்புஅலுவலர் (Liaison) ஒருவரைக்கொண்ட பல்வேறு செயற்பாட்டு வட்டங்கள (Active Circles) என விரிவடையும்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் தனது 8ஆவது மகாநாட்டில் அங்கீகரித்த தமிழர் கொடி, தமிழர் கீதம் இரண்டிற்கும் தரணித் தமிழர் கூட்டணியின் மையக்கருவட்டம் தனது உத்தியோக பூர்வமான சகல நிகழ்ச்சிகளிலும் மரியாதை செலுத்தும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

World Wide TAMIL'S COALITION -WWTC (For Registration)
C/O Ramalingam Shanmugalingam, International C'oordinator
11373 Ironwood Road, San Diego CA 92131, USA
Tel.& Fax: (858) 547 0754 Email: appuacci@san.rr.com
<mailto:appuacci@san.rr.com>

பெரிய எண்ணிக்கையிலான உறுப்பினர்களும் அமைப்புக்களும் பின்னணியில் நிற்க, தரணித் தமிழர் கூட்டணி, உலகெங்கிலுமுள்ள அரச நிறுவனங்களுக்கு, மொழி, பண்பாடு சார்ந்த விடயங்களை நடாத்தவும், பரிந்துரைக்கவும், அறிவுறுத்தி இணங்க வைக்கவும், தமிழ்மொழி, இசை, கலைகள், பண்பாடு ஆகியனவற்றை உயர்வடையச் செய்யவும் முயற்சி எடுக்கும்.

தரணித் தமிழர் கூட்டணி, தமிழ் மக்களின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காகவும், 'தரணித் தமிழர் வங்கி' (Global Tamil Bank), தரணித் தமிழர் நூலகம், தமிழர் தகவல் மையம், தமிழ் செயற்பாடுகள், தமிழ்ச் சான்றோர் பற்றிய தரவு மையம் முதலியவற்றை ஏற்படுத்தவும் அயராது பாடுபடும்.

தரணித் தமிழர் கூட்டணி தமிழ் இலக்கியத்திற்கு நோபல் பரிசு கிடைப்பதற்கும், அதே வேளையில் செம்மைசான்ற மொழிகளின் இலக்கிய ஆக்கங்களுக்கான பெறுமதிவாய்ந்த பரிசுத் திட்டம் நிறுவுவதற்கும் தீவிரமாகச் செயற்படும்.

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

Make Your Time Your Own

Earn immediate and long-term income with just a few steps!

Excel Canada offers you an opportunity to become your own boss, and live the lifestyle of your choice. Thousands of people have already discovered this open door to success. Now it's your turn. Just follow a few steps to a lifetime of rewards.

- Experience not necessary
- Work at home
- Bring in a great income
- Offer high-quality products and services you can believe in

It's the chance to join a proven success story with a history of stability and respect in the industry. Call today for more information. Your satisfaction depends on it.

Thiru Saravanapavan
Senior Director /
National Training Director
Tel: 416-707-7900
E-mail: thiru@myexcel.ca

EXCEL
Powered by VarTec Telecom

உங்கள் வீட்டுச் சமையல்களிலும்
விருந்துகளிலும் கட்டாயம் இருக்கவேண்டியது.

So Soya+

இரசாயனக் கலப்பற்ற சோயா உணவு

Tel : 416-293-6555
Fax: 416-293-6459

Not a Genetically Engineered Product

Web: www.so-soyaplus.com
e-mail: info@portello.com

கனடிய நண்பன்
CANADIA NANPAN

தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களை ஊக்கப்படுத்திய உயர்ந்தவர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

- அதிபர் கனகசபாபதி புகழாரம்

தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை கல்விமான்களாக உருவாக்கியவர்களில் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியமும் ஒருவர்.

அத்துடன் 1924இல் ஹொணடி பேரின் பநாயகம், செனட்டர் நாகலிங்கம் ஆகியோரோடு சேர்ந்து ஸ்தாபித்த இளைஞர் காங்கிரஸ் மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்தது சாதிகளற்ற சமுதாயம், சம்பந்தி போசனம், தாய்மொழிக்கல்வி, போன்ற இந்த முக்கியமான விடயங்களுக்கு தொடர்ந்து இவர்களோடு ஒறேற்றர் போராடினார். இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று ஸ்காபரோ ஈஸ்டவுன் உணவக மண்டபத்தில் இடம்பெற்ற ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் நூறாவது பிறந்த தின விழாவில் தலைமையுரையாற்றிய அதிபர் பொ. கனகசபாபதி குறிப்பிடடார். அமரரின் புதல்வர் திரு. கந்தசாமி (கணக்காளர்) மற்றும் ஒறேற்றரின் அபிமானிகள் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி வைபவத்தில் அதிபர் கனகசபாபதி தொடர்ந்து உரையாற்றுகையில், ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் ஒரு காலத்தில் இலங்கையில் அனைவராலும் மதிக்கப்பட்ட ஒரு கல்விமானாக திகழ்ந்தார் என்று புகழாரம்சூட்டினார். மேற்படி வைபவத்தில் திரு. ராஜன் கதிர்காமர், திரு.டி.பி.எஸ். ஜெயராஜ், திரு. பரராஜசிங்கம் ஆகியோரும் இன்னும் பலரும் உரையாற்றினர். இருநூறுக்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் இராப்போசனவிருந்தும் இடம்பெற்றது. இங்கே காணப்படும் படங்கள் விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.



தரணித் தமிழர் ஒன்றிய ஆரம்பக் கூட்டம்

அண்மையில் கலிபோர்னியா மாகாணத்தின் சண்டியாகோ நகரில் இடம்பெற்ற தரணித்தமிழர் ஒன்றியத்தின் ஆரம்பக் கூட்டத்தில் கனடாவிலிருந்து ஒன்பது பிரமுகர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படத்தில் இரண்டாம் நாள் நிகழ்வில் பேராசிரியர் பாலசுந்தரம், உதயன் ஆர்.என். லோகேந்திரலிங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. செல்லையா ஆகியோர் ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்து ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி விவாதிப்பதைக் காணலாம்.



AZ சாரதிகள் தேவை

Truck ஓட்டுவதில் அனுபவமுள்ள சாரதிகள் தேவை. நாளாந்த குறுகிய தூர ஓட்டங்கள், அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படும்

சொந்தமான வாகனம்
(Owner and Operator)
வைத்திருப்போரும் விரும்பத்தக்கது

Harrith Transportation Inc
1071 Midland Ave. Suite 201F
Scarborough. Ont.
Tel: 416 -892- 9940
Tel: 416- 999 -3480
Fax: 416 –757 4222

உதயன் தொடர்புகளுக்கு Tel: 416-752-1524 Fax: 416 752 6703 www.uthayan.ca

இலங்கை வர்த்தக பிரமுகர்கள் கலந்துகொண்ட பொருட்காட்சி

இலங்கையிலிருந்து ஒன்பது வர்த்தகப் பிரமுகர்கள் கடந்த திங்களன்று ரொறன்ரோ றோயல் யோர்க் ஹோட்டல் மண்டபத்தில் ஒரு வர்த்தக பொருட் காட்சியை நடத்தினர். கனடா இலங்கை வர்த்தக சபை இலங்கை தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி வர்த்தகப் பொருட்காட்சியை மலிபன் பிஸகட் நிறுவனம் மற்றும் பிரபல தேயிலை ஏற்றுமதி நிறுவனம் ஆகியவை உடபட ஒன்பது வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டன. "உதயன்" பத்திரிகை, கலாபம் தொலைக்காட்சி,தமிழன் வழிகாட்டி வர்த்தகக்கைநூல் ஆகிய தொடர்புச்சாதனங்களுக்கு விஷேட அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன. இங்கே காணப்படும் படத்தில் இலங்கை வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு ரொறன்ரோவில் உள்ள இலங்கை தூதரக தலைமை அதிகாரி திரு. W.M. சென்விரட்ன, கனடா இலங்கை தமிழர் வர்த்தக சம்மேளன தலைவர் திரு. குலா செல்லத்துரை, போட்டலோ அதிபர் திரு ராஜ். ராஜதுரை உதயன் ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(படம் உதவி ஆதவன்)

மொன்றியலில் நூல் வெளியீட்டு விழா

சென்னையில் 28.09.2002 அன்றும், ரொறன்ரோவில் 03.10.2002 அன்றும் வெளியிடப்பட்ட "அளவெட்டி சிறீசுவின் சில சிறிகதைகள்" என்னும் நூல் வெளியீட்டு விழா இலக்கம் 930 Decarie Blvd, Montreal, Quebec என்னும் இடத்தில் 10.11.2002 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

அத்துடன் இப் புத்தக வெளியீட்டு விழா நடைபெறும் அதே இடத்தில் 10.11.2002 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு பலதரப்பட்ட நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும். அன்பர்கள் வந்து ஆதரவு தருக.

GOLDEN GRIDDLE

GOLDEN GRIDDLE FAMILY RESTAURANTS

Owner<==>Sashi Thadathil

Family Restaurants

உங்கள் வைபவங்களை சிறந்த முறையில் நடத்தவும், பிறந்த நாள் விழாக்கள், சிறிய ஒன்று கூடல்கள் மற்றும் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ளவும் அழையுங்கள்

3090 Eglinton Ave. East

Markham/Eglinton

(416) 788-2450 |sashi1@idirect.com|(416) 265-8429

Rogers

Hi-Speed Internet

24.95 For 4 months

Basic Cable

புதிய இல்லம் செல்கின்றீர்களா
இலவசமாக இணைப்பை பெறுவதற்கும்

Digital Cable

தமிழ் தொலைகாட்சி சேவை
மற்றும் இன்ரநெற் தேவைகளுக்கும் அழையுங்கள்

Sunthar

416 564 6397

416 267 3024

(இந்தச் சலுகை எமது வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே)

யாழ் வைத்தீஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக்கல்லூரியின் பழையமாணவர் பொதுக்கூட்டமும் முன்னாள் உபஅதிபர் திரு. சி. இராசதுரை ஆசிரியரின் வரவேற்புக்கூட்டமும் சென்ற ஒக்டோபர் மாதம் 6ம் திகதி மக்கோவன் வீதியில் உள்ள அல்-ரவுன் மாடிக் கட்டிட பொதுஅறையில் இடம்பெற்றது. உப அதிபர் தனது துணைவியாருடன் கனடாவுக்கு சுற்றுலாப்பயணியாக வந்துள்ளார்.

திரு. எல். பக்கிரிசாமி தலைமையில் இடம்பெற்ற வரவேற்புக்கூட்டத்தில் பல பழைய மாணவர்கள் அவரை வரவேற்று கல்லூரிக்காக அவர் ஆற்றியஅளப்பரிய சேவையைப்பாராட்டி சொற்பொழிவாற்றினார்கள். அடுத்து புதிய உத்தியோகஸ்தர் தெரிவு இடம்பெற்றது. அதில் தலைவராக எல். பக்கிரிசாமியும்,உபதலைவராக த. விநாயகமூர்த்தி, செயலாளராக எஸ். சிவரத்தினம், பொருளாளராக எஸ் பழனிச்சாமி ஆகியோருடன் 7 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பலரும் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தனர். எனினும் பொது ஊடகங்கள் மூலம் இதுபற்றி விளம்பரப்படுத்த முடியாது போனமைக்கு வருந்துவதாகவும் கூட்டத்துக்கு வந்தோருக்கும் நன்றி தெரிவித்தும் செயலாளர் நன்றி உரைகூறினார். கூட்டம் இராப்போசனத்துடன் முடிவடைந்தது. சங்கத்தில் சேரவிரும்புபவர்கள் தொடர்புகொள்ள திரு. எஸ். சிவரத்தினம்: (416)746-9962

அமெரிக்கா ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம்

நிகழும் சித்திரபானு வருஷம் ஐப்பசி மாதம் 20ந்திகதி 5.11.2002 தொடக்கம் கந்தசஷ்டி திருவிழா நடைபெற்று ஐப்பசி 24ந்திகதி (தமிழ்) 9.11.2002 சனிக்கிழமை மாலை சூரசம்ஹார உற்சவம் நடைபெறுகிறது. அன்றுமாலை திருகல்யாண உற்சவமும் நடைபெறுகிறது. அடியார்கள் யாவரும் பங்குபற்றி இஷ்டசித்தி பெற்றுய்யுமாறு கோவில் தர்மகர்த்தா சபையினால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். தொடர்புகளுக்கு: 15855331970

கிறிஸ்தவர்களை பயந்தவர்கள் என்று ஜெயலலிதா எண்ணி விட்டார்

கிறீஸ்தவ போதகர் கூறுகிறார்

கிறிஸ்தவர்கள் பயந்தவர்கள் அல்ல. ஒன்றுபட்டு போராடி ஜெயலலிதா ஆட்சியை மாற்றுவோம் என்று சென்னை உபவாச கூட்டத்தில் போதகர்கள் ஆவேசமாக கூறினர். தமிழக அரசின் மதமாற்ற சட்டத்தை எதிர்த்து வடசென்னை போதகர்கள் ஐக்கியத்தின் சார்பில் கிறிஸ்தவ விழிப்புணர்வு உபவாச (உண்ணாவிரதம்) கூட்டம் சென்னை ராயபுரம் மரகதம் மாளிகையில் நடந்தது. இதற்கு அந்த அமைப்பின் தலைவர் போதகர் ஆர். கே. ஜெயச்சந்திரன் தலைமை வகித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த சட்டம் ஜனநாயக நாட்டில் மனித உரிமையை பறிப்பதாகும் . கிறிஸ்தவர்கள் ஏராளமான அரசர்களின் கட்டளைகளை சந்தித்து அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார்கள்.

நல்வழி காட்டுவதும், நல்ல போதனைகளை செய்வதும் தேசத்தில் சொல்லப்பட்ட கட்டளை. நன்மை செய்வதும் பிறருக்கு உதவிசெய்வதும் இயேசு கற்றுக்கொடுத்ததும் ஆகும். இந்துதத்வபிராமண ஆதிக்கத்துக்காகவே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதைக்கண்டு கிறிஸ்தவர்கள் பயந்தவர்கள் அல்ல. தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு விரோதமாக அவர்களது பொருளாதார முன்னேற்றத்தை தடைசெய்வதற்காக இந்த சட்டம் வந்துள்ளது. நாம் ஒன்றுபட்டு நமது ஒட்டுரிமை மூலம் இந்த ஆட்சியை மாற்றுவோம். இவ்வாறு அவர் கூறினார். இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு

இந்த சட்டம் கிறிஸ்தவர், இஸ்லாமியர், தலித் மற்றும் பின்தங்கிய பிரிவினர் அனைவர் மீதும் திணிக்கப்பட்டுள்ளது. இது அமைதிப்பூங்காவான தமிழகம் கலவர பூமியாக மாற ஏதுவாகும். தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்கள் சமூக பொருளாதார நிலை உயர சிறுபான்மை மக்கள் செய்யும் சமூகப்பணிக்கு இச்சட்டம் தடையாக உள்ளது. வேத புத்தகம் கூறும் கடமைகளுக்கு இந்த சட்டம் எதிரானது. விவிலியம் இயேசு கிறிஸ்துவை உலகம் முழுவதும் அறிவிப்பதும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கி உள்ளோருக்கு தேவைப்படும் உதவிகளை செய்ய வேண்டும் என்பதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமையாகும். இதனால் தமிழக அரசு இயற்றி உள்ள அவசர சட்டத்தை திரும்பப் பெற்று ஜனநாயகத்தை காக்க வேண்டும்.

இணுவில் திருவூர் ஒன்றியத்தின் அறிவித்தல்

இம்மாதம் 2ம்திகதி சனிக்கிழமை ஸ்காபரோ நகர மண்டபத்தில் நாம் நடத்திய பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்படடுள்ளனர். நிர்வாகசபைத் தலைவர்: த. சிறீஸ்கந்தராஜா, செயலாளர்: மு.கிருபாகரன், பொருளாளர்:சோ.சிவநாயகம், உபதலைவர்.சீ.விக்கினேஸ்வரன், உபசெயலாளர்: இ.குகன், த.வசந்தபாலன்,பெ.கணேசமூர்த்தி,செ.பத்மகாந்தன், த.விக்கினேஸ்வரன், து.நடராசா, ப.செல்வச்சந்திரன், திருமதி.லோ.கௌரிவதி, செ.தளையசிங்கம், ஸ்ரீ.சந்திரகாந்தன், ச.ஜீவானந்தன்

போதகர்குழு: ஆ.கந்தையா, க.யோகர், சீ.கேதீஸ்வரன், அ.சிறீதரன்,ஆ.சுப்பிரமணியம், சு.தில்லையம்பலம், சி.கணேசலிங்கம், சி. பரராசசேகரம், து.தனபாலன், த.நாகராசா. புதிய அங்கத்தவராக இ.இராசேந்திரம், த. இராசேந்திரம், பே.பத்மநாதன். இத்தேர்வுக்கு தெரிவாட்சி உத்தியோகத்தராக திரு. ஆ. சுப்பிரமணியம் பணிபுரிந்தார்.

பழைய சம்பவங்களை கிளறவேண்டாம்

நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக பாலசிங்கம்



இலங்கையில் நடந்த பழைய சம்பவங்களைக் கிளற வேண்டாம்- இது சமாதான முயற்சிகளுக்கு நன்மையை தராது என்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். கொழும்பில் 6 ஆண்டுகளுக்கு முன் வங்கி மீது புலிகள் நடத்திய குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை குறித்து பாலசிங்கம் அதிருப்தி வெளியிட்டார். தாய்லாந்து 2ஆம் கட்ட பேச்சுவார்த்தை நிறைவடைந்தபின் நிருபர்களிடம் அவர் ஞாயிறன்று கூறியதாவது:

அத்தகைய சம்பவங்கள் போர் நிகழ்வுகள் அவற்றுக்கு இரு தரப்பினருமே பொறுப்பு. பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளித்தால், புலிகள் தமிழர் பகுதிகளில் நடத்தி வரும் நீதிமன்றத்தில் இலங்கை அரசியல் தலைவர்களுக்கு 2000 ஆண்டுகள் வரையில் தண்டனை கொடுக்க முடியும்.

அரசாங்கம், குறிப்பாக நீதித் துறை இத்தகைய பழைய விவகாரங்களைக் கிளற வேண்டாம். பிரபாகரனுக்கு எதிரான தீர்ப்பு அமைதிப் பேச்சுக்கான உற்சாகத்தைக் குன்றச் செய்துவிடும். ஆனால் பேச்சுவார்த்தைக்கு பாதிப்பு நேராது என்றார் பாலசிங்கம்.அந்தத் தீர்ப்பு வெளியான நாளில் பேச்சுவார்த்தை தொடங்கும் முன், பாலசிங்கம் குழுவினர் தங்களது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

வெளிநாட்டவர்கள் இனிமேல் சவூதி அரேபியாவில் சாரதிகளாக வேலை பார்க்க முடியாது

சவூதியில் உள்ள வெளிநாட்டு பிரஜைகள் சாரதியாக தொழில் பார்க்கும் தடைச்சட்டம் ஒன்றை அந்நாட்டு அரசாங்கம் அமுல்படுத்தியது. எதிர்வரும் 6 மாதங்களில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சவூதி இளவரசர் அப்துல் லாஹ் பின் அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார். சவூதி அரேபிய பிரஜைகள் அண்மைக்காலமாக தொமில் வாய்ப்புக்களை இழந்து வருகின்றனர். சுமார் 12 வீத சவூதி பிரஜைகள் தொழிலற்றவர்களாக இனம் காணப்படுகின்றனர். உள்நாட்டுப் பிரஜைகள் எதுவித வேலைவாய்ப்பும் இன்றி இருப்பதற்கு காரணம் வெளிநாட்டுப் பிரஜைகள் சகல தொழில் துறைகளிலும் வேலை பார்ப்பதே என்று சவூதி அரேபிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் வாகன ஓட்டுனராக தொழில் பார்ப்பவர்களில் சுமார் 50,000 பேர் வெளிநாட்டுப் பிரஜைகளாவர். இவர்களில் 90 வீதமானவர்கள் தெற்காசிய நாடுகளில் இருந்து வந்தவர்களாகும் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சவூதி அரேபியாவில் அமுல்படுத்தப்பட உள்ள இந்தச் சட்டத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

The Greatest Gift You Can Give Your Child Is
Confidence & Self Discipline
TAEKWONDO

CONFIDENCE
With confidence, nothing is impossible.....
- Give your child a brighter future
- A positive "Yes I Can" attitude
- The winning habit

SELF DISCIPLINE
Improve your child in these areas.....
- Lack of self discipline
- Negative attitude and habits
- Concentration problems and low grades
- Abuse at school due to shyness or overweight
- Positive role models in their lives

FREE
1 Free Trial Lesson
Free Uniform At Sign-up
($50 Value)

Bring This Coupon for Free Uniform!!

Would you rather give your child a toy, video tapes, playstation or Health and Confidence.... The most valuable things in Life ?

Call Olympian Martial Arts Studio NOW ! (416) 501-9613 or (416) 289-4166
Olympian Martial Arts is located Inside Fitness Heaven
1200 Markham Road (Lower Level), Scarborough, Ontario M1H 3C3

தங்கள் ஆதரவுக்கு நன்றி

சேகர் ஜீவலர்ஸ்
Sekar Jewellers

அழகிய டிசைன்களில் மலிவான விலையில்
தங்க ஆபரணங்கள்

சிறந்த கைக்கடிகாரங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

G04 - 3852 Finch Ave. East, Scarborough ON. M1T 3T9
Tel: 416-299-5479, 416-412-0952 Fax: 416-299-0968

தமிழகத்திற்கு நல் அறிஞர் அண்ணா! தமிழீழத்திற்கு நம் அமிர்தர் அண்ணா!!

(பாகம்- 11)

சட்டத்தரணி. கனக மனோகரன்

"கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்
கேளாரும்
வேட்ப மொழிவதாகும் சொல்"

சொல்லாற்றலைச் சொல்ல தெய்வப்புலவர் பாவித்த சொற்பதங்கள் இவை. பேச்சை கேட்பவர் மயங்க வேண்டும்; கேளார் வெதும்ப வேண்டும்.

தெளிவுறவோ அறிந்திடுதல்
தெளிவு தர மொழிந்திடுதல்"

பேச்சுக்கலைக்கு பாஞ்சாலி சபதத்தில் பாரதி வகுத்த வரைவிலக்கணம் இது; வரையறை என்றும் சொல்லலாம்!

அசட்டுத் துணிச்சலைப் பெற்று, அறிவுத் தெளிவற்றுப் பேசுவதை வள்ளுவரும் சாடப் பார்க்கிறோம்.

"அரங்கு இன்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூல் இன்றிக் கோட்டி கொளல்"

அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் பேச்சு ஆற்றலோடு தான் கரிசனை கொண்டிருந்த துறைகளில் எல்லாம் கலக்கமற்ற அறிவையும் கொண்டிருந்தார்.

அருந்தமிழையும் ஆய்ந்தவர் ஆங்கிலத்திலும் தோய்ந்தவர்

பேசும் பெரும் கலையிலும் அருந் தமிழிலும் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் அமிர் அண்ணன் ஆழ்ந்த புலமையைக் கொண்டிருந்தார். 1970களின் முற் பகுதியில் ஒரு நாள் இலங்கை அரசுகளின் ஊதுகுழலாக உள்ள இலங்கை வானொலியின் ஆங்கில ஒலிபரப்பில், 'ஆங்கில இலக்கியத்தில் அறிஞரான திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அறிஞர் பேனார்ட் ஷா பற்றி பேசுகிறார்கள்' என்ற அறிமுகக் குறிப்புடன் பேசும் வாய்ப்பை அவருக்கு வழங்கியிருந்தது.

அமரரின் "பவள விழா" வில் பிரதம அதிதியாகப் பங்குகொண்டு சிறப்பித்த அறிஞர் குமரி அனந்தன் வசிட்டர் வாயால் 'பிரமரிஷி' பட்டம் பெற்றவர். இலக்கியச் செம்மல் கலைஞர் கருணாநிதியிடம் "இலக்கியச் செல்வர்" பட்டம் பெற்றவர். அவர் தன் சிறப்புரையில்.....

"தமிழ் நாட்டில் தலைசிறந்த பல தமிழ்ப் பேச்சாளர்களும் இருந்திருக் கிறார்கள். ஆங்கிலப் பேச்சாளர்களும் இருந் திருக் கிறார்கள். ஆனால் தமிழிலும் ஆங்கிலத்திலும் அமரர் அமிர்தலிங்கம் அவர்களைப் போல் சிறப்பாகப் பேசக்கூடிய இருவர் மட்டுமே இருந்திருந்தார்கள். ஒருவர் நாவலர் சத்தியமூர்த்தி அவர்கள். இரண்டாமவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பொதுவாக ஆளும் கட்சியினரால் தங்களுக்கு ஆபத்து வரும் என்ற பயத் தில் அவர்கட்கு எதிராக எதிர்க்கட்சி யினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவது தான் உலக நியதி.

1956 ஆனியில் ஆட்சிமன்றில் ஓர் ஆளும் இனத்தவன் அமிர்தலிங்கம் அவர்களைப் பார்த்து.."நான் தனிச் சிங்களத்தை உன் தொண்டைக்குள் திணிப்பேன்" என்றான். அவன் வாய் மூடமுன் திரு. அமிர்தலிங்கம் அவனைப் பார்த்து "அதை நான் உன் முகத்தில் துப்புவேன்" என்று சொன்னாராம். இந்த அளவிற்கு சாமர்த்தியமும் சமயோசிதத் திறனும் தைரியமும் உள்ள அவரால் தங்களுக்குப் பிரச்சினை வரும் என்று பயந்துதான் ஆளும் இனம் அவரில் அவநம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது' என்று குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணாவும் அமிர்தர் அண்ணாவும்

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுச்

அகிலத்தில் அழுகையுடன் பிறந்த நாள் 26-08-1927

அகிலத்தை அழவைத்து அகன்ற நாள் 13-07-1989

சட்டசபையில் விநாயகம் என்ற உறுப்பினர் அறிஞர் அண்ணாவைப் பார்த்துச் சொன்னார் 'Your days are numbered" உடன் அண்ணா இறுத்த பதில் 'Nevertheless my steps are measured"

ஒரு நாள் யாழ் நீதவான் மன்றில் ஒரு காங்கிரஸ்வாதியான ஒரு குற்றவியல் சட்டவாதி அமிர் அண்ண னைப் பார்த்துச் சத்தமிட்டார். 'You are barking like a dog" சட்டமேதை அமிர் உடன் பதிலுக்குச் சொன்னது 'You are jumping like a pup"

அரை நூற்றாண்டுக்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. ஒரு நாள் திராவிடர் கழகப் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஈ.வே.ரா. பெரியார்... உணர்ச்சிக் கொதிப்பில் "திராவிடர் கழகத்திற்கு முட்டாள்கள் தான் தேவை; முட்டாள் கள் தான் தேவை" என்று பேசிவிட்டு அமர்கிறார். அடுத்து அண்ணாத்துரை அவர்கள் பேச ஆரம்பிக்கிறார். அந்த நிலையில் எழுத்து உருவில் வந்த கேள்வி மேடையில் இருந்தவர்களை தடுமாற வைக்கிறது. 'பெரியார் ஏன் அப்படிப் பேசினார்?' பெரியாரின் தரத்தை தாழ்த்தாமல் சரியான பதில் எப்படிக் கொடுப்பது?

பேசிக்கொண்டிருந்த இறுதிப்பேச்சாளர் அறிஞர் அண்ணா கைகளில் அக்கேள்வித் தாள் கொடுக்கப்படுகிறது. அண்ணா படித்துவிட்டுச் சொன்னார் "பெரியார் பேசியதில் என்ன பிழை இருக்கிறது? நானுந்தான் சொல்கிறேன். திராவிடர் கழகத்திற்கு முட்டாள்கள் தான் தேவை. முட்டாள்கள் தான் தேவை. ஏன் தெரியுமா? எங்கள் திராவிடர் கழகம் முட்டாள்களை அழைத்து புத்திசாலிகள் ஆக்குகின்ற புனித பணியைத் தானே செய்து கொண்டிருக்கிறது.... (கைதட்டல் அடங்க நெடுநேரம் எடுத்ததாம்)

இழித்ததும் சரி அழைத்ததும் சரி

இஃதோரன்ன ஒரு ஈழத்து எழிற் காட்சியை உங்கள் நினைவுத்திரையில் ஓட விடுகின்றேன். இடம், பொருள் ஏவல் புரிந்து, இடக்கரடக்கல் தெரிந்து காலம், இடம், சம்பந்தப்படும் தலைவரின் பெயர் இவைகளை நான் தவிர்க்கின்றேன்.

வெவ்வேறு கட்சிக் கொடிகள் கட்டி கச்சை கட்டி நாம் போராடி காலமது. எனின் இயக்கங்களின் இயக்கங்களோ கண்டனங்கள் சொல்பவர்களை கண்ட துண்டம் ஆக்கும் கண்திருஷ்டி பட்ட அரசியலோ அன்று நடந்ததில்லை. கண்டனங்களைக் கொடுத்து கண்டனங் களை ஏற்ற ஆரோக்கியமான அரசியல் அன்றிருந்தது. வழமையான இறுதிப் பேச்சாளரான அமரர் அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் தனது பேச்சில் ஒரு அரசியல்வாதியை (MR. X ஐ) திட்டுகிறார்.

ஒரு கேள்வி வருகிறது.அமிர் அண்ணனுக்கே அதில் பிரத்தியேகமான வினாக்கணை தொடுக்கப்பட்டிருந்தது. "உங்கள் பேச்சின் முற்பகுதியில் (MR. X) அவர்களை கொள்கை இல்லா தவர் என்று திட்டினீர்கள். ஆனால் பிற்பகுதியில் அவரை உங்கள் கட்சிக்கு வருமாறு வருந்தி அழைத்த தாகவும் சொன்னீர்கள். ஒரு கொள்கை இல்லாத வரை ஏன் வருந்தி அழைத்தீர்கள்?'

மேடையில் அன்றைய பா.உ.கள் 7,8 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் பேசுகிறார்கள். யோச னையில் ஆழ்கிறார்கள். கேள்வியைக் கொடுத்தவர் அப்பகுதியின் பெரிய சண்டியன். பதிலை எதிர்பார்த்து மேடை அருகில் நிற்கிறார்.

அப்போது அமிர் தன் பேச்சை முடித்த பின்னர் கேள்விகட்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் பேச்சினை முடிக்கின்ற நேரத்தில் இக் கேள்வி கொடுக்கப்படுகிறது.

கேள்வியை உரத்த குரலில் ஒலிபெருக்கியில் வாசித்தார். உடன் பதில் வினாவைத் தொடுத்தார்.

"இதில் என்ன பிழை இருக்கிறது? இந்த அரசியல்வாதி கொள்கை இல்லாதவராக இருப்பதால் திட்டினேன். நல்ல ஒரு கொள்கையைக் கொடுப் போம் என்ற நல்லெண்ணத்தோடு எங்கள் கட்சி வரும்படி வருந்தி வருந்தி அழைத்தேன்...'(கரகோசம் அங்கும் நெடுநேரம் ஒலித்தது)

வள்ளுவனைத் துணைக்கு அழைத்தார்! வல்ல அமிர் பதில் அளித்தார்!!

இன்னொரு மேற்கோளையும் காட்ட முற்படுகிறேன்.. 6-2-1975இல் இடம்பெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வாவை எதிர்த்து அமரர் தோழர் வி. பொன்னம்பலம் அவர்கள் போட்டி இட்டார். அவர் அளவெட்டிப் பகுதியின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவராக அப்போது இருந்தார். "எனது தேர்தலுக் குரிய கட்டுப்பணத்தை எங்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர் களே செலுத்துவார்கள்" என்ற பகிரங்க அறிவித்தலை "வி.பி" அவர்கள் செய்திருந்தார். மேற்படி சங்க ஊழியர் கள் இணைந்து அங்ஙனமே கட்டுப் பணத்தை செலுத்தியிருந்தார்கள்.

இப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமிர் அண்ணன் "தோழர் வி.பி. அவர்கள் இப்படிப்பட்ட அறிவித்தலைச் செய்வதன் மூலம் சர்வாதிகாரமாக நடந்துள்ளார். ப.நோ.கூ. ச. ஊழியர்களின் ஜனநாயக உரிமையைப் பறித்துள்ளார் என்று பேசினார்.

அடுத்த பிரசாரக் கூட்டத்தில் "வி.பி" அவர்கட்கு ஆதரவாளர்களாக இருந்த சில சங்க ஊழியர்கள் கூட்டாக கையொப்பம் இட்டு ஒரு கடிதத்தை அமிர் அவர்களுக்கு கொடுத்தார்கள்.

"நாங்கள் சுயவிருப்பத்தின் பேரில் தான் கட்டுப்பணத்தை செலுத்தினோம். எங்கள் சம்மேளனத்தலைவர் எங்கள் ஜனநாயக உரிமையில் தலையிட வில்லை. எனவே நீங்கள் உங்கள் கூற்றை வாபஸ் பெறுவதோடு அவரிட மும் எங்களிடமும் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்." அப்போது அமிர் அண்ணன் அளித்த பதில் இலக்கிய நயத்தோடும் ஏற்கும் தரத்தோடும் அமைந்தது. தோழர் வி.பி. அவர்கள் தான் உங்களும் பதவி தந்தவர்; பதவி உயர்வையும் தருபவர். உங்களை வேலையால் இடை நிறுத்தும், நிரந்தரமாக நீக்கும் அதிகாரங்களும் அவருக்கு உண்டு. அவர்கள் உங்களைக் கேட்காமலே நீங்கள் தான் எனக்குரிய கட்டுப்பணத்தை கட்டு வீர்கள் என்று அறிவித்தல் கொடுத் திருந்தார். இப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் விரும்பினால் என்ன விரும்பா விட்டால் என்ன கட்டுப்பணத்தை நீங்களே கட்டியாக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி அவர் சர்வாதிகாரமாக நடந்து உங்கள் ஜனநாயக உரிமையில் தலை யிட்டுள்ளார்.

"வேலொடு நின்றான் இடுஎன்ற போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்பது திருக்குறள். இதன் பொருள்... செங்கோல் ஏந்துகின்ற மன்னன் குடிமக்களிடம் பொருள் கொடு என்று கேட்பது, கொல்லும் வேலுடன் கள்வன் வழிமறித்து இருப்பதை எடு என்று கேட்பதை ஒத்த கொடுஞ்செயல் ஆகும்.

எதிரிகளாய் இருந்தனர் பகைமையை நினைந்திலர்

அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களும் தோழர் "வி.பி." அவர்களும் எதிரும் புதிருமாக இருந்தவர்கள்; எதிரிகளாக நடந்தவர்கள். எனின் என்றுமே பகைவர்களாய் இருந்திலர். பட்டி மன்றுகளில் இருவரும் முட்டி மோதிய நிகழ்வுகள் பல. அமிர் அண்ணனின் பதிவுத் திருமணம் காலையில் நடக்கிறது. அன்று மாலையே அவர் கையில் பூட்டிய காப்புடன் கரவெட் டிக்கு தன்னுடன் சொற்போர் புரிய வந்த நிகழ்ச்சியை அமரரான அமிர்தர் பற்றிய கட்டுரையில் வி. பி. அவர்கள் குறிப்பிடுகிறார். திருமதி மங்கை அமிர்தலிங்கமும், திருமதி பூரணம் பொன்னம்பலமும் ஆத்ம நண்பிகள்..; சங்கீதப் படிப்பை இரு வரும் முடித்த பின் னரும் இங்கிதமாக நட்பு இவர்களிடையே தொடர்ந்தது. அதற்கு அவர்களின் கணவர்கள் தங்குதடைகள் விதித்ததில்லை....

பிந்நாளில் இந்த இரு தலைவர் களும் ஒரே கொள்கையை பின்பற்ற முற்பட்டு ஒரு புஸ்பமாலிகாவின் இருமலர்களாக மாறி இருந்தார்கள்.

பேசும் கலை தெரிந்த "வி.பி" அவர்களின் இன்னுயிர் இக்கனடிய மண்ணில் பேசுகையில் பிரிந்தது. அதற்கு முன்தினம் அவர் என்னுடன் லான்ஸ்டவுன் தமிழர் கூட்டுறவு இல்ல வாயிலில் சிறிது நேரம் பேசினார். அமிர்தலிங்கத்தைப் பற்றி நிறைய எழுதப் போகிறேன் என்றார். மறுநாள் ஆரம்பித்த எழுத்து நீண்ட தொடர்கதை ஆகாமல் இடையில் விடு கதை ஆகியது எம் துரதிஷ்டம். இல்லையேல் பொற்புள அமிர்தர் பற்றிய இன்னோர் அற்புத அடையாள ஆவணம் - அமரகாவியம் எமக்குக் கிடைத்திருக்கும். (தொடரும்)

பயணம்

ஆசிரியர்: ஸ்ரீபதி சிவனடியான்

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கான உதயனின் விஷேட இணைப்பு

அம்மா அமிர்தானந்தமாயி

அருள் வலம்

சட்டத்தரணி முருகேசு சண்முகநாதன்

1999ம் ஜூலை மாதம் 15ம் திகதி அதிகாலை மணி 12:45. பொலிஸ் கார் என்பதற்கான அடையாளம் எதுவும் இல்லாத வாகனம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வில்லியமும் ஜுவானும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது ஒரு தேவாலயத்தின் முன் பெரும் தொகையான மக்கள் காலணிகள் எதுவும் இல்லாது திரண்டு நிற்பதைக் கண்டார்கள். பொலிஸாரைப் பொறுத்த அளவில் காலணிகள் எதுவும் அணியாது எவரும் காணப்படின் அவர்கள் வீடு அற்றவர்களாகவே இருப்பார்கள். அதனால் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்கள். தங்களது வாகனத்தை நிறுத்தி தேவாலயத்தின் முன் நின்றவர்களை விசாரித்தார்கள். தென் இந்தியாவில் உள்ள குக் கிராமம் ஒன்றில் அவதரித்து உலகம் முழுவதிலும் உள்ளவர்களால் நன்கு அறியப்பட்ட புனிதரான அம்மா தனது வருடாந்த உலக விஜயத்தின் போது நியூ யோர்க் வந்திருப்பதாக அவர்களுக்கு பதில் தரப்பட்டது.

அம்மா தன்னை நாடி வருபவர்களை அரவணைப்பதன் மூலம் அவர்கள் மீது தனக்குள்ள பரிபூரண அன்பை வெளிப்படுத்துவடன் அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் அங்கிருந்தவர்களில் ஒருவர் தெரிவித்தார். உள்ளே அப்படி என்னதான் நடைபெறுகின்றது என்பதை நேரிலேயே பார்த்துவிடத் தீர்மானித்த பொலிஸார் உள்ளே நுழைந்தார்கள். வில்லியமும் ஜுவானும் உள்ளே நுழைந்த போது ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிறைந்திருந்தார்கள். தென் இந்திய பஜனை அவர்கள் காதில் விழுந்தது. பாரம்பரிய காவி உடை அணிந்த அம்மாவின் சீடர்களுடன் வேறு சிலரும் தரையில் அமர்ந்து பலவகையான வாத்தியங்களை இசைத்து அற்புதமாக அம்மாவினால் இயற்றப்பட்ட பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

மேடையில் அம்மா சக்தியே நேரில் வந்தது போன்று அமர்ந்திருந்தார்கள்.அவரை நோக்கி சீருடையில் இரு பொலிஸ்காரர்கள் பூரண ஆயுதபாணிகளாகச் செல்வதைப் பார்த்த மக்கள் கைகொட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். பொலிஸார் முழந்தாளில் அமர்ந்து வணங்கிய போது அம்மா அவர்களை தனது நெஞ்சுடன் அணைத்து ஆசீர்வதித்தார். ரோஜா இதழைத் தந்து அனுப்பி வைத்தார். தாங்கள் பெற்ற எதிர்பாராத இந்த அனுபவத்தினால் தங்களை சிறிது மறந்து நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ள கோடிக்கணக்கானவர்கள் தங்களின் கண்கண்ட தெய்வம் என்று கொண்டாடும் ஒரு தெய்வ அதவதாரத்தினால் தாங்கள் அணைத்து ஆசீர்வதிக் கப்பட்டதென்பது தெரியாது.

பல்லாயிரக்கணக்கான அற்புதங்களை அவர் நிகழ்த்தியிருந்தார் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள். அம்மா என்றும் அம்மாச்சி என்றும அம்மா அமிர்தமாயி என்று அவர் அழைக்கப்படுவதையும் அவர்கள் அவரைச் சந்திப்பதற்கு முன் அறியமாட்டார்கள்.அம்மா 1953ம் ஆண்டு கேரளாவில் உள்ள பறயன்கடவு என்னும் மீனவ கிராமத்தில் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சூடாமணி. சிறுவயதிலேயே தான் ஒரு தெய்வப் பிறவி என்பதை சூடாமணி பல வழிகளிலும் காட்டினார். ஆறு மாதத்தில் நடந்தார். ஒரு வயதாவதற்கு முன் தாய் மொழியான மலையாளத்தில் சரளமாகப் பேசினார். இரண்டு வயதில் கிருஷ்ணரைப் போற்றி பஜனை செய்தார். இறையுடன் ஒன்றும் அவரது தன்மையை உணராத அவரது பெற்றோர் அவர் மற்றப் பிள்ளைகள் போன்று இருக்காமல் விசித்தரமாக இருக்கிறாரே என்று கவலைப்பட்டார்கள்.

ஒருவரும் கற்றுக் கொடாமல் அவர் எவ்வாறு எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்கிறார் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. வயது ஏற ஏற சூடாணியின் பஜனைகளும் பிரார்த்தனைகளும் அதிகமாகின. ஐந்து வயதில் அவர் கண்ணனை நினைந்து உருகினார். கண்ணீர் மல்க ஆராதனை செய்தார். அவது உதடுகள் எப்பொழுதும் அசைந்தபடியே இருந்தன. அவர் பிரார்த்தனையில் மூழ்கியிருக்கிறார் என்பதை அறியாத பெற்றோர் தங்கள் மகளுக்கு மனோ வியாதி ஏற்பட்டு விட்டதோ என்று கலங்கினார்கள்.

மற்றப் பிள்ளைகளைப் போலவே அவரும் வரவேண்டும் என்று நினைத்த அவர்கள் எடுத்ததற்கெல்லாம் அவரைத் தண்டித்தார்கள். ஐந்து வயதில் சூடாமணி பாடசாலையில் சேர்ந்தார். அவரது அபார ஞாபக சக்தியும் புத்திக் கூர்மையும் படிப்பில் அவரை பிரகாசிக்க வைத்தன. அவரது தமயனும் தமக்கையும் அதே பாடாசாலையில் படித்து வந்தார்கள். எனினும் அவர்கள் தங்களது சகோதரி போன்று படிப்பில் சுட்டியாக இருக்கவில்லை. தங்களை ஆசிரியர்கள் திட்டுவதும் சகோதரியை அவர்கள் பாராட்டுவதும் அவர்களுக்கு எரிச்சலைத் தந்தன. அவர்களும் தங்கள் பங்கிற்கு சூடாமணியை முடிந்த அளவு தொல்லைப் படுத்தினார்கள். சூடாமணிக்கு ஒன்பது வயதாவதுக்குள் அவரது தாயார் 13 தடவைகள் பிரசவித்து விட்டார். எனினும் எட்டு பிள்ளைகள் தான் உயிர் பிழைத்தன. அடிக்கடி குழந்தை பெற்றதால் தாயார் நோய் வாய்ப்பட்டார். தமயனும் தமக்கையும் கல்லூரிக்குச் சென்று விடவே வீட்டு வேலைகள் எல்லாம் சூடாமணியின் தலையிலேயே விழுந்தன. நாலாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த அவரால் அவரது வயதுக்கு செய்ய முடியாது கடினமான வேலைகளைக கூட செய்ய வேண்டியதாயிற்று. சூடாமணியின் கறுப்பு நிறமும் குழந்தைகளுக்கு இல்லாத விசித்திரமான குண இயல்பும் அவரது பெற்றோரை ஏனைய பிள்ளைகளிலும் பார்க்க தரக் குறைவாகவே நடத்த வைத்தன. அதனால் அவரது படிப்பை நிறுத்தி வீட்டு வேலைகளைச் செய்ய வைத்தார்கள். காலை முதல் இரவு நீண்ட நேரம் வரை வீட்டு வேலைகளைச் செய்த சூடாமணி பெற்றோரை ஒரு போதும் மனம் நொந்ததில்லை. அவருக்கு 13 வயதாக இருந்த போது உறவினர் வீடுகளுக்கும் கூடச் சென்று அவர்களுக்கு உதவும்படி பெற்றோர் அனுப்பி வைத்தார்கள். அதனால் அவர் மூன்று வருடங்கள் தனது குடும்பத்தில் மாத்திரமல்லாது உறவினர்களின் வீடுகளிலும் சமைக்கவும், உடைகள் கழுவவும் வீடுகளைச் சுத்தப்படுத்தவும் வேண்டியதாயிற்று.

அவருக்கு 16 வயதாக இருக்கும் போது தனது பெற்றோருடனேயே தங்குவதற்கு அவர் வந்து விட்டார். வயது ஏற ஏற அவரது சிந்தனை பேச்சு எல்லாமே கிஷ்ணரைப் பற்றியதாகவே இருந்தது. குழந்தைகள், மிருகங்கள், மரங்கள் எல்லாவறிலும் அவர் கிஷ்ணரைக் கண்டார். அவருக்கு 21 வயதான போது அவரது வாழ்க்கை முற்றாக மாறியது. கிருஷ்ணரது கதைகளைக் கேட்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம். கிருஷ்ணரது கதையை எவராவது பாராயணம் செய்தால் சகல வேலைகளையும் நிறுத்தி விட்டு அதனைக் கேட்க ஆரம்பித்து விடுவார்.

அதில் தன்னை மறந்து லயித்து விடுவதால் கதை முடிந்த பின்னரும் கூட அவருக்கு சுயநினைவு வராது. 1975ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு நாள் சூடாமணியும் அவரது இளைய சகோதரரும் பசுக்களுக்கு புல் வெட்டிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அயல் வீட்டில் வசித்த -ராம் என்பவர் வீட்டில் பாகவதம் படிப்பது கேட்டது. தலையில் புல் கட்டு இருப்பதையும் மறந்து அவர் அவர்களது வீட்டிற்குச் சென்றார். கிருஷ்ணரின் பிறப்பை வாசித்த பின்னர் ஸ்ரீராமும் குடும்பத்தவரும் அங்கு கூடியிருந்தவர்களும் பக்தி பாக்களைப் பாட ஆரம்பித்தார்கள். சூடாமணி தன்னை மறந்தார். புல் கட்டு அவரது தலையில் இருந்து அவரை அறியாமல் கீழே விழுந்தது. அவரது முகம் கிருஷ்ணரது முகம் போன்ற தோற்றத்தை அடைந்தது. (தொடரும்)

வீடு வாங்க, விற்க

HOMELIFE

HOMELIFE METRO
Realty Inc. - Real Estate Broker

Flexible Commission
FREE MARKET EVALUATION

- Buying Resale Homes & New Homes from Builder
- Selling your Home & Business
- Low-Rate Mortgage Arrangements

அழையுங்கள் நடா ஜி. நடராசா
416-616-8751
5200 Finch Ave. East #206, Scarborough, Ont. M1S 4Z4

Nada G. Nadarajah
B.V.Sc
Sales Representative
GOLD AWARD WINNER
416-293-5093 (24hr.)

MORTGAGE INTELLIGENCE

வீட்டு அடமானம் அல்லது கடன் வசதிகள் செய்து தரப்படும்

MORTGAGES & LOANS

- 5% DOWN PAYMENT TO BUY A HOME
- PRE-APPROVAL OF MORTGAGES
- ALL RESIDENTIAL MORTGAGES (1ST / 2ND)
- BAD CREDIT / BANKRUPTCY

VISA CARD FOR NON QUALIFIED APPLICANTS

ALL MORTGAGES & LOANS please call
Latchman Sukhdeo B.A. Dip. Com.
Mortgage Consultatnt
416-287-3289 ~ 416-566-5036

"அ. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு மூலம் எம் இனத்தின் அரசியல் பிரச்சனையை அறியும் வாய்ப்பு கிடைத்தது"

"The murder of a moderate - political biography of Amirthalingam" - By. T. Sabaratnam என்ற புத்தகத்தினை வாசித்ததன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகளையும் மறைந்த தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் எமது இனத்துக்குச் செய்த சேவையையும் அறிய முடிந்தது என செல்வி. அமிர்த்தா விக்னேஸ்வரன் 12.10.2002 அன்று நடைபெற்ற ரொறன்ரோ நகரில் கனடாவாழ் சித்தன்கேணி மக்களினால் ஒழங்கு செய்யப்பட்ட திருமதி. அமிர்தலிங்கத்துடனான ஒரு கலந்துரையாடலின்போது குறிப்பிட்டார்.

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக முன்னாள் தலைவர் தெ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தொடர்ந்து உரையாற்றிய அமிர்த்தா விக்னேஸ்வரன் தனது கல்லூரி படிப்புக்காக ஒரு கட்டுரை எழுத வேண்டிய நிலையில் எடுத்த கட்டுரை தலைப்பு "இலங்கை அரசியலும் போராட்டமும்" என்பதாகும். எனது கட்டுரைக்கு உதவிய புத்தகத்தினை வாசித்து எனது ஆசிரியருக்குக் காட்டியபோது அவர் கேட்டார் யார் இந்த அமிர்தலிங்கம் என்று? அதற்கு நான் உரிமையுடன் அவர் என் உறவினர் என்றும் நான் பிறந்து வாழ்ந்த சித்தன்கேணிக்கு அருகாமையில் அமைந்துள்ள பண்ணாகம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் என்று கூறி பெருமையடைந்ததாகச் சொல்லி அப்படியான தலைவரின் துணைவியாரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றியும் கூறினார்.

வரவேற்புரை நிகழ்த்திய திரு. அ. தெட்சணாமூர்த்தி அவர்கள் கடந்த காலங்களில் தமிழ் கட்சிகளான இலங்கை தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் விடுதலை இயக்கங்களுடன் இணைந்து சித்தன்கேணி மக்கள் நடாத்திய அரசியல் செயல்பாடுகள் பற்றி கூறினார். குறிப்பாக 1972ஆம் ஆண்டு இரண்டு பிரதான தமிழ் கட்சிகளான தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் ஒற்றுமைக்கான ஆரம்ப பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் வேளையில் மறைந்த தலைவர்களான திரு. மு. சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகிய இருவரையும் ஒரே மேடையில் வைத்து அரசியல் கருத்தரங்கினை சிறப்பாக நடாத்தி வைத்த பெருமை சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்திற்கே உரியது என்று கூறினார்.

அடுத்து பேசிய திருமதி. அமிர்தலிங்கம் அவர்கள் தனது கணவரை திருமணம் செய்த நாள்முதல் அவர் இறக்கும்வரை அவருடன் இணைந்து செயற்பட்ட தன் அரசியல் வாழ்க்கையையும் தமிழ் இனத்தின் ஒவ்வொரு போராட்டங்களையும் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளையும் தன் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். குறிப்பாக 1961ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியினால் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் அதை முறியடிக்க இலங்கை அரசினால் பாவிக்கப்பட்ட பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் தலைவர்களையும் நினைவு கூர்ந்தார்.

1972ஆம் ஆண்டு முதல் இலங்கை குடியரசாகப் பிரகடனப் படுத்தப் பட்ட பின்பு தமிழ் மக்களை அவசரகால சட்டமூலமும் அரசின் பயங்கரவாத சட்டமூலமும் தமிழ் மக்களையும் தமிழ் தலைவர்களையும் அழித்த சம்பவங்களைக் கூறி சிறந்த ஒரு அரசியல் விளக்க உரையை நிகழ்த்தினார்.

தனது உரையில் தனது கணவருடனும் தமிழர் விடுதலை கூட்டணியுடனும் இணைந்து செயல்பட்ட முன்னாள் யாழ் மேயர் மறைந்த திரு. பொ. சிவபாலன் சட்டத்தரணி செய்த சேவையையும் அவர் பிறந்து வளர்ந்த சித்தன்கேணி கிராமத்துக்கு நன்றிகூறத் தவறவில்லை. இறுதியாக மருதனாமடம் பழைய மாணவிகளான திருமதி. அமிர்தலிங்கம் அவர்களும் தி'ருமதி வி. சீனிவாசகம் அவர்களும் இணைந்து இன்னிசை வழங்கி வந்தோரை மகிழ்வித்தமை குறிப்பிடத்தக்கது.***

உதயன் தொடர்புகளுக்கு

Telephone: (416) 752-1524 Fax: (416) 752-6703
Website: www.uthayan.ca
E-mail: uthayan66@hotmail.com

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு ஹாட்லி பழைய மாணவர் சங்கம் பாராட்டுவிழா

மட்டக்களப்பு மாநகரத்திலிருந்து தெற்கே 25மைல் தொலைவிலுள்ள கல்முனையில் 10.10.1943இல் திரு. இளையதம்பி தங்கராஜா (தலைமை ஆசிரியர்), திருமதி அற்புதமணி தங்கராஜா தம்பதிகட்கு சிரேஷ்ட மகனாக பிறந்த திரு தங்கராஜா எட்வேட் ஆனந்தராஜா அவர்கள் இளையதம்பி குடும்பம் என கல்முனையில் அழைக்கப்படும் பிரபல குடும்பத்தினை சார்ந்தவர். பாரம்பரிய கிறிஸ்தவ மெதடிஸ்த சபையினை சேர்ந்தவர்.

ஒரு கல்லூரியின் பெயரையும் புகழையும் தொய்யவிடாமல் காப்பாற்றுவது கல்லூரியின் பழைய மாணவர்களின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. இன்று பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 164 ஆண்டுகள் கல்விப்பணி புரிந்த பெருமையோடு நிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு காரணம் இக்கல்லூரியில் பயின்ற பழைய மாணவர்கள் பல துறைகளிலும் மிக மிக உச்ச நிலையை அடைந்து இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பெருமையும் பாராட்டும் பெற்றுள்ளமையே ஆகும். இன்று இலங்கையிலே புதிய பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்றுள்ள ரி.ஈ. ஆனந்தராஜா அவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் தலை சிறந்த பழைய மாணவர் ஆவார்.

இவர் ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்றவேளை கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் தலைசிறந்து விளங்கினார். இதற்கு காரணமாக இருந்த அதிபர் காலஞ்சென்ற கே.பூரணம்பிள்ளை மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் இன்றும் நினைவு கூர்ந்து பெருமகிழ்ச்சி அடைவதை நாம் நன்கு அறிவோம். ஆனந்தராஜா அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராக (கொழும்புக்கிளை) இருந்து அரும்பெரும் பணி புரிந்துள்ளார். இன்று ஹாட்டிலிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் திரு. ஆனந்ராஜா அவர்கள் இலங்கையின் 26ஆவது பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்வதோடு அவரின் அரும் பெரும் சேவைகளைப்பாராட்டி கடந்த 3.11.2002 கொழும்பு தாஜ் ஹோட்டலில் அவரை கௌரவித்தது. இவ்விழாவிற்குரிய சகல ஒழுங்குகளையும் தற்போதைய ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஒழுங்கு செய்தனர்.

ஆனந்தராஜா அவர்கள் தமது கல்வியை பருத்துத்துறை ஹாட்லிக் கல்லூரியில் பயின்றபின் இலங்கை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1963ஆம்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்கவும்

ஓம் சாயிராம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 77வது ஜெயந்தி தினம்

இடம்:
சாயி சேவா நிலையம்
Daily Needs Super Market Hall
2543 Pharmacy Ave.
(Finch & Pharmacy)
Scarborough, Ont.

காலம்:
23.11.2002 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

நிகழ்ச்சி நிரல்
6.00 மணி: புல்லாங்குழல் இசை (அருளானந்தம் குமரன்)
6.30 மணி: பாதபூஜையும் பஜனையும்
8.30 மணி: ஊஞ்சல்
9.00 மணி: மங்கள ஆரத்தி

மிகவும் சிறப்பாக நடைபெறும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பஜனையில் கலந்து கொண்டு பகவானின் நல்லருளைப் பெற்று நலமுடன் வாழவேண்டி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: (905) 947-1522 (416) 286-5220

திரைப்பட, வானொலி, மேடை நாடக நடிகர் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்



நேர்காணல்: அஞ்சலா ஞானரட்ணம்

இலங்கை திரைப்பட வரலாற்றில் ஒரு சிறந்த நடிகனாக, இயக்குனராக, வானொலி கலைஞராக திகழ்ந்து திரைப்பட வரலாற்றின் ஈழத்தின் முன்னணிக் கலைஞனாக திகழும் கே. எஸ். பாலச்சந்திரன் அவர்கள் மென்மையான வைரங்கள், உயிரே உயிரே, வாடைக்காற்று, அவள் ஒரு ஜீவநதி, நாடுபோற்ற வாழ்க போன்ற பல திரைப்படங்களில் நடித்து நடிப்புலகிற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார் என்றால் மிகையாகாது. 1965 ஆண்டு முதல் இன்றுவரை 38 வருடங்களாக திரைப்படத்துறையில் தமது கலைச்சேவையினை நிலைநாட்டிவரும் அவர் திரைப்பட ரசிகர்கள் மத்தியிலே சிறந்த அபிமானத்தைப் பெற்றவர் என்பது வெள்ளிடைமலை. கலை வாழ்க்கையில் பல கலைஞர்களோடு நடித்த அந்தக்காலம் தனது திரைவாழ்க்கையில் ஒரு பொற்காலமாக கருதும் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களின் பேட்டியினை தமிழுலகமே அறிய மிகுந்த ஆவலோடு காத்திருப்தென்பது கண்கூடு. இதோ அவர்களுடனான பேட்டியினை பார்ப்போம்.



பிரபல நடிகர் கமல்ஹாசனுடன் கே.எஸ். பாலச்சந்திரன்

ஒரு கலைஞனுக்கு மக்களின் பாராட்டும் தொடர்புச் சாதனங்களின் ஆதரவும் மிகவும் அவசியம்.

* எத்தனையாம் ஆண்டு நாடகத்துறையில் கால்பதித்தீர்கள்? நீங்கள் நடித்த முதல் நாடகம் எது? நாடகத்துறை உங்களை ஈர்த்ததன் காரணம் என்ன?

முதன் முதலாக 1965ஆம் ஆண்டில் மேடை நாடகத்துறைக்கு வந்தேன். முதல் நாடகத்தை எழுதியவர் காலஞ்சென்ற நெல்லை கா. பேரன். இவர் ஒரு பிரபல எழுத்தாளர். இந்த மேடைக்காலத்தில் நான் ஒரு கலைஞனாக முதன்முதலாக தோன்றியபொழுது மக்களின் வரவேற்பு எனக்குக் கிடைத்தன என்ற காரணத்தால் தொடர்ந்து நான் நாடகத்துறையில் ஈடுபடத்தொடங்கினேன். இறைவரி திணைக்களத்தில் என்னோடு பணியாற்றிக் கொண்டிருந்த பிரபல நாடகக்கலைஞன் வரணியூரான் எஸ்.எஸ் கணேசபிள்ளை அவர்கள் என்னை நாடகத்துறையில் ஈடுபட வைத்தார். மறைமுதல்வன் எழுதிய நகைச்சுவை நாடகத்தில் கதாநாயகனாக நடித்தேன். இதுவே எனது மேடை நாடக ஆரம்பகால அனுபவமாகும்.

* நாடகம் ஒன்றின் வளர்ச்சி என்பது பாத்திரங்கள் உரையாடல்களுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அரங்கமைப்பு, ஒலி, ஒளி என்ற பல்வேறு விடயங்கள் அதன் வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன. கனடா தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரை பாத்திரங்கள் உரையாடல்கள் வளர்ச்சி அடைந்த அளவிற்கு ஏனையவை வளர்ச்சி அடைந்ததாகத் தெரியவில்லை. இதற்குப் பொருளாதாரத்தின் அடிப்படை காரணமா?

நீங்கள் சொல்வது சரி. ஒலி, ஒளி, அரங்கமைப்பு போன்றவற்றிற்கு நாங்கள் ஏராளம் பணம் செலவழித்து அக்கறை காட்டி செய்வதன் மூலம் நிச்சயமாகத் தரமான நல்ல நாடகங்களைத் தரமுடியும். ஆனால் ஒரு முழு நாடகமாக அவை மேடையேறுவதில்லை. ஒலி ஒளி அரங்கமைப்பு போன்ற வற்றிற்கு அதிக பணம் செலவழிக்க தேவை ஏற்படுவதில்லை. சில நவீன நாடகங்களை மேடையேற்றும் பொழுது குறிப்பாக அரங்காடல் நாடகப்பட்டறைக் குழுவினர் உள்ளரங்குகளில் ஒலி அமைப்பு சிறந்த அரங்கமைப்பு போன்ற வசதிகளுடன் இடையிடையே நாடகங்கள் மேடையேற்றத்தான் செய்கிறார்கள். தனியாக நாடகம் பார்க்க என்று வரும் ரசிகர்களுக்கு இத்தகைய பரீட்சார்த்த நாடகங்களோ அதற்கான அமைப்புகளோ பிடிக்கலாம். ஒரு கலை நிகழ்ச்சியை கதம்ப நிகழ்ச்சியாக எதிர்பார்த்து வரும் ரசிகர்கள் தனியாக உரையாடலால் கொண்டு நடத்தப்படும் நாடகங்களையே எதிர்பார்க்கிறார்கள். அந்த நாடகங்களை மேடையேற்று பவர்களும் அதற்கு தீனிபோடுகிறார்கள்.

* தாங்கள் சிறந்த திரைப்பட, வானொலி, மேடை நாடகக் கலைஞர்! அந்த வகையில் இலங்கையில் மட்டுமன்றி கனடாவில்கூட திரைப்படங்களில் நடித்திருக்கின்றீர்கள். அவை எவையென எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமே! நடித்த திரைப்படங்களில் கவர்ந்தது எது?

பிடித்த திரைப்படம் நான் திரைக்கதை வசனம் எழுதிய உயிரே உயிரே! மற்றும்படி எங்கோ தொலைவில், நெஞ்சங்கள், மென்மையான வைரங்கள், தலைமுறைகள் போன்றவற்றிற்கு திரைக்கதை வசனம் எழுதி இயக்குனராக பணியாற்றியிருந்தாலும் நடிகராக பெரிய பாத்திரங்களாக ஏற்கவில்லை. இந்த திரைப்படங்களில் தேவையேற்படுமிடத்து ஒருசிறு பாத்திரமேற்று நான் தோன்றியிருக்கின்றேன். எனவே நடிகனாக கனடாவில் திரைப்படங்களில் அதிகளவு பங்களிப்பு இல்லையென்பதுதான் உண்மை.

* நகைச்சுவை நடிப்பிலும்சரி சோகத்தை வெளிக்காட்டுவதிலும் சரி தமிழ் இதயங்களின் மனதில் வெற்றிநடை கண்டு வெளியிடப்பட்ட திருப்பங்கள், வாடைக்காற்று, நாடுபோற்ற வாழ்க, அவள் ஒரு ஜீவநதி போன்ற திரைப்படங்கள் கனடா ரீ.வி கலாபம், ரீ.வி.ஜ. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படுவதில்லையே! ஏன்?

இந்த திரைப்படங்கள் இலங்கையில் தயாரானபோது எதிர்பார்த்தளவு மக்களிடம் வரவேற்பு கிடைக்கவில்லை. வாடைக்காற்று இதற்கு ஒரு விதிவிலக்கு. இருந்தாலும் காலப்போக்கில் திரைப்படங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஒரு ஆசை தற்போது எங்கள் மத்தியிலே உருவாகி இருக்கின்றது. துரதிஷ்டவசமாக இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங் களின் பின்னர் திரைப்படங்களின் மூலப்பிரதிகள் தொலைந்துபோய் விட்டன. இருக்கின்ற பிரதிகளும்கூட தரமான பிரதிகளாக இல்லை. எனவே இந்தத் திரைப்படங்களை இங்குள்ள தொலைக்காட்சியினர் ஒளி பரப்புவதில் பிரச்சனைகள் இருக்கலாம். இதைவிட கனடாவில் தயாரான உயிரே உயிரே, எங்கோ தொலைவில் போன்ற திரைப்படங்கள் தென்னிந்தியத் திரைப்படங்களோடு ஒப்பிடும்போது அந்தளவு ஆரவாரமான காட்சியமைப்புகள் இல்லாவிடினும் எங்கள் கதையை சொல்லும் திரைப்படம் என்பதனால் நிச்சயமாக எங்கள் ரசிகர்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் இதுவரை இங்குள்ள தொலைக்காட்சி நிலையங்கள் எதுவும் இதற்கு முயற்சியெடுக்கவில்லை.

தொடரும்.....

தரணித் தமிழர் கூட்டணி வெளியிடும்.....

(10.....ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய உயர்ந்த நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு நிதி ஒப்பேற்று வாய்ப்புநிலை மிகவும் முக்கியமானது. எனவே பெருந்தன்மையுடன் அன்பளிப்புக்களை தரணித் தமிழர் கூட்டணி தமிழ் ஆர்வலர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. எவ்வாறாயினும், தரணித் தமிழர் கூட்டணியின் உயிரோட்டம் அதன் உறுப்பினர்களே என்பதை இவ்வமைப்பு அடையாளம் காண்கிறது. இதன் உறுப்புரிமைப் பணமும் மிகச் சிறுதொகையானது. உறுப்புரிமைபெற்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள் அவ்வந் நாட்டு நிதியின் ஒரு அலகுகளின் பெறுமதியையும் (எ-டு: $1, Rs.1, ..), அமைப்புக்களில் அங்கம் வகிக்காதோர் அத்தகைய 10 அலகுகளின் பெறுமதியைச் செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்துகொள்வர்.

உறுப்புரிமைபெற்ற அமைப்புக்களின் அங்கத்தவர்களும், உறுப்புரிமை பெறாத அமைப்புக்களின் உறுப்பினர்களும் முன்வந்து வழங்கும் அன்பளிப்புக்கள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். தரணித் தமிழர் கூட்டணி அறச்சார்பான அமைப்பாக பதியப்படும். ஆதலால் நன்கொடைகள் வருமானவரி விலக்குக்கு உரியன என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களதும், தமிழ் அமைப்புக்களதும் வேற்றுமைகளின் மத்தியில் ஒன்றிணைந்த உணர்வுகள் மிக மதிப்பு வாய்ந்தவை. தரணித் தமிழர் கூட்டணி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் நலன் விரும்பிகளை இவ்வமைப்பில் இணைந்து, தமிழின் பெருமைக்காக சோர்வடையாது உழைப்பதற்கான தமிழர் குடும்பத்தை உருவாக்குதில் பங்குபற்றுமாறு. இருகரம் நீட்டி வரவேற்கிறது.

மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

International Coordinator -ICWWTC
World Wide Tamil's Coalition - WWTC
11373. Ironwood Road,
San Diego CA 92131, USA
Tel. & Fax: (858) 547 0574 Email: appuacci@san.rr.com

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு பாராட்டுவிழா

16ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டளவில் ஓர் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். இவர் சட்டத்துறைப் பட்டமும் பெற்றுள்ளார். பொது நிர்வாகத்துறையில் எம்.ஏ பட்டமும் பெற்றுள்ளார். இத்துடன் தமது தொழில் சம்பந்தமாக குற்றவியலில் ஓர் டிப்ளோமாவும் பெற்று தமது தொழில் அறிவை மேம்படுத்திக்கொண்டார்.

1967ஆம் ஆண்டளவில் பொலிஸ்மா அதிபர் என்ற அந்தஸ்தின்படி ஆங்கிலேயரின் காலத்தின் பின்னர் 1947ஆம் ஆண்டு சேர் றிச்சாட் அனுவிகார அவர்கள் இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். இப்போது ஆனந்தராஜா அவர்கள் இலங்கையின் 26ஆவது பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்றுள்ளார். இவர் பொலிஸ் மா அதிபராக பணியாற்றும் இரண்டாவது தமிழர் ஆவார். முதலாவது தமிழர் ருத்திரா இராஜசிங்கம் இவர் முன்னைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்.

ஆனந்தராஜா அவர்கள் 1971ஆம் ஆண்டு ஓர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக நியமனம் பெற்று 1985ஆம் ஆண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்று வட கிழக்கு மாகாணங்களுக்கு பொறுப்பாக இருந்தார். இதன்பின்னர் 1998ஆம் ஆண்டு அதியுயர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி உயர்வு பெற்று தமது கடமைகளை திறம்படச் செய்து எல்லோரின் பாராட்டையும் பெற்றார். இன்று இலங்கையின் இரண்டாவது தமிழர் பொலிஸ் மா அதிபர் என்ற உயர்பதவியை வகிப்பதையிட்டு தமிழ் மக்கள் மட்டுமன்றி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய, தற்போதைய மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

ஆனந்தராஜா அவர்கள் இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் தேவைகளை தம்மால் இயன்றளவு நன்குணர்ந்து சேவையாற்றி அவர்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என்பது எமது திடமான நம்பிக்கையாகும். அவர் ஓர் திறமைசாலி; அனுபவம் மிக்கவர். ஆகையினால் அவரின் சேவை இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியமானதாகும். அவர் நீண்ட காலம் பொலிஸ் மா அதிபராக பணிபுரிந்து சகல மக்களுக்கும் திறம்பட சேவையாற்ற வேண்டும் என்று ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை வேண்டிக் கொள்வதோடு எல்லாம் வல்ல இறைவன் நற்சுகத்தையும் நீண்ட ஆயுளையும் கோடுக்கவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

- டாக்டர் எம். இராமஜெயம், கொழும்பு மாநகரசபை உறுப்பினர்.

3ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னைமடியில்
10-12-1947

ஆண்டவனிடம்
10-11-1999

அமரர் வல்லிபுரம் வன்னியசிங்கம்
(கரவெட்டி)

பாசத்தின் உறைவிடமாயிருந்தெம்மை
பார் பார்க்க வைத்தீர்களே - இன்று
பார்க்கவே முடியா தொலைவு சென்றதுமேன்
கல்விக்கண் திறந்து – எமக்கு
கற்றதனாலாய பயன் விளம்பிய எம் ஐயாவே
கண்மூடி ஆண்டொன்று ஓடியதோ
மறைந்தும் வாழ்கிறீர்கள் நீங்கள்
எம் இதயக் கோவில்களில்

**அன்பு மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்**

தகவல்:
ராணி (514) 385-5902

கந்தசஷ்டி மகிமை

கந்தசஷ்டி விரதம் 05.11.2002ஆம் திகதி ஆரம்பமானதை முன்னிட்டு இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.

-பிரதம ஆசிரியர்

அ. சிவானந்தநாதன்

காசி முனிவனுக்கும் மாயை என்னும் அரக்கிக்கும் புதல்வர்களாகப் பிறந்தவர்கள் சூரபதுமன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் என்போர்கள். இவர்கள் யாவரும் பரம்பொருளாகிய சிவபெருமானை நோக்கி கடுந்தவம் செய்து அவன் அருளால் பல வரங்கள் பெற்று அழியாத தன்மையைப் பெற்று விளங்கினார்கள். இதன் பயனாக அசுரர்கள் ஆணவம் கொண்டு தம் தவவலிமையால் விண்ணுலகத் தலைவர்களையும் விண்ணுலகத் தேவர்களையும் துன்புறுத்தி அடக்கி ஆட்சி செய்தார்கள். இதனால் விண்ணுலகத் தேவர்கள் பல இன்னல்களை அனுபவிக்க நேரிட்டது. இதனை ஞானத்தால் உணர்ந்த இறைவன் விண்ணுலகத் தேவர்களுக்கு நல்லருள் புரிய திருவுள்ளம் கொண்டார். இறைவன் சூரபதுமனுக்கு தான் கொடுத்த வரத்தைக் காத்தும், அதற்கு அப்பால் நின்று அவனின் ஆணவத்தை முற்றாக அளிக்க விரும்பினார். இதனால் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் இறைவன் தோன்றிவித்த குமரன் தான் ஆறுமுக விநோதப் பெருமானாகும். இப்பெருந் தெய்வம் சிவபெருமானின் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் என்னும் ஆறு திருவதனங்களில் உள்ள ஆறு நெற்றிக் கண்ணில் தோன்றிய ஆறு தீப்பொறிகளின் தோற்றமே இதற்குக் காரணமாகும். உத்தமனாகிய சிவபெருமானின் ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையில் சேர்ந்த பொழுது ஆறு குழுந்தைகளாகக் காட்சியளித்தார்கள். தெய்வீகக் குழந்தைகளை தேவி பராசக்தி அணைத்த பொழுது அனைத்தும் ஒன்று சேர்ந்து ஆறு முகங்கள் ஒருடல் பன்னிரு கைகளுடன் ஆறுமுகப் பெருமான் தோன்றினார். இவ்வுண்மையை "சேயவன் ஆறும் திரட்டி நீ ஒன்றாய் செய்தாய் ஆயதனாலே கந்தானாம் எனும் நாமம் பெற்றான்" என்று கந்தபுராணத்தில் வரும் அடிகளால் தெளியலாம். இதுவே கந்தப் பெருமானின் அவதாரத் தோற்றமாகும். இப்பெருமானின் மகிமையை 'ஆறறிவார் எங்கள் அண்ணல் பெருமையை' என்று திருமூல நாயனார் போற்றுவதினால் தெளியலாம். கந்தபுராணத்தில் ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய என வரும் அடிகளால் முருகப் பெருமானின் மகிமையைத் தெளியலாம். நம் முன்னோர்கள் "சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை, சுப்பிரமணியனுக்கு விஞ்சிய தெய்வமும் இல்லை" என்று முருகனைப் போற்றியுள்ளார்கள். இதனால் முருகப் பெருமானை இந்து மக்கள் கண்கண்ட தெய்வமாகவும், கலியுக வரதராயும் போற்றி வழிபாடு செய்துள்ளார்கள்.

முருகப் பெருமானின் மகிமையையும் அற்புதச் செயலையும் எடுத்துக் காட்டுவது கந்தசஷ்டி என்னும் பக்தி தின நாட்களாகும். இவ்விழா ஐப்பசி மாத அமாவாசை அன்று மாலையில் இருந்து ஐந்து நாட்கள் தொடர்ந்து விரதம் பூண்டு எம் பெருமானைத் தூய்மையாக வழிபடுவதைக் குறிப்பதாகும். இத்தினத்தில் அவன் புகழுக்குரிய ஆறு கவசங்களை பொருள் உணர்ந்து பக்தியோடு ஓதி வழிபாடு செய்தால் பெரும் பயன் உண்டு. இத்திரு நாட்களில் கந்தபுராணத்தை முறையாக ஓதி பொருள் உணர்ந்தால் அவன் திருவடியை எளிதில் பெறலாம். "சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்பது நம்முன்னோர் பழமொழியாகும். இதன் உண்மைப் பொருள் கந்தசஷ்டியில் விரதம்பூண்டு ஒழுகினால் பெண்களின் அகப்பையாகிய கருப்பையில் தவச்செல்வர்கள் தோன்றுவார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. இதனால் பெண்கள் யாவரும் கந்தசஷ்டி விரதத்தை மிக்க பக்தியோடு பேணிக் காத்து அவன் அருளை வேண்டி நிற்பார்கள். பொதுவாக கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்டால் தீராத நோய்களும் தீரும். நீண்ட ஆயுளும் செல்வமும் அவன் அருளால் எளிதில் கிடைக்கப் பெறும் என்பது நிச்சயம். இதனால் கனடாவில் வாழும் சைவ மக்கள் ஒவ்வொருவரும் இப்புனித நோன்பினை நோற்றால் மேன்மை உண்டு. சூரன் போர் உற்சவ விழா 09.11.2002 மாலை கனடாவில் உள்ள ஆலயங்களில் மிகச் சிறப்பாக நடைபெறும்.

முருகப் பெருமானுக்கு திருநாமங்கள் எண்ணில. இப்பெரும் கடவுளை விண்ணுலகத் தேவர்களும், மண்ணுலக வாசிகளும் இயற்கை வனத்தில் குறவர் குறத்திகளும் பக்தியோடு போற்றி வழிபட்டு அவன் அருளால் இன்பம் பெற்று விளங்கினார்கள். குறவர்கள் நிவேதிக்கும் தினைமா, புற்கை முதலியவற்றை திருவமுது செய்து அவர்களுக்கு நல்லருள் நல்கினார். முருகப் பெருமான் தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து நற்தவப் புதல்வர்களுக்கு நற்றமிழை நல்கி, அவர்களின் வாயிலாக வளமான இலக்கிய செய்யுள் நூல்களை நமக்குத் தந்துள்ளார். முருகப் பெருமானின் திருவருளுக்கு பாத்திரமான பக்தர்கள் யாவரும் முருக பக்தர் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளார்கள். தம் அடியார்களைத் தம்பால் ஈர்த்து அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நல்வழிகாட்டி அருள் புரிவது எம் பெருமானுக்குரிய தனிச் சிறப்பாகும். சங்க இலக்கிய நூலாகிய பரிபாடலில் முருகப் பெருமான் 'செவ்வேள்' என்றும் போற்றப் பட்டுள்ளார். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் முருகப் பெருமானை 'முருகன்' என்று போற்றியுள்ளார். திருமுருகாற்றுப் படையில் முருகப் பெருமானுக்குரிய ஆறு படைவீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை,



சூரன்போர் விழா மிகச் சிறப்பாக நடைபெறும் திருச்செந்தூர் ஆலயம்

பழமுதிர்சோலை முதலியன இடம் பெற்றுள்ளது. முருகப் பெருமான் எல்லா ஆலயங்களிலும் பக்தி மயமாக விளங்குவது கந்தசஷ்டி நாட்களிலாகும். இவ்விழாவில் நடைபெறும் சூரன்போரில் முருகப் பெருமானின் தெய்வீக ஆற்றலை யாவரும் நன்கு உணர முடிகின்றது. இவ்விழா பக்திப் பெரும் விழாவாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களிலும் தமிழகத்தில் உள்ள ஆலயங்களிலும் உலகில் பரவியுள்ள இந்து ஆலயங்களிலும் சிறப்பாகக் கனடா ஆலயங்களிலும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. முருகனுக்கு எண்ணற்ற ஆலயங்கள் இருந்தாலும் சூரன் போரின் மகிமையை உலகோருக்கு எடுத்துக் காட்டும் பெரும் கோயிலாக விளங்குவது தமிழகத்தில் உள்ள திருச்செந்தூர் சுப்பிரமணிய ஆலயமாகும். இத்தினத்தில் எங்கும் காணாத பெரும் திரளான மக்கள் திரண்டு வந்து இக்கோயிலைத் தரிசித்து இன்பம் பெறுவார்கள். உண்மையில் மனிதப் பிறவியைப் பெற்ற யாம் கந்தசஷ்டி தினங்களில் இவ்வாலயத்தைத் தரிசனம் செய்தால் அவன் அருளால் கோடி புண்ணியம் பெறலாம். எனவே கனடாவில் வாழும் சைவமக்கள் ஒவ்வொருவரும் இவ்வாலயத்தை கந்தசஷ்டி தினங்களில் சென்று வழிபாடு செய்தால் தெய்வத்தின் மகிமையை அனுபவரீதியாக உணரமுடியும். இத்தகைய வாய்ப்புக் கிடைக்காதவர்கள் பிறிதொரு நாளில் தரிசனம் செய்தால் முக்தியின்பம் அவனருளால் எளிதில் பெறலாம். இவ்வாலயம் திருநெல்வேலியில் இருந்து 57 கி.மீ. தொலைவில் உள்ளது. இது கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இதனால் இவ்வாலயத்தை அலைவாய் என்றும் சீரலைவாய் என்றும் திருச்சீரலைவாய் என்றும் மக்கள் போற்றி வழிபாடு செய்வார்கள். முருகப் பெருமானின் வீரத் திருவிளையாடலை எடுத்துக் காட்டும் புண்ணிய

தொடர்ச்சி 24 ம் பக்கம் பார்க்கவும்

EASAN'S TRAVELS

உங்கள் இல்ல வாசல் முதல் தரிப்பிட வாசல் வரை
D.V.Dயுடன் சேவை செய்யும் ஒரே தமிழர் ஸ்தாபனம்

PICK-UP & DROP OFF LIMITED AREAS ONLY

Ministry of Transportation Ontario
கனடிய அரசின் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்

WE ARE 1ST TO UTILIZE CORDELESS TERMINAL IN CANADA

WE DO ALL KIND OF CHARTER SERVICE
ONTARIO - QUEBEC - AMERICA

தொடர்புகளுக்கு

TORONTO
(416) 803-8798
(416) 892-8798

ANY TIME
ANY WHERE
24/h SERVICE

MONTREAL
(514) 830-8793
(514) 867-6417

"மனது! கொஞ்சியெடுத்துத் துப்பரவு மண்ணியதுபோல் உள்ளது.
உடன் பறித்த பழம்! உட்கொண்டதுபோல் உள்ளது.
விழிகள்! எடுத்த பிறப்பை அர்த்தப்படுத்தியதுபோல் உள்ளது.
உடலுக்குள் ஆன்மா! உட்செலுத்தப்பட்டதுபோல் உள்ளது."

இப்படி என்னைப் புரட்டிப்போட்டது அண்மையில் நான் கண்டு களித்த இரண்டு நாடகங்கள்.

மேடை நாடகங்களுக்கு இத்தனை சக்தி உள்ளதா? இவ்வளவு உயர்ந்த படைப்புகளாக இவை வெளிவந்துள்ளதன் இரகசியம்; இந்த நாடகங்களைச் சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியினர் தமது முன்றாண்டு கற்கை நெறியை முடித்துப் பட்டயம் பெறும் பெருவிழாவிற்காக உருவாக்கி இருந்தார்கள் என்பதுதான்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் அன்ரன் பொன்ராசா அவர்களால் சுவிஸ் பேர்ண் நகரில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் நாடகக் கல்லூரி தனது இலக்கைத் திட்டமிட்டதுபோல் எட்டியுள்ளது புலனாகிறது. நாடகக் கல்லூரியின் பட்டயமளிப்பு நாடகவிழா மூன்று நாட்கள் சுவிஸின் தலைநகர் பேர்ணில் நடைபெற்றது. இந்த விழாபற்றி ஜேர்மன் மொழி நாளேடுகள் விரிவான கலை ஆய்வுச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

'கடலம்மா', 'மலையப்பா' என்கின்ற இரண்டு நாடகங்களும் ஜேர்மன தமிழ்மொழியில் கலந்து நிகழ்த்தப்பட்டது. சுவிஸ் மக்களும் தமிழ் மக்களும் பெருவாரியாக வருகைதந்து நாடக அரங்கத்தை நிறைத்திருந்தார்கள். தமிழ் நாடகம் இதுவரை கண்டிராத அபார வெளிப்பாட்டை இந்த இரு நாடகங்களும் கொண்டிருந்தன. இதற்குக் காரணம் நாடகத்தை இதன் கர்த்தர்கள் ஆத்மாக உள்வாங்கி நிகழ்த்தியது மட்டுமல்ல, சர்வதேச நாடக ஆளுமைகளையும் தெள்ளத் தெளிவாகப் பரந்து கொண்டமையும் நாடகப் பேராசிரியர்களாக இயங்கும் சுவிஸ் நாட்டவர்களையும் தங்களுக்குள் வெற்றிகரமாக உள்வாங்கியிருந்தமையும் இக்கல்லூரியின் அதிபர் அன்ரன் பொன்ராசா அவர்களின் பரந்து விரிந்த அறிவுச் செறிவும் என்று நோக்கப்படுகிறது. சிங்களக் கடற்படை தனது கோர முகத்தைத் தமிழ் மக்கள்மேல் குவித்த சோகத்தைக் 'கடலம்மா' நாடகம் பேசியது.

தரத்தின் உச்சத்தில் சுவிஸ் தமிழ் நாடகங்கள்
-சுவிஸிலிருந்து கல்லாறு சதீஷ்

இருபது வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற குமுதினிப் படகின் பயணிகளின் கொலையில் இருந்து மீண்ட ஒரு பெண் பறவையாகிச் சுவிசிற்கு வந்து அரசியல் தஞ்சம் கோருகிறார். எமது தமிழ் மக்களின் துயரங்களைச் சுவிஸ் பறவைப் பெண்ணிடம் முறையிடுகிறார்..... இங்கே எமது தேசப்பிரச்சினை இந்த நாடகத்தினூடாகச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லப்படுகின்றது. நடிப்பு எற்படுத்திய பிரமிப்பும் நாடகம் சொல்லிய சம்பவமும் சுவிஸ் நாட்டுப் பார்வையாளர்களையும் எமது தேசத்தின் பக்கம் அழைத்து வந்ததை அவர்களின் முகம் கோடிட்டது. இடைவேளைவரை ஏ.ஜி. யோகராசா அவர்களால் எழுதப்பட்ட கடலம்மா நாடகம் நிகழ்ந்து முடிகிறது. அதனைத் தொடர்ந்து மலர்ந்த 'மலையப்பா' நாடகம் இருபது வருடத்தின் பின்னர் எமது தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் கலாச்சாரத் திணறல்களைப் பதிவு செய்கின்றது.

'கடலம்மா' நாடகத்தை பொன்ராசா அன்ரன் அவர்களும் 'மலையப்பா' நாடகத்தை ஊர்ஸ் - அந்தர்ஸ் கிராப் அவர்களும் நெறியாள்கை செய்திருந் தார்கள். லாசரஸ் சண்முகராஜா, ஆழ்வார் காசிநாதர் யோகராஜா, வினாசித்தம்பி பாஸ்கர், சச்சிதானந்தன் கலைச்செல்வன், சத்தியநாதன் ரமணதாஸ், தம்பிஜயா பாலகுமார், சிவாஜினி தேவராஜா, சிமோன் சண்முகலிங்கம், கார்த்திகா அமிர்தலிங்கம், கிளவுடியோ கெனாட்றி ஆகியோர் உட்பட 25இற்கும் மேற்பட்டோர் இரு நாடகங்களிலும் நடித்திருந்த னர். மிகச் சிறப்பாக இசையமைக்கப்பட்ட பாடல்களுடன் மகேந்திரன் தயந்தன் இருநாடகங்களுக்கும் இசை வழங்கினார். தயாநாதன் லோகதாசன் ஒப்பனை செய்ய தம்பிஜயா பாலகுமார் மேடையமைத்திருந்தார். சிவாஜினி தேவராஜாவும் பைலர் ஆர்தூரும் நாடகங்களை மொழிபெயர்ப்புச் செய்திருந் தார்கள். சுவிலின் அரசுசார், அரசுசாரா அமைப்புக்கள் இந்தக் கலாச்சார இணைவாக்கத்துடன் கூடிய நாடக விழாவிற்கு அனுசரணை வழங்கி இருந்தார்கள்.

பீற்றர் பிராஸ்லர் என்னும் சுவிஸ் நாட்டுப் பிரபல கலைஞரையும் இணைத்து சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியின் அதிபர் அன்ரன் பொன்ராசா அவர்களும் ஈழக்கூத்தன் என்னும் ஏ.சி. தாசீசியஸ் அவர்களும் மறளம் நாடகக் குழுவினூடாக 1980களில் 'ஸ்ரீசலாமி' எனும் நாடகத்தையும் 'பாண்டவர்களும் கிளவுஸ் முனிவரும்' என்னும் நாடகத்தை 1995களிலும் தயாரித்து சுமார் அறுபது மேடைகளுக்குமேல் அரங்கேற்றி எமது தமிழ் இனத்தின் உரிமைப்பிரச்சினைகளைச் சர்வதேசம் உணரச் செய்தார்கள். இவர்களின் மற்றுமொரு சிறந்த படைப்பாகக் 'காணிநிலம் வேண்டும்' எனும் நாடகமும் குறிப்பிடத்தக்கது.

மேற்சொன்ன தோற்றுவாய்களினூடாகவே சுவிஸ்தமிழ் நாடகக் கல்லூரி தோற்றம் பெற்றது. இக்கற்கை நெறியூடாகக் கடலம்மா, மலையப்பா, அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே, எரிமலைப் பூக்கள் என்னும் சிறந்த நாடகங்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. மூன்று வருடக் கற்கை நெறியைக் கொண்ட சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரிக்கு வருகைதரு விரிவுரையாளர்களாக முன்னாள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கதிரேசர்பிள்ளை ஆதவன், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பாண்டிசேரிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் வேலு சரவணன், சுவிஸ் நாடக நெறியாளர் ஒற்ரோ கூபர், தமிழ் நாடக ஆசான் திரு. ஏ.சீ. தாசீயஸ், திரு. இளைய பத்மநாதன், திருமதி. நளாயினி இராசதுரை, திரு. கந்தசாமி சாந்தகுமார் ஆகியோர் பணியாற்றி யுள்ளார்கள். முன்றாவது நாளாக நடைபெற்ற நாடகவிழாவில் நாடகக் கல்லூரியின் மலரொன்றும் காலண்டிதழொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஏ.ஜி. யோகராஜா. லா. சண்முகராஜா ஆகியோரின் தொகுப்பில் வெளிவந்துள்ள "பனிமலையில் கூத்தாடி" என்னும் மலரில் நாடக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த முன்றாண்டுகளிலும் கல்லூரியில் ஏற்பட்ட கற்கை அனுபவத்தை இனிய தமிழில் பதிவு செய்துள்ளார்கள். இம்முயற்சியானது மிக மிகச் சிறந்ததெனவும் கல்வி அனுபவம் அழிந்துவிடாத சுவடாகுமென்றும் நோக்கப்படுகிறது.

சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியும் தமிழ்நாடு விறல் அறக்கட்டளையும் இணைந்து உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ் எனக் 'கட்டியம்' சஞ்சிகையை வெளியிட்டு வைத்தனர். கட்டியம் சஞ்சிகையின் சிறப்பாசிரியராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் வீ. அரசு அவர்களும் ஆசிரியர் குழுவில் ஈழத்திலிருந்து பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசியர் சி. மௌனகுரு, டாக்டர் குழந்தை சண்முகலிங்கம் தமிழகத்திலிருந்து திரு. ந. முத்துசாமி, கவிஞர் இன்குலாப், ஓவியர் ட்ராட்ஸ்கி மருது புலம்பெயர் தேசங்களிலிருந்து திரு.ஏ.சி. தாசீசியஸ், திரு. இளைய பத்மநாதன், திரு.மைக்கின்ரைர், நிர்வாக ஆசிரியராகச் சுவிஸிலிருந்து திரு. அன்ரன் பொன்ராசா அவர்களும் செயற்படுகிறார்கள்.

நாடகம் குறித்துத் தமிழில் அரிதாகவே நூல்கள் தேன்றியுள்ள நிலையில் நாடகத்திற்கென உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ் ஒன்றினைக் காலாண்டுக்கொருமுறை வெளிக்கொண்டுவர இன்றைய நாடக உலகின் ஆளுமை மிக்க பலரும் ஒன்றிணைந்து செயல்படுவதானது முத்தமிழில் ஒன்றான நாடகத்திற்கு புது இரத்தம் பாய்ச்சப்பட்டதுபோல் தோன்றுகிறது. மூன்றாண்டுக் கல்லூரி வாழ்க்கை முடித்தவர்களுக்கான சான்றிதழும் பட்டயமளிப்பும் திரு.ஏ.சி.தாசீசியஸ் தலைமையில் நடைபெற்றது.

சச்சிதானந்தன் கலைச்செல்வன், சத்தியநாதன் ரமணதாஸ், லாசரஸ் சண்முகராஜா, வினாசித்தம்பி பாஸ்கர், சிவாஜினி தேவராஜா, தம்பிஜயா பாலகுமார், ஆழ்வார் காசிநாதர் யோசராசா ஆகியோருக்கு பட்டயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. 'கலைவளரி' எனும் பட்டமும் வழங்கப்பட்டது. இரண்டாண்டு கற்கையை முடித்த செல்வரத்தினம் விஜயரட்ணம் ஓராண்டு கற்கையை முடித்த தயாளினி குணசிங்கம், கந்தசாமி பிரபாகரன் ஆகியோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பேராசிரியை அ. மங்கை அவர்கள் சிறப்புரையாற்றினார்.

'கலைவளரி' அன்ரன் பொன்ராசா அவர்களின் ஆளுமைமிக்க கரங்களே சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி, கட்டியம் என்பவற்றின் பின்னே ஆழமாக உள்ளதென்பது மகிழ்ச்சியான உண்மை.***

Dr Rai S Cheng M.D., C.C.F.P.
உங்கள் சகல வைத்திய தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்
2425 Eglinton Ave. East, Suite 214
(Kennedy and Eglinton, South East Corner)
Scarborough, Ontario, M1K 5G8
PHONE: (416) 615 0002
Offices Hours 9:30am to 7:00pm-(Mon. to Fri.)
10:00am to 3:00pm-(Sat.)
NEW PATIENTS & WALK-IN WELCOME

"உதயன்" வாசகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்ற **"ஒரு சீறீலங்கா நாயின் கதை"**, **"மிஸ் ஆச்சி"** ஆகிய நகைச்சுவைத் தொடர்களைத் தொடர்ந்து உங்கள் அபிமான நகைச்சுவை எழுத்தாளர் **"டொன்மில்ஸ்" சிவப்பிரகாசம்** எழுதும் **"பெரியப்பாவின் ஆவி"** என்னும் நகைச்சுவைத் தொடர் உதயன் வார இதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

- பிரதம ஆசிரியர்

அங்கம் - 15

பெரியப்பாவின் ஆவி!

- டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்

அ....விலை தொடங்கிற ஒரு சொல்லு சொல்லுங்கோ பார்ப்பம். ஆ....ஆவா.....? அ.....அ.....அம்மா..... ஆ! கெட்டிக்காறி அடுத்தது தாவன்னா.....தாவன்னாவிலை வாற சொல்லு சொல்லுங்கோ பார்ப்பம். தா....வா.....? ஓம்.....தாடிக்குவாற தா..... தாத்தா..... எட கெட்டிக்காறி. அம்மா நீங்கள்....நன்றி உங்களுக்கு ஒரு சீ.டீ. பரிசாகக் கிடைக்கிறது. கலையகத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

என்ன யோசிக்கிறியள்? மேலே இருக்கிற உரையாடல் சிறுவர் நிகழ்ச்சி எண்டு யோசிக்கிறியள் போல. இல்லை....இல்லை.... அப்ப.....? கனேடிய தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் படிப்பிக்கினம் எண்டு கேக்கிறியளோ? அதுவும் இல்லை. வீட்டிலை இருக்கிற எங்கடை பெரிய குழந்தையளை தமிழ் வானொலி மாமாக்கள், அண்ணைமார் பொழுது போக்கு காட்டுகினம். தமிழோடு விளையாடுகினமாம். எந்த வானொலியளை திறந்தாலும் எல்லாம் நான், நீ எண்டு ஒரே போட்டி வைக்கினம்...பரிசுகள் கொடுக்கினம்....."சந்தனம் மிஞ்சினா தடவடா அங்கை" எண்ட கதையா வானொலியள் இப்படியான சீப்பான நிகழ்ச்சிகளுக்கு வாறதை எண்ணி கவலையாகிடக்கு. இருபது முப்பது வருசங்களுக்கு முன்னம் ஊரில நடந்த வானொலி நிகழ்ச்சிகளை கேட்ட எனக்கு இதுகளை கேட்க.... ஆரம்பத்திலை நிகழ்ச்சிகள் நல்லாத்தான் இருந்தது. பிறகு போகப்போக....இது எங்கைபோய் முடியப்போகுதோ.....!

நான் வானொலி காறரை குறை சொல்லமாட்டன். அவையள் என்ன செய்வினம்? தரமான நிகழ்ச்சிகளை தரத்தான் நினைக்கினம். ஆனால் எங்கடை ஆக்கள் இருக்கினமே! மரத்துக்கு மரம் தாவி பழகிப்போச்சு. கொஞ்சம் ஒரு மாதிரி கதைச்சா என்ன றேடியோ நடாத்திறாங்கள் எண்டு மற்ற றேடியோக்களுக்குதாவி விடுவினம். இதனால் தங்கடை நேயர்களை இழக்க அவையள் தயாரில்லை. வானொலியளை நடாத்துவதும் அதில் நிகழ்ச்சிகளை தருவதும் சுலபமான காரியம் இல்லைத்தான். நிலைய அதிபர்களைவிட நிகழ்ச்சிகளை நடாத்துகின்றவை பாடுதான் திரிசங்கு நிலை.

அண்டைக்கு ஒரு றேடியோவிலை ஒரு அம்மா கதைச்சுக் கொண்டு நடுவிலை கொஞ்சம் பொறுதம்பி வாறன் எண்டு சொல்லிப்போட்டு தன்ரை சோலியைக் கவனிச்சுப்போட்டு வரும்வரைக்கும் பெடியன் பாவம் காவல் நிண்டான். திரும்பி வந்த அம்மா கறியை அடுப்பிலை வைச்சுப் போட்டு வந்தனான் தம்பி அடிப்பிடிச்சிடும் அதுதான் இறக்கிப் போட்டு வந்தனான் எண்டா. இது எப்படி இருக்கு? இந்த அளவுக்கு றேடியோக்கள் கீழை இறங்கி வரக்கூடாது.

இன்னொரு வானொலியிலை பெரியவர்களுக்கான நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது ஒரு சிறு குழந்தை தொலைபேசியை எடுத்து மழலை மொழியில் மாமாவோடை கதைக்கிறது. நிகழ்ச்சியை ஒரங்கட்டி குழந்தையின் தாய் தன் மகனின் வீர பிரதாபங்களைச் சொல்லிக் கொண்டிருந்தா. குழந்தைகளின் மழலையை கேக்க எல்லோருக்கும் ஆசைதான். அதற்குத்தானே றேடியோ அக்காமாரும் மாமிமாரும் சிறுவர் நிகழ்ச்சி நடாத்துகினம். அங்கை விடுங்கோவன். அவையள் இப்பிடி நிகழ்ச்சிகளுக்கை குறுக்கிடுவது உங்களுக்குப் பெருமை. ஆனால் நிகழ்ச்சிகளை நடாத்துகிற வைக்கும் கேட்கிறவைக்கும் எரிச்சலை உண்டுபண்ணுகிறது எண்டதை மறக்கக்கூடாது.

வீட்டிலை பாசமலர்களாக இருங்கோ. அது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை. ஆனால் றேடியோக்களில் கதைக்க வரும் போது அதற்கு எண்டு அமைய ஆயத்தமான பாணியில் வந்து கதையுங்கோ. அண்ணா...அண்ணா... என்று ஆயிரம் தடவை பாசமலர்களை அழைக்கும்போது கண்ணா....கண்ணா....என்று கேக்கிறது. ஒரே கொட்டல்! போங்கோ! செல்லங்கொட்ட உங்களுக்கு வேறை பாட்டன் பூட்டன் கிடைக்க இல்லையோ? பாவம் அண்ணன்மார்கள் விட்டிடுங்கோ!

முதியோர்கள் எல்லாம் சில வேளைகளில் சீறீலங்காவில் உள்ள புத்த மகாசபை தேரோக்கள் மாதிரி நடக்கிறார்கள். இலங்கையில் எந்த அரசாங்கம் வந்தாலும் மகாசபைக்கு புத்தம் சரணம் கச்சாமி போட்டுதான் பிழைப்பு நடத்த வேண்டி இருக்கு. அதுபோல் சிலர் (நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை) தங்களின் மனதில் அந்த தேரோக்கள்போல அவர்களுக்கு பத்து ஐயாக்கள் போட்டு தோப்புக் கரணங்கள் போட வேண்டும் எண்டு நிற்கிறார்கள். இல்லை அடுத்த கட்சிக்கு தயாராகி விடுவார்கள். ஐயா சாமிகளே அந்தக் காலத்திலை என்ன இப்பவும் எங்கடை நாட்டை நினைச்சுப் பாருங்கோ. எங்களுக்கு இந்த நாட்டிலை எல்லா வசதிகளையும் தந்துள்ளார்கள். அதிலை றேடியோ நிகழ்ச்சியும் ஒண்டு. அதைப் போட்டு உடைத்து போடாதேங்கோ ஆண்டியளே!

தரமான நிகழ்ச்சிகளை தாருங்கோ, கலந்துரையாடுங்கோ கேட்பம். பொது அறிவுகளைத் தாருங்கோ, செய்திகளைத் தாருங்கோ, முதியவர்களுக்கு ஆறுதல் கூறுங்கோ, போட்டிகளும் வையுங்கோ பரவாயில்லை. ஆனால் பெரிய தாத்தா பாட்டிமாருக்குக்கு அ...னா, ஆ....வன்னா படிப்பிக்கிறதை விடுங்கோ. சகிக்கலை! செக்கியூறிட்டி வேலை செய்யிற செல்லத்துரை அண்ணை சொன்னார். செக்கியூறிட்டி வேலை சில சமையங்களிலை போர் அடிக்கிறது எண்டு அவங்களுக்குத் தெரியாமல் இதுகளை கேட்டு பொழுது போக்குவம் எண்டா இதுகளைவிட செக்கியூறிட்டி வேலை தேவையில்லை எண்டு அலுத்துக் கொண்டார். வேறு வேறு வானொலிகள் ஒவ்வொரு தமிழரின் வீடுகளிலும் தொழில் ஸ்தாபனங்கள், சாப்பாட்டு கடைகள் எங்கும் இருக்கின்றன. எல்லோரின் காதுகளிலும் விழத்தான் செய்கின்றன. அதை அதன் தயாரிப்பாளர்களை யாராவது கண்டு கொள்கிறார்களோ.

இருபத்தி நாலு மணி நேரத்தை.... சுத்தி....சுத்தி.... வந்தேங்க.....!

அதுதான் இல்லை. கலைஞரை யாராவது தட்டிக்கொடுக்கிறார்களோ! கிடையாது.

வானொலிகளின் நல்ல நிகழ்ச்சிகளையும் நான் இங்கே குறிப்பிடத்தானே வேணும். எத்தனை வானொலிகள் இருந்தாலும் எங்கடை புலோலியாரின் செய்திகளுக்கு தனி மதிப்பு கொடுக்கத்தான் வேண்டும். ஏழு மணிக்காக ஏங்கி நிற்கும் எத்தனையோபேரை அது மற்றைய றேடியோ ரசிகர்களும் வெளியே தெரியாமல் ரகசியமாகக் கேட்கும் ஒரு செய்தி. அந்த லாகம், பாவம் என்னத்தை மனிசர் இண்டைக்குக் கொட்டப்போறாரோ என்ற ஏக்கம், பயம் எல்லாம் புலோலியாருக்குத் தான்.

தகவல் பலகை, தேனீர்ச் சாலை இரண்டும் CTR வானொலியின் அருமையான நிகழ்ச்சிகள். அத்தோடு விளம்பரங்களில் இருக்கும் நகைச்சுவை அருமைதான். கலாதரனின் வழியல் தனமான நகைச்சுவையே போதும் ஐயா வேறு ஏன் நகைச்சுவை நாடகத்தை. கணபதி ரவீந்திரனுக்கும் குயின்ரசுக்கும் கவிதைகள் எங்கிருந்து வருகின்றது? அத்துடன் பொன் கணேசலிங்கத்தின் ரசிகன்தான் ஐயா நான். அவரின் சாதாரண உரை நடை. ஒரு நாடகத்தையே உரையாடல் ஆக்கிய பெருமையாளன் அவர்.

அலையோசையில் அலைபோல் செய்திகளை அழுத்தம் திருத்தமாக அள்ளித்தரும் பாலச்சந்திரனையும் மறக்க முடியாது. கலைஞன் பாலச்சந்திரனுக்கு பழைய பக்திப்பாடல்களையும் பழைய இனிமையான பாடல்களையும் எப்படி இப்பிடி கிளறி எடுத்து எல்லோரையும் அந்த இனிமையான பசுமை நிறைந்த நாட்களுக்கு அழைத்து செல்ல முடிகிறது? முதியோர் அரங்கத்துக்கு முதியோன் இளையபாரதிதான் என்பதில் என்ன சந்தேகம்? கனடாவில் "முதியோரின் பாதுகாவலன்" என்ற பட்டத்தையே கொடுக்கலாம். "மனோன்மணி" என்ற மணி இருக்கும்வரை முதியோர் அரங்கத்தை அசைக்க முடியாதையா. இந்த முதியோர் அரங்கத்துக்காக ஏங்கும் இளையோரைக் கண்டிருக்கின்றேன். சிக்கல் சண்முகசுந்தரம் என்ற பட்டத்தைபோல் சிக்கல் பாஞ்சாலன் என்ற ஒரு பட்டத்தை ஜெகதீசுக்கு கொடுக்கலாம். தமிழோடு விளையாடுவதற்கு பொருத்தமானவர் இந்த சிக்கலார்தான். பாஞ்சாலன் போடும் தமிழ் சிக்கலை விலக்குவது பெரும் சிக்கல். வளர்க....வளர்க....உமது தமிழ் தொண்டு. மற்றைய கலைஞர்களும் குறைந்தவர்கள் அல்ல. எல்லோரையும் பற்றி எழுத இடம் போதாதற்கு வருந்துகிறேன். இப்படி எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகளையும் தருவதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். அதற்கு உங்கள் ஒத்துளைப்புத்தான் தேவை நேயர்களே!

எல்லோரும் ஒருமித்து ஒரு குடையின்கீழ் நல்ல நிகழ்ச்சிகளை சேர்ந்து ரசிப்போமா? எதிர்காலம் பதில் சொல்லும்! தொடரும்.....

தமிழில் உரையாடி சர்வதேச தரம் மிக்க புதிய, பாவித்த

TOYOTA

வாகனங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

Mr. Pillai

416-292-2241 Ext. 239

Cell: 416-565-9080

brimell toyota 30 YEARS

4600 SHEPPARD AVENUE EAST, SCARBOROUGH, ON, M1S 3V5

Visit us on the web www.brimelltoyota.com

தொடர் நாவல்

திசை மாறிய தென்றல்

தொடர்:27 - அகில், U.K

கடந்த வாரத் தொடர்ச்சி.....

அத்தியாயம் - 17

திருமணம் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் நடந்தது. திருமணத்துக்கு அரசுக்கும் கோபாலகிருஷ்ணன் தன் கைபட முகவரி எழுதி அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். ஆனால் அரசுக்கு முக்கிய வேலை இருப்பதால் தான் வரமுடியாமல் இருப்பதாகப் போனில் வாழ்த்துச் செய்தி தெரிவித்தது மட்டும் இன்றி மணமக்களுக்குப் பரிசாகப் பணமும் அனுப்பி வைத்தான். அஸ்வினி எதிர்பார்த்ததுபோல் முதல் இரவே அமையவில்லை. சினிமாவில் வருவதுபோல் பாலும் செம்புமாக படுக்கையறைக்குள் நுழைந்தாள். ஆனால் சேகரோ அதற்கு நேர்மாறாக செயல்பட்டான். அவன் கட்டிலின் ஓரத்தில் தலையணை போட்டுப் படுத்துக்கொண்டான். அவனது இந்தச் செய்கை அஸ்வினிக்குத் துன்பத்தைக் கொடுத்தது. ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? நேற்றுவரை என்னோடு ஆசையாய் பேசியவருக்கு இன்று என்னாச்சு....? கட்டிலில் படுத்தாலும் தூக்கம் அவளுக்கு வரவில்லை. கண்களில் நீர் முட்டியதால் தலையணை நனைந்தது. காலையில் எழுந்து வெளியில் வந்தாள். கூடத்தில் பலர் இருந்தார்கள். அஸ்வினி சமையல் அறைக்குள் போனாள்.

"என்னடி இரவு தூங்கவில்லை போல கண்ணெல்லாம் சிவந்திருக்கு" என அங்கு இருந்த தோழிகளில் ஒருத்தி சொல்ல வேறு ஒருத்தி அவளது கன்னத்தை இலேசாகக் கிள்ளியபடியே சொன்னாள் "பாவம் சேகர் உன்னைப்போல அவரும் தூங்கியிருக்கமாட்டார் டீ தாரன் கொண்டுபோய்க் கொடு"

தோழிகள் ஆளுக்கு ஒன்றைச் சொல்லி அஸ்வினியை சீண்டினார்கள். அவர்கள் சீண்டியது போதாது என்று அங்கு வந்த அஸ்வினியின் சகோதரி மயூரியும் சீண்டினாள். "இரவு தூங்கவில்லைப் போல கண்ணைப்பார்க்கத் தெரியுது. பாவம் சேகர் நீ அவரை தூங்க விட்டிருக்கமாட்டாய் போ...போ...டீ ஆறிடப்போகுது" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

அன்று சாயந்தரத்துக்குப் பின் திருமணவீட்டுக்கு வந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் போய்க்கொண்டிருந்தார்கள். திருமணச் சந்தடிகள் ஓய்ந்து மணமக்கள் விரும்பும் தனிமையும் வந்தது. ஆனால்.... வழக்கமாக புதுமணத் தம்பதிகளிடம் விளையும் சந்தோஷமும் இன்பமும் எங்கோ காணாமல் போயிருந்தன. அஸ்வினி காரணம் தெரியாமல் தினம் தினம் கலங்கினாள். அதற்கொரு நாள் விடைகிடைப்பது போல் சேகர் அன்று எப்போதும் இல்லாத மாதிரிக் குடித்துவிட்டு வந்தான்.

"ஏன்டி.....அஸ்வினி"

அவர் குரலே ஒரு மாதிரியிருக்கு. இவருக்கு இன்று என்ன நடந்து விட்டது. இல்லை குடிச்சமாதிரி நடிக்கிறாரா....? என எண்ணியபடி சமையல் அறையில் இருந்து வெளியில் வந்தாள்.

"ஆ! என்ன பார்க்கிறாய். நான் குடிச்சிட்டுத்தான் வந்திருக்கிறன்" என்றான். உண்மையில் அவன் குடித்து விட்டுத்தான் வந்திருந்தான். மனம் சகிக்கமுடியாமல் இருந்தது.

"என்னங்க புதுப்பழக்கமாக இருக்கு"

"ஆமாண்டி புதுப்பழக்கமாகத்தான் இருக்கு. உன்னைப்பற்றி யார் யாரோ சொல்ல நான் கேட்க வேண்டியிருக்கில்ல....அதற்குத்தான் இது மருந்து...."

"என்னங்க சொல்லுறீங்க?"

"அவன் ஒருவன்தான் உனக்கு காதலனா? இல்லை வேறு யாரும் இருக்கிறாங்களா? சொல்லடி....சொல்லடி...." என அவளை அடித்தான். விபரம் விளங்காமல் அஸ்வினி குழம்பினாள்.

"ஏன்.....டி பேசாம இருக்கிற. பேசாம இருந்தா நான் விட்டிடுவன் என்று தானே பேசாம இருக்கிற. ஏண்டி நீ உத்தமி என்றுதானே இந்த வீட்டுக்கு உன்னுடைய பெயரை வைச்சன். ஆனா நீ....சீ வெக்கமாக இருக்குதடி" என்று சொல்லியபடி கையில் கொண்டு வந்த அடுத்த பியர் போத்திலையும் திறந்து குடித்து விட்டுச் சோபாவில் சாய்ந்தான்.

நடப்பது கனவா! இல்லை நிஜமா! என்று நினைத்தாள். அன்றில் இருந்து ஒவ்வொரு இரவும் இதே கதை. இன்றைக்கு அவரிடம் பேச வேணும். ஏன் இப்படிச் செய்கின்றார் என்று அறிய வேண்டும் என்று அஸ்வினி திடமாகத் தீர்மானித்துக் கொண்டபடி சோபாவில் இருந்தபோது அன்றும் அவன் வழக்கம்போல் குடித்துவிட்டு வந்தான். வந்தவன் வந்ததும் வராததுமாகத் கேட்டான்.

"யாரையடி பார்த்துக்கொண்டிருக்கிறாய்? என்னையா அல்லது வேறு யாரையுமா?"

"என்னங்க நீங்க பேசிறது? மனைவியைப் பார்த்து யாராவது இப்படி பேசுவாங்களா?"

"உண்மையைச் சொன்னா உறைக்குதோ!" கத்தினான்.

"இஞ்ச பாருங்க. நீங்க எதை வைத்து பேசிறீங்க என்று எனக்குத் தெரியல்ல. நீங்கள் தினமும் இப்படி குடிக்கிறதும் நடந்துக்கிறதுக்கும் காரணம் எனக்கு தெரிந்தாகணும்"

"யாரடி அந்த அரசு?"

அஸ்வினி திடுக்குற்று நிமிர்ந்தாள்.

"அவன் மட்டும்தானா? அல்லது வேறு யாரும் இருக்கின்றார்களா?"

"சீ என்னங்க நீங்க அசிங்கமாகப் பேசிறீங்க"

"எது அசிங்கம்? உனக்குக் காதலன் இருந்ததை வேறு ஒருவன் சொல்லி நான் அறியவைத்திருக்கிறாயே! இது அசிங்கம் இல்லையா?"

"இஞ்ச பாருங்க; எனக்கு அரசு என்பவரிடம் காதல் இருந்தது உண்மைதான். ஆனா அவர் ஒரு ஜென்டில்மென். அவர் என்னைக் காதலித்தபோது அவருடைய கை விரல்கள்கூட என்மீது பட்டது கிடையாது. அப்படிப்பட்டவரிடம் காதல் ஏற்பட்டது உண்மைதான். தவிர்க்க முடியாத காரணத்தால் அவரைத் திருமணம் செய்ய முடியாமல் போய்விட்டது"

"வாடி என் ராசாத்தி.....! அது காரணமில்லை. உன்னைச் சுவைத்த பிறகு அவனுக்கு எதுக்குவேணும் உன்னை? ஏன் உனக்குக்கூட அவனை எதுக்கு வேணும்? அதுதான் இரண்டு பேரும் விட்டிட்டிகள்"

"ஐயோ இப்படியெல்லாம் பேசாதீங்க"

"போடி.....போடி...புதுக்கதை விடாமல் போய்ப்படு" என்று ஓங்கி அவள் கன்னத்தில் அடித்தான். அவள் அழுதபடி அறைக்குள் சென்றபின் அவன் மீண்டும் குடிக்கத் தொடங்கி விட்டான். அமைதியாக இருந்த இந்த வீட்டை புயல் வீசத்தொடங்கி விட்டது. எப்ப அது அடங்கும் என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். கண்ணீர் கொட்டக் கொட்ட சமையலில் அஸ்வினி ஈடுபட்டிருந்தாள். நினைவெல்லாம் எப்படி சேகருக்குச் சொல்லிப் புரிய வைப்பது? அதனால்தான் முதல் இரவு அன்று அப்படி நடந்து கொண்டாரா? அப்ப யாரு அவருக்கு அரசைப்பற்றிச் சொன்னது? என்னைப் பெண் கேட்டபோது சேகருக்கு அரசைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்தன். அது முடியாமல் போய் விட்டது. பிறகு மெல்ல மெல்ல அவருக்கு சொல்லுவம் என்பதுக்குள் யாரோ பத்தவைத்துவிட்டார்கள். யார் சொல்லியிருப்பார்கள்....? மூர்த்தி அண்ணா சொல்லியிருக்க மாட்டார். அவர் அப்படிச் சொல்லக் கூடியவரும் இல்லை. அப்படி நினைச்சதே தப்பு. வேறு யாரு சொல்லியிருப்பார்கள் என அவள் சிந்தனையில் மூழ்கியபோது கணபதி லொட்ஜ் முதலாளியின் மகன் மனக்கண்முன் வந்து நின்றான். அவன்தான் சொல்லியிருக்க வேண்டும். யார் சொன்னார்களோ தெரியாது அல்லது அவனே பிரச்சனை கொடுக்க வேண்டும் என்று திருமண வீட்டுக்கு வந்திருக்கிறான். திருமண வீட்டில் அவன் பார்த்த பார்வையே சரியில்லை. இவ்வாறு அவள் மனதைப் போட்டுக் குழப்பியபோது போன் வந்தது. போனை எடுத்தாள். போன் வந்ததுகூடத் தெரியாது குடிப்பதிலேயே கண்ணாக சேகர் இருந்தான்.

"ஹலோ....!"

"ஹலோ! யாரு பேசுறது"

"நான் அப்பா பேசுறன். நாங்க நாளைக்கு மத்தியானம் அங்கு வாறம்"

"சரியப்பா"

போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தொடரும்.....

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பத்தாவது ஆண்டினை முன்னிட்டு நடத்தும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், தனது பத்தாவது ஆண்டினை முன்னிடடு இலக்கியப் போட்டிகளை நடத்தி பணப்பரிசுகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும் சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, ஆகியன நடத்தப்படுகின்றன. கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்கள் இதில் கலந்து கொள்ள முடியாது.

சிறுகதைகள், அச்சடித்த பக்கங்களாயின் ஆறு (06) பக்கங்களுக்கு மேற்படாமலும், கையெழுத்தாயின் பத்து (10)பக்கங்களுக்கும் குறையாமல் இருக்க வேண்டும்.

கவிதைகள், மரபுக் கவிதைகளாயின் நாற்பது (40) அடிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதைகளாயின் ஐம்பது (50) வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

அனைத்துப் படைப்புக்களும் ஏற்கனவே வெளியிடப்படாதவைகளாக இருக்க வேண்டும். படைப்புக்களைப் போட்டிக்கு அனுப்புகையில், எழுத்தாளரின் முழுப் பெயர், புனைபெயர், (இருப்பின்) தபால் முகவரி, (ஆங்கிலத்தில்) தொலைபேசி இலக்கம் ஆகியவை தனியான ஒரு தாளில் எழுதி, படைப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். படைப்பின் எந்தப் பக்கத்திலும் மேற்சொன்ன விபரங்கள் எழுதக்கூடாது.

சிறுகதை, கவிதைப் போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் பரிசுகள் பின்வருமாறு அமையும்

முதற்பரிசு கனடிய டாலர்கள் 300
இரண்டாம் பரிசு கனடிய டாலர்கள் 225
மூன்றாம் பரிசு கனடிய டாலர்கள் 150

2003 ஜனவரி 16 வியாழக்கிழமைக்கு முன்னராக படைப்புக்கள் கிடைக்க வேண்டும். மூலப் பிரதிகளை மட்டுமே அனுப்ப வேண்டும். பாக்லில் அனுப்ப முடியாது. போட்டி தொடர்பான எந்தத் தொடர்புகளும் ஏற்கப்பட மாட்டாது. போட்டி நடுவர்களுடன் இணைந்ததாக கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முடிவே இறுதியானது. படைப்புக்களைப் போட்டிக்கு அனுப்ப வேண்டிய முகவரி: CTWA, 47 Thorncliffe Park Dr, Unit : 204, Toronto, Ont. M4H 1J5, Canada

2003 நடுப்பகுதியில் கனடாவில் நடைபெறும் பத்தாவது ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

உதயன் இராசி பலன்

1.11.2002 - 7.11.2002

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான வழிவகைகள் ஏற்படும். கல்வியை மேற்கொள்பவர்கட்கு அவர்கள் தம் மனதை ஒருமைப்படுத்தி பூரணமாக கல்வியில் மனதை ஈடுபடுத்திக்கொள்வர். பொருளாதாரத் துறையில் வளர்ச்சி காணப்படும். மனை வேண்டவும் விற்கவும் நல்ல பலன் காணமுடியும்.

இடபம்: கார்த்திகை2ம், 3ம் பாதங்கள், ரோகிணி, மிருகசிரிடம்1ம் , 2ம் பாதங்கள்

பொருளாதார முன்னேற்றம் படிப்படியாக தடைகளின் மத்தியில் ஏற்படலாம். உறவினரோடு மனஸ்தாபம் ஏற்படாவண்ணம் நடந்து கொள்வது புத்திசாலித்தனமாகும். முயற்சிகள் கடின உழைப்பின் பின்னரே பலிதமாகலாம். வீண் அலைச்சலும் பிரயாணத்தால் பயன் அதிகமிராது.

மிதுனம்: மிருகசிரிடம்3ம்,4ம் பாதங்கள், திருவாதிரை புனர்பூசம்1ம்,2ம்,3ம், பாதங்கள்

சிறிய பல தொல்லைகள் குறுக்கிட்டபோதிலும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் இருக்கவே செய்யும். மன மகிழ்ச்சியைத்தரக் கூடிய நிகழ்ச்சிகள் அமையலாம். புதிய நண்பர்களின் வரவேற்படும். ஆடல் பாடல்களிலும் கேளிக்கைகளிலும் விருந்துகளிலும் பங்கேற்கநேரிடும்.

கடகம்: புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்

பொருளாதார வளம் சிறந்தோங்க முயற்சிகள் பலிதமாகலாம்.மனைவிமூலமாக சிறப்புகள் காணப்படலாம். பெரியார்களது பாராட்டையும் அனைவருடைய பாராட்டையும் நன் மதிப்பையும் பெறக்கூடியதாக அமையலாம். கடிதங்களிற்கான பதில் மனத்திருப்தியைத்தரும்.

சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

எதுவிடையத்திலும் மிக நிதானமாகவும், எச்சரிக்கையோடும் கவனமாகவும் மேற்கொள்ளுதல் ஏமாற்றந்தராது. புதிய முயற்சிகளை மேற்கொள்வதில் மிகவும் அவதானம் வேண்டும். அவற்றைத் தற்காலிகமாக பிற்போடுவது புத்திசாதுரியமாகலாம். நஷ்டம் சச்சரவு ஏற்படக்கூடும்.

கன்னி: உத்திரம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதங்கள்

எதிராளிகளின் சதிவேலைகளில் சிக்கிடாவண்ணம் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். பொருளாதாரத்தில் இழப்புகள் ஏற்படலாம். அதிகாரிகளது கோபத்திற்கும் உள்ளாகவேண்டிய குழ்நிலை ஏற்படலாம். வயிறுசம்பந்தமான நோயினால் வருந்தவேண்டிய நிலை காணப்படலாம்.

துலாம்: சித்திரை 3ம், 4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதங்கள்

பெரியோர்களது ஆதரவும் ஆசிகளும் ஏற்படும். மனைவிமக்களால் மனமகிழ்வைக்காணமுடியும். பொருளாதாரத்தில் நிறைவு காணும்படியாக இருக்கும். உறவினர்களதும் நண்பர்களதும் எதிர்பாராத உதவிகிடைக்கும். மனமகிழ்ச்சியைத் தரும் வகையில் பொழுது கழியலாம்.

விருச்சிகம்: விசாகம்4ம் பாதம், அனுஷம், கேட்டை

செய்தொழிலில் இடையூறுகள் கஷ்டங்கள், நஷ்டங்கள் முதலியன ஏற்படக்கூடுமாதலால் மிகவும் எச்சரிக்கையோடு இவற்றை எதிர்கொள்ளவேண்டும். கடன் தொல்லை அவமானம் கூட வரலாம். நோயின் வருந்த வேண்டி வரலாம். மேலதிகாரிகளது அனுதாபமோ ஆதரவோ இராது.

தனுஸ்: மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்

தீயவர்களின் தொடர்பினால் மனம் தவறான திசைக்கு இழுத்துச் செயல்படலாம். இதன் காரணமாக பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை தோன்றலாம். செய்தொழிலில் இடையூறுகள் தென்படும் பிறரது ஆதரவோ உதவியோ கிட்டாத வகையில் தனித்து விடப்படலாம்.

மகரம்: உத்திராடம்2ம்,3ம்,4ம்பாதங்கள், திருவோணம்,அவிட்டம்1ம்,2ம் பாதங்கள்

கடன் தொல்லைகளினால் அவமானத்திற்குள்ளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம். குடும்பத்தில் ஒருவரது உடல் நிலை மிகவும் பாதிப்பிற்குள்ளாகலாம். உரியநேர கவனிப்பும் சிகிச்சையுமிருந்தால் பிழைத்துக்கொள்ள வழிபிறக்கும்.மேலதிகாரிகளின் அனுதாபம் இருக்கும்.

கும்பம்: அவிட்டம்3ம்,4ம்பாதங்கள்,சதயம்,பூரட்டாதி1ம்,2ம்,3ம், பாதங்கள்

வாகனங்கள் வாங்குவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. செய்தொழிலின் மூலம் நன்மைகள் ஏற்படக்கூடிய நிலைகள் தென்படுகின்றன. வாழ்க்கையில் இது ஒரு திருப்புமுனை என்று கருதக்கூடிய மாதிரியாக இருக்கும் புதிய தொழிலை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். உயர்வு மாற்றம் வரலாம்.

மீனம்: பூரட்டாதி4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

பொருள் வரவோடு சேமிக்க வேண்டுமென்ற எண்ணங்கள் தலைதூக்கும். புதுமனை வேண்டவேண்டியிருக்கும் இத்தோடு வேறுபல புதிய அத்தியாவசியப்பொருட்களும் வேண்டவேண்டியிருக்கும். காதல் விவகாரங்கள் நல்ல திருப்புமுனைகாணக்கூடியதாக இருக்கும்.

ஜோதிடமணி ஈஸ்வர முத்துக்குமாரசாமிக்குருக்கள்
74, DANDELION ROAD, BRAMPTON, ONTARIO L6R1Y3. 905 793 2085
(உங்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தும் வகையினில் ஜாதக பலன்களும் விளக்கங்களும் தரவல்லவர்)

Do you need a LOAN or MORTGAGE?
உங்களுக்கு கடன் வசதி Mortgage வசதி செய்து தர வேண்டுமா?
Mortgage
(Residential & Commercial)
Loans
(Business, Personal, Credit Cards, Line of Credit, Taxi, Taxi plate, Car, Truck etc.)
Note: No brokerage fees from qualified buyers and interest rate discount up to 1% or 3% cash back and more...
TARLOCHAN AUJLA (Ph.D)
ALPHA FINANCIAL SERVICES
PHONE: 416-750-1496 CELL: 416-885-1490
2390 Eglinton Avenue East, Suite 238, Scarborough, ON

Dr. Nirmala Siva
Family Dentist
டாக்டர். நிர்மலா சிவா
குடும்ப பல் வைத்தியர்

உங்கள் பற்களை உறுதியாகவும்,
ஆரோக்கியமாகவும் பேணுவதற்கு நாடுங்கள்
HUMBER VALLEY DENTAL CENTER
2630 Kipling Avenue
Suite 8,
Rexdale, ON, M9V 4B9
(Kipling / Steeles)
416-745-4500
CELL: 416-457-7482
SIVA
தீங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு
GOREWAY DENTAL CENTRE
7125 Gorway Drive,
Suite 206,
Malton, ON, L4T 4H3
(Derry / Gorway Derive)
905-673-7874
CELL: 416-457-7482
SIVA
தீங்கள், செவ்வாய், வியாழன், சனி,

உங்கள் வீடு ஒன்றை
விற்க விரும்புகிறீர்களா?
வாங்க விரும்புகிறீர்களா?

Meena Sakthivel
(Sales Associate)
Gold Award Winner up to 2000
Platinum Award Winner 2001
Bus:
416-281-8090
Res:
905-428-9299
Fax:
416-281-2753
தரமான
சுத்தமான சூழல்
சுற்றாடல்
நியாயமான விலை
குறைந்த வட்டி வீத
அடைமான ஒழுங்குகள்
இலவச மதிப்பீடு
வெற்றிகரமான
சந்தைப்படுத்தும் திட்டம்
இவையாவும் கலந்த
எனது மாசற்ற சேவைக்கு
எனது உத்தரவாதம்
விபரங்களுக்கு
அழையுங்கள்
மீனா சக்திவேல்
416-281-8090
HOMELIFE
Home Life / Champions Realty Inc.
Realtor Member
8130 Sheppard Ave. E., Suite 206, Toronto, ON M1B 3W3

ஸ்ரீ முருகனின் "புது உறவு"

திரைப்பட விமர்சனம் - விஜயா ராமன்

கதை: ஒரு தாய், இரண்டு பிள்ளைகள். இருவரின் குடும்பங்கள். மூத்தவன் குடும்பத்தில் இரண்டு பெண்களும் ஒரு மகனும். இளையவன் குடும்பத்தில் ஒருமகனும் ஒரு மகளும். அனைவரும் ஒரே குடும்பமாக மன மொத்த நிலையில் வாழ்கின்றனர். அமைதியாகச் செல்லும் வாழ்க்கையில் சகோதரர்களின் இரண்டு மனைவிகளாலும் சிறுசிறு சலசலப்புகள். அவை வளர குழந்தைகளின் சிறு விளையாட்டுச் சண்டைகள். .இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவதாக இரண்டாவது மருமகள் பொருமுகிறாள். விளைவு, சிறு முணுமுணுப்புகள் பெரிதாகி தம்பி குடும்பத்தவர் வீட்டை விட்டே ஒருநாள் பிரிந்து போய்விடுகின்றனர்.

குடும்பப் பிரிவுக்கு அண்ணன் மகளும் ஒருகாரணமாகிறாள். அவளது சுதந்திரப் போக்கு அவளைக் காதலனுடன் ஓடிவிடச்செய்கிறது. இடிதாங்கி யாக எல்லாவற்றையும் தாங்கிய அண்ணன் தன் மகனை டாக்டராக்கி, ஒரு நல்ல பெண்ணை அவனுக்கு மனைவியாக்கி, இரண்டாவது மகளுக்கும் திருமணம் செய்து மன நிம்மதி தேடுகிறார். சிதறிப்போன தம்பியின் குடும்பத்தில் அவனது குழந்தைகளைப் பெரியவர்களாக மீண்டும் சந்தித்து உறவுகளை ஒன்றுபடுத்துகிறார். அவரது மனம் கோணாமல் மருமகளும் வரும் உறவுகளை ஏற்கிறாள். இறுதியில் மனக்காயங்களுக்கு மருந்துதேடி தனது தாயக நண்பர்களுடன் வாழ்ந்திருக்கும் நாட்டை விடுத்து அண்ணன் புதுமலர்ச்சி பெற்றுவரும் தமது பிறந்த மண்ணை நாடிப் புறப்பட்டு விடுகிறார். முன்பே அங்கு சென்றுவிட்ட தன் வயதான தாயுடன் அமைதியாகத் தன்மீதி நாட்களைக் கழிக்க வேண்டும் என்ற உறுதி அவரை வழிநடத்திச் செல்கிறது.

நிறை: வலுவான ஒரு நல்ல கதையை எடுத்துக்கொண்டு அதில் தமது தாய் நாட்டுப் பற்றினையும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் அருமையாகக் காட்சிப்படுத்தியுள்ளனர். அமைதியான குடும்பக்கதை மனதிற்கு நிறைவைத் தருகிறது.

குறை: கதையின்படி காட்சிகளை அமைத்தவர்கள் அதன் முக்கிய திருப்பங்களை விளங்கும்படி அமைக்கவில்லை. அதனால் படம் பார்ப்பவர் களுக்கு ஒரு தடுமாற்றம் ஏற்படுகிறது. கடைசிக்காட்சிகள் புரியாத விரைவுக் காட்சிகளாக மாறி பல வினாக்களை ஏற்படுத்திவிட்டன என்று சொல்லலாம்.

டைரக்ஷன்: அருமையான டைரக்ஷன். குடும்பத்தில் நடைபெறும் காட்சிகள் மிக இயல்பாக அமைந்தது சிறப்பு. ஒவ்வொரு கதா பாத்திரத்தை யும் தனிப்பட்ட குணங்களுடன் வெளிப்படுத்த முயன்று வெற்றியும் பெற்றிருக்கிறார். எல்லோரும் மிகச் சிறப்பாகத் தத்தம் பாத்திரங்களை வெளிப்படுத்தியதில் இயக்குனரின் உழைப்பு நன்றாகத் தெரிந்தது. சிறுவர்கள் முதல் ஒரே ஒரு காட்சியில் மட்டும் வருபவர்வரை அனைவருமே மிக இயல்பாக நடித்துள்ளனர். திரைப்படத்தைப் பார்க்கும்போது இது நன்கு விளங்கும். குடும்பப் பின்னணியில் வரும் சில நகைச்சுவைக் காட்சிகள் முகத்தில் புன்னகையை வரவழைக்கின்றன.

குறை: கதையின் தொடர்பு எளிதில் விளங்கிக் கொள்ள முடியாமல் ஒரு விதக் குழப்பம் ஏற்படுகிறது. வயதான தாய் திடீரென்று காணாமற்போய் திடீரென்று திரும்ப வருகிறார். பிறகு உடல் நலமில்லாத நிலையிலும் குடும்பத்தை விட்டுத் தன் தாய் நாட்டுக்குப் போய் விட்டதாகக் கூறுவது ஏற்புடையதாக இல்லை. டாக்டராக வருபவரும் தம்பியின் பிள்ளைகளாக வருபவரும் வந்து போகிறார்கள். அவ்வளவுதான்! நீண்டநாள் கழித்துச் சந்திக்கும் சகோதரர்கள் கட்டித் தழுவித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தாமல் நின்ற இடத்திலேயே சும்மா பார்த்துக்கொண்டிருப்பது வியப்பாக இருந்தது. அதேபோல் மருமகளின் அண்ணன் ஒரு அருமையான பாத்திரம். அவரைச் சரிவரப் பயன்படுத்தாமல் அம்போ என்று விட்டது பரிதாபம். தாயாரும் இந்த அடாவடி அண்ணனும் மிக நன்றாகச் செய்திருந்தனர். அதேபோல் தொழிற்சாலையில் நடைபெறும் நகைச்சுவைக் காட்சிகள் படத்திற்குத் திருஷ்டி பரிகாரம். கதையையும் நடிகர்களையும் சரியாகப் பயன்படுத்திய இயக்குனர் காட்சிகளை விளங்கப்படுத்துவதில் சரியாகச் செயல்படவில்லை என்றே கூறலாம்.

இசை: பாஸ் மார்க்! இரு பாடல்களும் பின்னணி இசையும் நன்றாக இருந்தன. இளங்கலைஞர் கபிலேஷ்வரின் சில பாடல்கள் காட்சிக்குப் பொருத்தமான இனிய பின்னணியாக அமைந்தன.

முடிவுரை: புது உறவு வரவேற்கக்கூடிய புது முயற்சி. குடும்பத்துடன் நிம்மதியாகப் பார்க்கக்கூடிய நல்ல படம். நல்ல டைரக்ஷனும் நல்ல வசனங்களும் சிறந்த ஒளிப்பதிவும் இயல்பான நடிப்பும் பாராட்டக்கூடியவை.***

கந்தசஷ்டி மகிமை

19 ம் பக்கத் தொடர்ச்சி

பூமி இதுவேயாகும். இதனால் இதற்கு வெற்றி நகர் என்றும் வெற்றி மாநகர் என்றும் திருச்செந்தூர் என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டு. இத்தலத்தில் முருகப் பெருமான் முதலில் சிவலிங்கத் திருவுருவம் வைத்து சிவபூசை செய்து இறைவனை வழிபட்டார். இது இத்தலத்தின் ஆதி கோயிலாகும். இதன் விரிவே இன்று நாம் காணும் திருச்செந்தூர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் இன்றும் சிவலிங்கம் மூலவராக இருப்பதைக் காணலாம். ஜெகன்நாதலிங்கம் என்று சிவலிங்கத்தைப் பக்தர்கள் போற்றி வழிபடுவார்கள். எனவே இத்திருக்கோயிலை வழிபடுவதனால் சிவபெருமானின் திருவருளையும் முருகப் பெருமானின் திருவருளையும் எளிதில் பெறும் வாய்ப்பு உண்டு.

வீரமகேந்திரபுரி என்னும் அசுரனின் கோட்டை வங்கக் கடலின் மத்தியில் விளங்கியது. இது அசுரர்களின் சுவர்க்க பூமியாகும். சூரபதுமனின் உடன் பிறந்தோர் வாழ்ந்த வீரபுரிநகராகும். சூரபதுமன் என்னும் அசுரன் மாயாபுரியில் வாழ்ந்தான். அசுரர்களின் வன்செயல்களால் விண்ணுலகத் தேவர்கள் கிரௌஞ்ச மலையில் சிறைவாசத்தை அனுபவித்தார்கள். சிவபெருமானின் திருவுள்ளக் கருத்தினை முருகப்பெருமான் நிறைவுசெய்ய விரும்பி தேவர்களின் துன்பத்தைத் துடைக்க விரும்பினார். இதன் பயனாக முருகப்பெருமான் தன் ஞானவேலால் கிரௌஞ்ச மலையைப் பொடியாக்கி தாரகாசுரனை அழித்து தேவர்களை சிறைமீட்டு அருள்புரிந்தார். சூரபதுமனின் வேண்டுகோளுக்கு அமைய சிங்கமுகாசுரன் முருகனை எதிர்த்து போராடி இறுதியில் அழிவுற்றான். இறுதியாக சூரபதுமன் முருகனை எதிர்த்த பொழுது எம்பெருமானின் ஞானவேலால் இருகூறாகப் பிழந்தார். எனினும் அசுரன் இறக்கவில்லை. அவனது தவவலிமையால் சூரபதுமன் சேவலும் மயிலுமாகத் தோன்றி முருகனை எதிர்த்தார். இவ்வேளையில் முருகப் பெருமான் தன் அருட்பார்வையினால் ஞானத்தை நல்கி சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்று நல்லருள் புரிந்தார். இச்செய்கையில் இருந்து "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுறுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்" என்பது தெளிவாகின்றது. திருச்செந்தூர் தலத்திலுள்ள நாழிக் கிணறு, புஷ்பகரணி தீர்த்தம், சமுத்திரத்தீர்த்தம் என்றும் பெருமைக்குரிய புனிததீர்த்தமாகும். இதில் நீராடினால் பிறவித்துன்பம் அவன் அருளால் நீங்கப் பெறும். கந்தசஷ்டி தினங்களில் எண்ணற்ற மக்கள் சமுத்திர தீர்த்தம் நாடி துன்பம் நீங்கி இன்பம் பெறுவது இத்தலத்துக்குரிய சிறப்பாகும்.

காஞ்சி குமரக்கோட்டம் ஆலயத்தின் பிரதம பூசாரியாக விளங்கிய காஞ்சியப்ப சிவாச்சாரியார் முருகனின் அருளால் பாடிய பாடல்கள் தான் கந்தபுராணமாகும். இது ஆறு காண்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷாகாண்டம் என்பனவாகும். சிவனுக்கு சிவபுராணம் (திருவாசகம்) போன்று முருகப் பெருமானுக்கு உரியது கந்தபுராணம் ஆகும். இதனை கந்தசஷ்டி நாட்களில் பொருள் உணர்ந்து ஒதி வழிபட்டால் அவன் அருளால் எல்லாச் செல்வமும் நமக்கு கிடைக்கப்பெறும். கந்தபுராணத்தின் விரிவுரையை நாம் செவிகளால் கேட்டு உணர்ந்தால் பெரும் பயன் உண்டு. நம்முன்னோர்கள் கந்தபுராண நூலை பட்டுத் துணியால் சுற்றி பூசை அறையில் வைத்து பூசிப்பது வழக்கம். இன்றும் இவ்வழக்கம் நிலை பெற்று உள்ளது. எனவே கந்தபுராணம், கந்தபூராண நவநீதம், கந்தபுராண போதனை, திருச்செந்தூர் புராணம் போன்ற நூல்களில் ஒன்றை கந்தசஷ்டி தினங்களில் ஒதி வழிபாடு செய்தால் மனத்தில் முருகப் பெருமான் முன்வந்து நிற்பார் என்பது நிச்சயம்.***

PROMOTERS AUTO CENTER

பத்து வருடங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த எம் நிறுவனத்திற்கு விருதுகளும் பாராட்டுகளும் கிடைத்த வண்ணம் உள்ளன.

CELEBRATING 10 YEARS OF SERVICE 1992-2002

We Offer Following Service

- *Air- Condition Service and Repair*
- *Annual Inspection Sticker for Vans & Cube Vans*
- *Brake Repair*
- *Body Work & Painting*
- *Computerzsed Wheel Alignment*
- *Clutch Repair*
- *Drive Clean Test*
- *Drive Clean Repair Facility*
- *Engine Rebuilding*
- *Electrical Systems*
- *Exhuast Systems*
- *Engine Shampoo*
- *Front end & Rear end Works*
- *Fuel Injection & Carburetor*
- *Fuel Injector Cleaning*
- *Heating Systems Repair*
- *Insurance Claims Works (All Types)*
- *Oil & Filter Change*
- *Safety Inspection & Certification (While you wait)*
- *Tune-up*
- *Tire, Wheel Balancing*

416-285-8608 416-752-9797

WARDEN - SHERRY CENTRE

773 Warden Avenue, Unit 08,

Scarborough, Ontario

www.promotersauto.com

தொடர் சிறுகதை

தண்டிக்கப்பட்ட நியாயங்கள்

- அல்வையூர் காந்தி அருணாசலம்

5

கடந்த வாரத் தொடர்ச்சி....

"எவ்வளவோ தண்டனைகளை பெண்ணாய்ப் பிறந்த பாவத்திற்காக குற்றம் செய்யாமலே சுமக்க வேண்டித்தானிருக்கு. எங்களுக்கு வந்தால் சரி; மற்றவைக்கு வரேக்கை ஒரு நொட்டை, சொட்டை சொல்லுறதே இந்த உலகத்தின்ரை பழக்கமாய்ப் போச்சு." படிப்பு வாசனையே அறியாத அன்பூரணம் ஒரு மேடைப்பேச்சாளர்போல் சீர்திருத்தக் கொள்கைகளைக் கூறியபடி மகளை அணைத்துக்கொண்டாள். பாரிசவாதத்தால் ஒரு பக்கம் இழுத்திருந்த தாயின் கையை அனுதாபத்துடன் மெல்ல இழுத்து தனது விரல்களுக்குள் பிணைத்துக் கொண்டாள் ராதா.

மகனின் கற்பை ஊரார் கூறுபோட்டுவிடுவார்கள் என்ற பயம் அன்னபூரணத்திற்கு இருந்ததே ஒழிய மேலும் அந்த நிகழ்வு தன் மகளுக்கு ஒரு கொடிய நோயைக் கொடுத்திருக்க முடியும் என்பதை அந்தத் தாய் கற்பனையில்கூட அறிவாளா என்ன? ஆண்டவன் சிலவேளைகளில் ஏனோ நியாயங்களைக் கூடத் தண்டித்து விடுகிறார். அப்பாவியான ராதாவுக்கும் கருணை வடிவான கடவுள் ஒரு கொடூரமான தீர்ப்பைக் கொடுத்திருந்தார். தனது நடக்க முடியாத நிலையால்தானே இடம்பெயர முடியாமல் ராதா இவ்வளவு துன்பத்தையும் அனுபவிக்கிறாள் என்ற எண்ணம் அன்னபூரணத்தை உள்ளூர அரித்ததில் அவள் விரைவிலேயே காலனின் கைப்பிடிக்குள் அகப்பட்டு விட்டாள்.

அநாதையாக நின்ற ராதாவிற்கு இராணுவத்தினரின் கொடுமை அடிக்கடி நினைவில் வந்து உயிரை மட்டுமல்ல உடலையும் வருத்தியது. ஏனோ தானோவென்று வாழ்ந்து கொண்டிருந்தவள் சங்கருடன் உள்ள கடிதத் தொடர்பையும் நிறுத்தி விட்டாள். மனம் குற்றம் செய்தவள்போல் குறுகுறுத்தது. இது போதாதென்று இராணுவத்தினர் ராதாவுக்குக் கொடுத்திருந்த பரிசில் அவள் நிரந்தர நோயாளியானாள்.

அடிக்கடி மனநோயாலும் உடல் நோயாலும் வாடிய ராதாவை சோதித்த டாக்டர் அவளுக்கு மேலுமொரு இடியைக் கொடுத்திருந்தார். ராதாவுக்கு "எயிட்ஸ் நோய்" பீடித்திருக்கின்றதென்பதுதான் அந்தப் பேரிடி! அது தெரிந்த பின்னர் அவள்மீது கொஞ்சநஞ்சமிருந்த சொந்த பந்தத்தையும் அறுத்துவிட்டனர் இனத்தவர்கள்.

அன்று தொடங்கி இந்த விநாடிவரை ராதா இந்த சமூகத்தினரின் கூரான வார்த்தைகளால் ஜாடையாகவும் நேரடியாகவும் சின்னாபின்னமாக குத்திக் கிழிக்கப்பட்டாள். எப்போதோ மாய்ந்து மடிந்திருக்க வேண்டியவள் சங்கரை ஒரு முறையாவது பார்க்க வேண்டுமென்ற ஆவலில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்தாள். இன்று அந்த ஆசை நிறைவேறியதே அவள் இவ்வளவு நாட்களும்பட்ட துன்பத்திற்கெல்லாம் வடிகாலாகிப் போனது.

ராதாவுக்கு நாக்கு வரண்டு சிறிது தண்ணீர் குடித்தால் தேவலாம் போலிருந்தது. அவளை அந்தக் கோலத்தில் பார்த்தபோது சங்கரின் கண்களுக்குள் பொங்கித் ததும்பியதே அந்தக் கண்ணீர்....அது போதும். தனக்கு உதவாதவள் என்று தெரிந்தும் எனக்காக அந்தக் கண்களில் நிரம்பி வழியும் நீர் இருக்கும்போது இந்த நாக்குக்கு தண்ணீர் ஒரு கேடா? இமைகள் பிரிக்க முடியாமல் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருந்தன. முடிய விழிகளுக்குள் முழுமையாக நிறைந்திருந்தான் சங்கர். அவளைக் கண்டவுடன் கோபமாகப் பேசுவதுபோல் நடித்தானே ஒழிய உண்மையில் அவனால் அந்த நடிப்பில் வெற்றியடைய முடியவில்லை. கோபத்தையும்மீறிக் கண்களுக்குள் தெரிந்த கனிவு. அந்த வார்த்தைகளுக்குள் இழையோடிய பாசமும் பரிவும் பதட்டமும்....இப்போது நினைத்தாலும் ராதாவை சிலிர்க்க வைத்தது. முடியாது; அவனால் அவளை வெறுக்க முடியாது. இருவரின் அன்புக்கு சாட்சியாக இது போதும். தான் விரும்பியவனுடன் ஆண்டாண்டு காலம் சந்தோஷமாக வாழ்ந்த பெருமையில் முகம் விகசித்தது. குறுநகை பரவிய ராதாவின் உதடுகள் பிரிந்து காவியேறிய பற்கள் துருத்திக்கொண்டு வெளியே தெரிந்தன.

"டாக்டர்....டாக்டர்" என்று நர்ஸ் ஒருத்தியின் குரல் பதட்டமாக ஒலிப்பதைக் கேட்கும் சக்தி ராதாவின் செவிகளுக்கு இருக்கவில்லை. அவள் உடல்தான் சின்னாபின்னப்பட்டிருந்ததே தவிர உயிர் மட்டும் இன்பமாக வானத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

முற்றும்

செல்வி பிரியங்கா தவேந்திரனின் சதங்கை பூசையும் பரத நாட்டியமும்

கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதியன்று செல்வி. பிரியங்கா தவேந்திரன் அவர்களின் சதங்கை பூசையும் பரதநாட்டியமும் யோர்க்வூட் பொது நூலகக் கலையரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றன.

மௌன வணக்கத்தைத் தொடர்ந்து தலைமை விருந்தினர் திரு.திருமதி. இராசநாயகம் அவர்களும் சிறப்பு விருந்தினர் திரு. சபா. அருள்சுப்பிரமணியம் அவர்களும் மங்கல விளக்கேற்றிவைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலாவதாக செல்வி பிரியங்கா, நடராஜர் சிலைக்கு வணக்கம் செலுத்தினார். அதன்பின் பரதநாட்டிய ஆசிரியை தமது மாணாக்கி செல்வி பிரியங்காவிற்குச் சபையோரின் பலத்த கரவோசையின் மத்தியில் சதங்கைகளை அணிவித்தார்.

தெய்வம், குரு, பெற்றோர் என்போருக்குப் பிரியங்கா வணக்கம் செலுத்தியமை அன்றைய நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் அமைந்திருந்தது. ஆரம்ப நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து திருமதி சாந்தி அரவிந்தன், செல்வி கவிதா பத்திநாதர் என்போரால் வரவேற்புரை வழங்கப்பட்டது. வரவேற்புரையைத் தொடர்ந்து நடன நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நடன நிகழ்ச்சிகளின் மத்தியில் சிறப்பு விருந்தினரான மாதகல் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் தமிழ் மலர் ஒளியிழை தயாரிப்பாளருமான திரு. சபா. அருள்சுப்பிரமணியம் அவர்களின் வாழ்த்துரை இடம்பெற்றது. அவர் தமது உரையில் "பரதநாட்டியத்தின் வெற்றியே மெய்ப்பாடுகளை அரங்கத்தில் அழகுற வெளிப்படுத்துவதிலேயே தங்கியுள்ளதென்று அம்முயற்சியிற் தன்னால் முன்னுக்கு வர முடியும் என்பதைச் செல்வி பிரியங்கா எங்கள் முன் நிறுவியுள்ளார்" என்றும் கூறினார். அத்துடன் அபிநயிக்கும் பாடலை விளங்கிப் பொருளுணர்ந்து ஒருவர் நடனமாடினால் மெய்ப்பாடுகளும் அதற்கேற்பவே தத்ரூபமாக வெளிப்படும் என்றும் அதற்குத் தமிழ்மொழித் தேர்வு மிகமிக அவசியமென்றும் எடுத்துரைத்தார்.

பிரியங்காவின் நடன நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொடர்ந்து தலைமை விருந்தினர் முன்னாள் அதிபர் திரு. செ. இராஜநாயகம் அவர்கள் உரையாற்றினார். "கனடாக் கலை மன்றத்தை நடத்திப் பல சிறுவர்களைப் பரதக்கலையில் சிறப்புறத் தேர்ச்சிபெறச் செய்துவரும் சிறீமதி நிரஞ்சனா சந்துரு அவர்களின் மாணவியாகிய பிரியங்கா தவேந்திரனின் நடன நிகழ்ச்சி அவருக்குக் கலையுலகில் நல்லதோர் எதிர்காலம் உண்டென்பதை வெளிக்காட்டும் வைபவமாக அமைந்திருக்கிறது" என்று தம்முரையிற் குறிப்பிட்டதோடு "ஆசானிடமுள்ள வித்துவத் திறமைகள் எப்போதும் நல்மாணாக்கர்மூலம் வெளிக் கொணரப்படும் என்பதைச் செல்வி பிரியங்கா தனது இன்றைய நிகழ்ச்சிமூலம் சபைக்கு எடுத்துக்காட்டிள்ளார்" என்றும் கூறி மாணவியையும் ஆசிரியரையும் வாழ்த்தினார். மேலும் தமிழ்க் கலைமூலம் தமிழ்ப் பண்பாடு நம் இளம் தலைமுறையினரிடம் ஒட்டிக்கொள்ள உதவும் பெற்றோர் என்றென்றும் பாராட்டப்பட வேண்டியவர்களே என்றும் சிறுமியின் பெற்றோரையும் வாழ்த்தினார்.

இறுதி நிகழ்ச்சியாக நடந்த மயில் நடனத்தைத் தொடர்ந்து குரு காணிக்கை செலுத்தப்பட்டதோடு நிகழ்ச்சி வெற்றிபெற உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

-யோகா. அ

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

தற்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் நஷ்டஈடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய நஷ்டஈடுகள்
- மற்றைய இழப்புகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதிமுறைகளை மீறிய குற்றங்கள்

Accident & Traffic Ticket

(12 Years Insurance Claims Experience)

Weston நகரில்

2095 Weston Road, Suite 203,
Toronto, ON
Tel: 416-245-6555
Fax: 416-245-7766

Scarborough நகரில்

2390 Eglinton Ave. E., Suite 223,
Scarborough, ON
Tel: 416-755-2801
Fax: 416-755-8030

யமலோக நீதிமன்றம்

பல்கலைச் செல்வன்
முஹம்மது ஹன்ஸீர்

"யமலோக நீதிமன்றம்" தொடர் நாடகம் -35

கதை வசனம்: பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்

"உதயன்" ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிய விஷேட வெளியீடு

கடந்த வாரத் தொடர்ச்சி.....

சித்திர புத்திரன்: அவர்களுக்கு அடிக்குமேல் அடி, கொடுமைக்குமேல் கொடுமை, தொல்லைக்குமேல் தொல்லை. இவற்றையெல்லாம் யார் கொடுத்தது என்பது புரிகின்றதா?

கொத்தலாவல: ஆமாம்

சித்திர புத்திரன்: யாரென்று கூறுங்கள் பார்க்கலாம்?

கொத்தலாவல: சிங்கள அரசியல் தலைவர்கள்.

சித்திர புத்திரன்: இந்த நாட்டை வளம்படுத்த வந்தவர்களை வரவேற்று உபசரிக்க ஆசைப்பட வேண்டிய நீர் புறக்கணித்து அனுப்பத் திட்டமிட்டீரே!

கொத்தலாவல: அது வந்து....வந்து...

சித்திர புத்திரன்: அதனையாவது சரியாகச் செய்யாது அவர்கள் எல்லோரையும் நடு ரோட்டிலல்லவா, நடு ஆற்றிலல்லவா விட்டு விட்டீர்கள்.

கொத்தலாவல: இப்பொழுதுதான் விளங்குகின்றது.

சித்திர புத்திரன்: சிங்களப் பெரும்பான்மை என்ற மமதையில் சிறுபான்மையினரை எதுவும் செய்து விடலாமென்று மதங்கொண்ட யானை போன்றல்லவா செயல்பட்டிருக்கின்றீர்.

கொத்தலாவல: இப்பொழுதுதான் நான் செய்துள்ள தவறுகளை உணர்கின்றேன்.

சித்திர புத்திரன்: உமது புத்த மதத்தில் எங்கேயாவது இவ்வாறு செய்யும்படி கூறப்பட்டிருக்கின்றதா?

கொத்தலாவல: இல்லை

சித்திர புத்திரன்: ஒருமுறை நீர் உமது சிங்கள சகாக்களிடம் சிங்கள அரசர்களாலும் போர்த்துக்கேயர்களாலும் ஒல்லாந்தர்களாலும் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் மாறியுள்ளனரெனவும் இவர்களும் அதாவது மலைநாட்டுத் தமிழர்களும் காலப்போக்கில் மாறுவார்களென்று கூறினீரல்லவா?

கொத்தலாவல: ஆமாம். நான் அவ்வாறு நடக்குமென நினைத்தேன்.

சித்திர புத்திரன்: அவ்வாறு நடைபெற்றதா?

கொத்தலாவல: இல்லை

சித்திர புத்திரன்: அவ்வாறு நடைபெற்றிருந்தால் அவர்களை இலங்கையில் வைத்துக் கொண்டிருப்பீர். அப்படித்தானே?

கொத்தலாவல: ஆமாம்

சித்திர புத்திரன்: அதாவது மலைநாட்டுத் தமிழர்கள்மீது கோபப்படுவதற்குக் காரணம் அவர்கள் தமிழர்களாக இருப்பது மாத்திரமல்ல, அவர்கள் சிங்களவர்களாகவோ பௌத்தர்களாகவோ வர விரும்பாமையினால் என்பதும் ஒரு காரணமாக இருந்தது என்பதை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா?

கொத்தலாவல: ஏற்றுக்கொள்கின்றேன்

சித்திர புத்திரன்: ஒரு மலைநாட்டு அப்பாவித் தமிழன் சிங்களவனிடம் அடிபடுகின்றானென்றால் அதற்கு நீரும் ஒரு மூலகாரணம் என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா?

கொத்தலாவல: (கண்ணீர் வடித்துக் கொண்டு) இப்பொழுதுதான் விளங்குகின்றது.

சித்திர புத்திரன்: என்ன விளங்குகின்றது?

கொத்தலாவல: நானும் மூல காரணமென்று.

சித்திர புத்திரன்: 1948 ஆகஸ்ட் மாதம் நிறைவேறிய குடியகழ்வுச் சட்ட விவாதத்தின் பொழுது எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் அவர்கள் பலவீனமான மக்கள் மீது இவர்கள் கைவைத்துள்ளனர் எனக் கூறியது நினைவிருக்கின்றதா?

கொத்தலாவல: ஆமாம்

சித்திர புத்திரன்: நீர் டீ. எஸ். சேனநாயக்காவின் கொள்கைமீதல்லவா இருந்திருக்கின்றீர்?

கொத்தலாவல: ஆமாம். எனினும் அவ்வளவு தீவிரமாக நான் இருக்கவில்லை. ஏனைய தமிழ்ப் பிரதேச மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டுமென எண்ணினேன்.

சித்திர புத்திரன்: என்ன செய்தீர்?

கொத்தலாவல: நான் யாழ்ப்பாணம் சென்றேன்.

சித்திர புத்திரன்: யாழ்ப்பாணம் சென்றீரா? அதனை விவரமாகக் கூறவும்.

கொத்தலாவல: நான் பிரதமராக இருக்கும் பொழுது இலங்கையில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருந்தது.

சித்திர புத்திரன்: ஆமாம். இனி.....

கொத்தலாவல: எனது முதலாவது யாழ்ப்பாண விஜயம் 1955ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. எனது தனிப்பட்ட நண்பனாக இருந்த கெயிட்ஸ் பாராளுமன்ற உறுப்பினர் அல்பிரட் எம். தம்பையா எனக்கு ஒரு கோலாகல மான வரவேற்பளித்தார். சப்ததீவுகளாகிய அப்பகுதி மிகவும் பின்தங்கிக் காணப்பட்டமையினால் அவர்களுக்குச் சில சேவைகள் செய்வதாக அறிவித் தேன். அப்பகுதி மக்கள் என்னை அத்தீவின் அரசனென்றே முடி சூட்டினர்.

அதன்பின் மிகவும் உற்சாகமாக யாழ்ப்பாணத்திற்கு வந்தேன். அங்கும் தமிழ் மக்களால் பிரமாண்டமான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது. அங்கு எல்லாத் தமிழ் மக்கள் மனதிலும் மிகவும் குழப்பமாக இருந்த பாஷைப் பிரச்சினை பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டன. அங்கு நான் தமிழ் மக்களுக்கு ஒரு வாக்குறுதி அளித்தேன். நாடு முழுதும் தமிழும் சிங்களமும் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையிலிருந்தும் ஒருக்காலும் எனது கட்சிமாறாது என வாக்குறுதி அளித்தேன். தேவைப்பட்டால் இதற்கான சட்டங்களை இயற்றத் தயார் என்றும் கூறினேன். அதுமட்டுல்ல இலங்கையில் அரசியல் சட்டத்தில் அதனைச் சேர்த்துக் கொள்வேன் எனவும் கூறினேன்.

சித்திர புத்திரன்: அதனைத் தொடர்ந்து என்ன நடைபெற்றது?

கொத்தலாவல: என்ன நடைபெற்றதா? எல்லாம் தலைகீழாகிவிட்டது.

சித்திர புத்திரன்: கூறுங்கள் பார்க்கலாம்.

கொத்தலாவல: இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்க முன்பு அரசாங்க சபை இருந்த காலத்திலேயே 1944ம் ஆண்டு மே மாதம் ஜே. ஆர்.ஜயவர்த்தனா, டட்லி சேனநாயக்காவோடு சேர்ந்து கொண்டு சிங்களம் மட்டும் இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டு வந்தாரல்லவா? டீ.எஸ். சேனநாயக்கா அவர்களும் இதற்கு ஆதரவாக இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிக்கு ஆதரவாகப் பேசிவிட்டுக் கொழும்புக்கு வந்ததும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா உட்பட ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் எல்லோரும் என்னோடு கொதித்தெழுந்தனர். அவர்கள் என்னிடம் இதனைப்பற்றி விளக்கங்களைக் கேட்டிருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. நான் அவர்களால் நையப்புடைக்கப்பட்டதோடு நையாண்டியும் செய்யப்பட்டேன்.

சித்திர புத்திரன்: பிறகு என்ன நடைபெற்றது? தொடரும்.....

உங்கள் பிரயாணச் சீட்டுகளை குறைந்த விலையிலும் சிறந்த சேவையுடனும் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

Colombo	$1275.00	London	$499.00
India	$1499.00	Paris	$599.00
Singapore	$1299.00	Frankfurt	$629.00
		Zurich	$739.00
Colombo to Toronto		Amsterdam	$629.00
one way	$998.00	Vancouver	$289.00
		Edmonton	$259.00
		Montreal	$159.00
		New York	$289.00

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

2555 Eglinton Ave. E, Suite 103, Scarborough, ON. M1K 5J1

Tel: 416-264-2193

Cisco Training

CISCO SYSTEMS

We Produced **17 CCIEs' IN TEN MONTHS**

CCNA	$399.	MCSE 2000	$2100
CCNP - Module	$599.	UNIX - SOLARIS	$499.
CISCO PIX Security	$699.	CHECK POINT	$499.
CISCO VPN Security	$699.	MCSE 2000- PROFESSIONAL	$399.
CISCO MPLS	$699.	MCSE 2000- SERVER	$399.
CCIE Theory	$799.	SQL ADMINSTRATION	$399.
VOICE OVER IP	$799.	LINUX	$399.

FREE CCNA or MCP FOR EI RECIPIENTS

The courses are designed by:

A. HARITH K.
MS Certified Trainer
B.Sc. Eng., MIBM, CNE, MCSE, MCT, CCNP, CCDP,
Cisco Security Specialist,
CCIE #8661

Visit Our Lab.....

- ISDN lines, ADSL Line & Frame Relay Circuit
- 60 Cisco Routers- 7500, 4500, 4000, 3600, & 2500
- Catalyst 5500, 5000, 3920 & 1900 Switches

WinNET SYSTEMS
HI-TECH TRAINING & CONSULTING

MISSISSAUGA
905-949-TEST

TORONTO
1200 Eglinton Ave. East, Suite 100, Toronto,
(Don Mills & Eglinton)

SCARBOROUGH
416-299-TEST

Tel: 416-447-TEST (8378)

1-877 3-WINNET **www.winnetsystems.com** email:teachme@winnetsystems.com

UTHAYAN WEB:
www.uthayan.ca

உதயன்

UTHAYAN

தித்திக்கும் தமிழ் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

(416) 752-1524

(416) 752-6703

உதயம்: 343 | Chief Editor: R. N. Logendralingam | 08.11.2002 FRIDAY

தலைவர் பிரபாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுமா?

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சமாதானப்பேச்சுவார்த்தை இடம் பெற்று வரும் இவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு சமாதான பேச்சு வார்த்தைகளை பாதிக்கவில்லையென்றும் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும்கொழும்பி நீதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகள் சிலவற்றில் இத்தகைய சமாதான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட சமயங்களில் யுத்தகால குற்றச்சாட்டுக்களுக்கு பொது மன்னிப்புகள் வழங்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அவ் அதிகாரிகள் தலைவர் பிரபாகரன் விடயத்திலும் இது அமுல்படுத்தப்படக் கூடிய சாத்தியம் இருப்பதாக தெரிவித்துள்ளனர். சமாதான பேச்சு வார்த்தைகளின் பிந்திய நிலைகளில் புலிகளின் யுத்தகால குற்றங்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஆராயப்படும் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கு நம்பிக்கையான இடம்
ME MIDLAND ENTERPRISES INC.
IMPORT & DOMESTIC AUTO PARTS
Tel: 416-446-0249 cell: 647-280-3493
416-446-7632 Fax: 416-446-0827
1530 Warden Ave., Scarborough, Ont. M1r 2S8